# மயிலை அருள்மிகு கபாலீசுவரர் ஆலயம் தலவரலாறு



# அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில்

**மயிலாப்பூர், சென்னை-600 004.**


**Dr. நல்லி N. குப்புசாமி செட்டியார்,**
*அறங்காவலர் குழுத்தலைவர்*

**ப. ராஜா,** B.Sc, B.L.,
*துணை ஆணையர்/நிர்வாக அதிகாரி*

**K. R. V. ரமணி**

**A. N. ஸ்ரீனிவாசராவ்,** B E. (Elec.)
*குழமணிப்பாக்கம்*

**செல்வ ஏகாம்பர முதலியார்**
*அறங்காவலர்கள்*

# மயிலை அருள்மிகு
# கபாலீசுவரர் ஆலயம்
# தலவரலாறு

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை வெளியீடு
தமிழ்நாடு அரசு

©
தமிழ்நாடு அரசு
1993

முதற்பதிப்பு-1993

**விலை :**
ரூ. **50-00**

முகப்பு அட்டை :
அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் -இராஜகோபுரம்

பின்அட்டை :
அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில்-திருக்குளம்

அச்சிட்டோர் :
*அரசு மைய அச்சகம், சென்னை-79.*

## நன்றியுரை

மயிலை அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் தல வரலாற்று நூலைத் தமிழில் வெளியிடும் முதல் முயற்சியில் ஊக்கப்படுத்திய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியை நான் முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய வழிகாட்டுதலைத் துணைக்கொண்டு தமிழகத்தின் சிறப்புமிக்க திருக்கோயில்களின் தல வரலாற்று நூல்களை இந்நூலைப்போலவே தொடர்ச்சியாக வெளியிடவும் விருப்பம் கொண்டுள்ளேன்.

இந்நூலை வெளியிடுவதற்கு மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. மு. தென்னவன் அவர்களும், மாண்புமிகு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை அமைச்சர் திரு. T.V. நடேசன் பால்ராஜ் அவர்களும் நல்கிய ஒத்துழைப்பிற்கு என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூல் வெளியீட்டில் அதிக ஆர்வம் கொண்டு என்னை ஊக்கப்படுத்திய மதிப்பிற்குரிய தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திருமிகு டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப. அவர்களுக்கும், அதுபோலவே இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் செயலாளர் திருமிகு பி.வி. ராஜாராமன், இ.ஆ.ப. அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ள நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன்.

அருள்மிகு கபாலீசுவரர் ஆலய தல வரலாற்று நூலின் ஆசிரியர், தமிழ்ப்பேராசிரியர் டாக்டர் சு. இராஜசேகரன் அவர்களுக்கும், இந்நூலில் இடம் பெற்றுள்ள "சைவ நாயன்மார் சரிதம்," நூலின் ஆசிரியர், அறநிலையத்துறை வெளியீடான "திருக்கோயில்" இதழின் முன்னாள் மறைந்த ஆசிரியர் தமிழறிஞர் புலவரேறு ந.ரா. முருகவேள் அவர்களுக்கும் என் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலில் இடம் பெற்றுள்ள வண்ணப் புகைப்படங்களை ஸ்கேன் எடுத்து அச்சிட்டு லேமினேசன் செய்வதற்கான செலவினை ஏற்றுக் கொண்டமைக்காக அருள்மிகு கபாலீசுவசரர் ஆலய அறங்காவலர் டாக்டர் நல்லி குப்புசாமி அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை அலுவலர்கள், மற்றும் செய்தி, சுற்றுலாத்துறை அலுவலர்கள், குறிப்பாக இந்நூலினைக் குறுகிய காலத்தில் அச்சிட்டு வெளியிட உதவிய எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநர் திரு. நா. ச. பழநியப்பன், இ.ஆ.ப. மற்றும் அவரது குழுவினர் அனைவருக்கும் நான் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நூலினை மிக நல்ல முறையில் அச்சிட்டமைக்காக அரசினர் அச்சக அலுவலர்கள் மற்றும் தொழில் நுட்பப் பணியாளர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**சி. கே. கரியாலி, இ.ஆ.ப.**
*செயலாளர்,*
*செய்தி மக்கள் தொடர்புத்துறை மற்றும்*
*சுற்றுலாத்துறை, தமிழ்நாடு அரசு.*
*ஆணையாளர் (கூடுதல் பொறுப்பு)*
*இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,*

நன்றியுரையின் ஆங்கில அசலினை தமிழாக்கம் செய்தவர்—

கவிஞர் **இளந்தேவன்**
செய்தி, மக்கள் தொடர்பு அலுவலர், தமிழரசு,
சென்னை-600 002.

# பொருளடக்கம்

பக்கங்கள்


மயிலை கபாலீஸ்வரர் திருக்கோவில் (முன்னுரை)
-சி. கே. கரியாலி இ.ஆ.ப. 1-7

திருமயிலை கபாலீச்சரம் (நூல்)
-டாக்டர் சு. இராஜசேகரன் 8-124

சைவ நாயன்மார் சரிதக் குறிப்புகள்
-புலவரேறு ந. ரா. முருகவேள் 125-156

ௐ

சிவ சிவ



மயில் வடிவில் உமையாம்பிகை அருள்மிகு கபாலீசுவரரை
வழிபடும் திருக்காட்சி



அருள்மிகு கபாலீசுவரர்

# மயிலை கபாலீஸ்வரர் திருக்கோவில்

சி. கே. கரியாலி, இ.ஆ.ப.

சென்னை நகரின் ஆத்மாவாகவும் தமிழகத்தின் இதயமாகவும் திகழ்வது பழம்பெரும் நகரமாகிய மயிலாப்பூர். 'சென்னை தோன்றுவதற்குப் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பாகவே மயிலாப்பூர் இருந்துள்ளது.

இந்த நகரின் தொன்மையான சமஸ்கிருதப் பெயர் மயூரபுரி என்பதாகும். இதுவே தமிழில் மயிலாப்பூர் என்று பொருத்தமாக மருவியுள்ளது. பார்வதி அன்னை மயூர வடிவம் அல்லது மயில் வடிவம் எடுத்து இந்தப் புண்ணிய தலத்தில் சிவபெருமானை வழிபட்டதாகச் சொல்லப்படுகிறது.

சைவசமயத்தைச் சேர்ந்த ஞானக்கவிஞர்களால் கபாலீஸ்வரர் திருக்கோவிலின் இறைவன் புகழ்ந்து பாடப்பட்டுள்ளார். இந்தத் தெய்வக் கவிஞர்களுக்கு நாயன்மார்கள் அல்லது ஞானிகள் (சமஸ்கிருதத்தில் ஞானி என்பதற்கு அனைத்தும் அறிந்தவர் என்பது பொருள்) என்று பெயர். அவர்களால் பாடப்பட்ட தெய்வீகத் திருப்பாடல்களுக்குத் தேவாரம் என்று பெயர். இவை வடமொழியில் தேவ ஆராதனம் (இறைவனை நோக்கிப் பாடிய பக்திப்பாடல்கள்) எனப் பொருள்படும்.

எல்லாச் சைவக் கோயில்களிலும் காலையிலும், மாலையிலும் தேவாரப் பாடல்கள் ஓதப்படுகின்றன. திருக்கோயில் வழிபாட்டிலும் சடங்குகளிலும் இவற்றுக்குச் சிறப்பான ஓர் இடம் உண்டு! வேத மந்திரங்கள் ஓதி முடிக்கப்பட்டவுடன் இந்தப் பாடல்கள் ஓதப்படும். அண்மையில் பல்லாண்டுகளாக

நடைபெற்று வந்த கருத்து முரண்பாடுகளுக்குப் பிறகு தேவாரம் பாடுவதையும் சங்கீத நாடக அகடமி ஒரு கலை வடிவமாக ஏற்றுக் கொண்டுள்ளது. தேவாரம் ஓதுவதற்கான முதல் சங்கீத நாடக அகடமி விருது அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில் ஓதுவார் மூர்த்திகளாகிய திரு. லால்குடி சுவாமிநாதன் அவர்களுக்கு, தேவாரப் பாடற்கலைக்காக வழங்கப்பட்டுள்ளது.

## அறுபத்து மூவர் திருவிழா:

தமிழகத்தின் ஞானக் கவிஞர்களாகிய இந்தப் பெருமக்கள் தமிழ் இலக்கியத்தை வளப்படுத்துவதன் மூலமாகத் தமிழுக்கும், இறைவனைப் பற்றிய நினைவைப் பக்தர்கள் உள்ளத்தில் தொடர்ந்து வளர்ப்பதன் மூலம் பக்தி இயக்கத்திற்கும் தனிப்பெரும் தொண்டாற்றியிருக்கிறார்கள். இதனால் கபாலீஸ்வரர் திருக்கோயிலின் மிக முக்கியமான விழாவாக அறுபத்து மூவர் விழா கொண்டாடப்படுகிறது. பங்குனித் திருவிழாவில் 8-ஆம் நாள் விழாவாக இது அமைகிறது. இந்த விழாவின் சிறப்பம்சம் மிக நீளமான ஊர்வலமாகும். சிவபெருமான் சூலம் ஏந்தி வலப்புறத்தில் உடன்பிரியா நாயகியாகிய அம்பாளும், இடப்புறத்தில் வள்ளி தெய்வானையுடன் கூடிய அருமைப் புதல்வன் சிங்காரவேலனும் வீற்றிருக்கப் பவனி வருகிறார். அவரைத் தொடர்ந்து விநாயகர், சண்டிகேஸ்வரர் ஆகிய தெய்வங்களும் பவனி வருகின்றனர். அவர்களுக்குப் பிறகு ஒவ்வொரு பல்லக்கிலும் நான்கு பேராக ஞானக்கவிஞர்களாகிய அறுபத்து மூவரும், பல்வேறு பல்லக்குகளில் பக்திப் பெருக்கோடு பின் தொடர்கிறார்கள். பங்குனித் திருவிழாவின் எட்டாம் நாளன்று பிற்பகல் 3 மணியளவில் தொடங்கி, மயிலாப்பூர் தெருக்களில் இந்தப் பவனி நடைபெறுகிறது.

இறவாப் புகழ் படைத்த ஞானியருக்கு பக்தர்கள் செலுத்தும் தனிச் சிறப்புள்ள மரியாதை இதுவாகும். இவர்கள் பாடியருளிய பாடல்கள் மூலமாக பக்தர்கள் இறைவனுக்கு நெருக்கமாக முடிகிறது. எனவே இந்த விழா மூலமாக தங்கள் நன்றியை அவர்கள் வெளிப்படுத்துகின்றார்கள்.

அத்வைத சித்தாந்தத்தின்படி சிவனுக்கும் ஞானியருக்கும் பேதம் என்பது இல்லை. எனவே சிவபெருமானின் பல்வேறு வடிவங்களாகவே நாயன்மார்களைக் கருதலாம். இந்த வகையிலும் அவர்களுக்குச் செய்யப்படும் வழிபாடு பொருத்தமுள்ளதாகும்.

## திருக்கோயில் தேர்த்திருவிழா:

அறுபத்து மூவர் விழாவிற்கு முதல் நாள் அதாவது பங்குனிப் பெருவிழாவின் 7-ஆம் நாளில் இந்த ஆலயத்தின் தேர்த்திருவிழா நடைபெறுகிறது.

தேர்த்திருவிழா என்பது ஒரு தனிச் சிறப்புள்ள நிகழ்ச்சியாகும். இறைவன், ஒரு தங்கவில் தாங்கி, மணிகள் பதிக்கப்பட்ட அம்பையேந்தி, வேடன் வடிவில், அலங்கரிக்கப்பட்ட பெருந்தேரில் ஏறித் தீமையை மாய்க்க வருகிறார்.

தேர், வாழ்க்கை என்னும் யாத்திரைய்ய பிரதிபலிக்கிறது. பூமிதேவியின் மீதுதான் தேர் யாத்திரையும் வாழ்க்கை யாத்திரையும் நடைபெறுகின்றன. தேர்ச்சக்கரங்களுக்கு முன் வீசப்படும் உப்பு ‘வாழ்க்கையின் உப்பு’ ஆகும். இலட்சக்கணக்கான மக்கள் நான்கு மாடவீதிகளிலும் தேர் இழுப்பதற்காகவும் ‘தேவ வேடனின்’ தரிசனம் பெறுவதற்காகவும் பெருந்திரளாகக் கூடி நிற்கிறார்கள்.

தேர் இழுப்பது என்பது ஒரு மாபெரும் சமூக ஆன்மீக அனுபவமாகும். இது எல்லாவற்றையும் சமப்படுத்தும் பேராற்றல் படைத்தது. தேர் இழுக்கும் போது செல்வர் ஆனாலும், ஏழை ஆனாலும், உயர்ந்தவரானாலும், தாழ்ந்தவரானாலும், வலியவரானாலும், மெலியவரானாலும் இறைவனுக்கு முன் எல்லோரும் சமம் என்னும் தத்துவத்தின் குறியீடாக இது விளங்குகிறது. மேலும் மண்ணில் நடைபெறும் மனித வாழ்வு எல்லோருடைய கூட்டு முயற்சியும் ஆகும் என்பதன் விளக்கமாகவும் இது அமைகிறது. வடம் தொட்டு இழுக்கும் ஒவ்வொரு முறையும் `கபாலி', `கபாலி' என்று பக்தர்கள் அழைக்கும் பரவசக் குரலைக் கேட்கலாம்.

ஒவ்வொரு சமயம் இறைவன் திருவிளையாடல் புரிவதுண்டு. திடீரென்று தேர் நிற்கிறது. நகர மறுக்கிறது. தேர் செல்லும் பாதையில் எதிர்பாராத தடைகளை உண்டாக்கி, இறைவன் பக்தர்களைச் சோதிக்கிறான். கற்களும், தரையில் குண்டு குழிகளும் திடீரெனக் காட்சியளிக்கின்றன. வடம் அறுந்து விடுகிறது. சக்கரங்கள் கழன்று விடுகின்றன; அல்லது தேரின் அலங்காரப் பொருட்கள் விழுந்து விடுவது போல் தொங்குகின்றன. பல்வேறு வழிகளில் இறைவன் இதை ஏற்படுத்துகிறான். ரத யாத்திரையை முறையாக நிறைவு செய்வதும், குறிப்பிட்ட காலத்தில் திருக்கோயிலுக்குத் தேரைக் கொண்டு வருவதும் இறைவன் பக்தர்க்கு வைக்கும் சோதனையாகும். தெய்வ மாதாவாகிய அன்னையின் அருளோடு இது நிறைவேற்றப்படுகிறது. அம்பாள் இறைவன் தன் இருப்பிடம் வந்து சேரும்வரை பிரார்த்தித்துக் கொண்டே இருக்கிறாள். அம்பாளின் அருளாசியோடு ஒரு குறையுமில்லாமல் தேர்த்திருவிழா இனிது நிறைவடைகிறது.

## தெய்வத் திருமணம்:

அறுபத்து மூவர் விழாவிற்கு அடுத்த நாள் சிவபெருமானுக்கும் அன்னை பார்வதிக்கும் பின் மாலைப் பொழுதில் திருமணம் நடக்கிறது. (மங்கல நாண் அணிவித்தல் போன்ற) சகலவிதமான சடங்குகளோடு திருமணம் நிகழ்த்தப்படுகிறது.

## இந்திய மரபில் திருமணம்:

இந்து புராணங்களும். இந்து மரபும் திருமணத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கின்றன. திருமணமே ஒரு மனிதனை முழு மனிதனாக்குகிறது. கடவுளையும் முழுமையாக்குவது திருமணமே. இல்லற அனுபவம் என்பது இல்லாமல் முழுமையோ, ஞானமோ பெற இயலாது. எந்த முயற்சியிலும் சரிபாதி பங்குதாரராக ஒரு பெண் இல்லாவிட்டால், எதையும் சாதிக்க இயலாது என்பதையே இது சுட்டிக்காட்டுகிறது.

சிவபெருமானின் அர்த்த நாரீஸ்வரர் வடிவம், ஆண்-பெண் கூறுகள், ஆற்றல்கள் ஆகியவற்றின் இணைப்பே இறைவன் என்பதை எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

ஒவ்வொரு தெய்வமும் தன் துணைவியோடு விளங்குகிறது. சிவபெருமானுக்கு ஒரு சந்நிதி அமையுமானால் அங்கு அம்பாளுக்கும் ஒரு சந்நிதி அமையும். இந்து சடங்குகளை ஒரு பிரம்மச்சாரியோ, மனைவியை இழந்தவரோ செய்யக்கூடாது. திருமணமான ஒரு மனிதன், தன் மனைவியோடு தான் இவற்றைச் செய்ய வேண்டும். இல்லத்தலைவி இல்லாமல் எந்த ஹோமமும் செய்யக் கூடாது. எந்த தர்மமும், தானமும் கன்னியாதானம் கூட தம்பதியரால்தான் செய்யப்பட வேண்டுமேயொழிய மனைவியை இழந்த ஒருவரால் செய்யப்படக் கூடாது. திருமணமான பிறகுதான் ஒருவர் சமயகுரு ஆக முடியும்.

மேற்குறித்தவற்றின் அடிப்படையில், மயிலாப்பூரில் நடைபெறும் தெய்வத் திருமணம் மிக முக்கியமான நிகழ்வாக அமைந்து ஆயிரக்கணக்கானவரால் கண்டு களிக்கப்படுகிறது. அவர்களைப் பொறுத்தவரை இறைவனுக்கும் இறைவிக்கும் ஏற்படும் திருமண இன்பம் என்பது போற்றத்தக்க-நினைவு கூரத்தக்க ஓர் உண்மையான நிகழ்வாகும்.

## இறைவனின் பல்வேறு தோற்றங்கள்:

மயிலாப்பூர் மக்களைப் பொறுத்தவரை இறைவன் அவர்களுக்கே உரியவன். குருவாக, வழிகாட்டியாக, பாதுகாவலராக, ஆசிரியராக, நண்பராக, ஏன், ஒரு குழந்தையாகக் கூட பல்வேறு தோற்றங்களில் காட்சியளிக்கிறான்.

மயிலாப்பூரில் தனியாக வாழ்ந்து கொண்டு, டில்லியில் வசதியாக வாழும் தன் குடும்பத்தாரோடு கூட சென்று வாழ மறுக்கும் ஒரு 80 வயது மூதாட்டி இவ்வாறு கூறுகிறார்:-

"நான் இந்த இடத்தை விட்டுப் போய்விட்டால், கபாலீஸ்வரரும், கற்பகாம்பாளும் அநாதைகளாக ஆகி விடுவார்களே!"

அந்த மூதாட்டியைப் பொறுத்தவரை இறைவன் ஒரு சின்னஞ்சிறு குழந்தை; அவருடைய அன்பும் பரிவும் தினசரி கண்காணிப்பும் தேவைப்படும் ஒரு சிறு குழந்தை!

மயிலாப்பூரில் கபாலீஸ்வரர் திருக்கோயிலின் வாயிலுக்கு அருகேதான் இயேசுநாதரின் சீடராகிய தாமஸ் முனிவர், கி.பி. முதலாம் நூற்றாண்டில், இயேசுவின் நற்செய்தியைத் தாங்கி வந்து போதித்தார் என்பது நினைவு கூரத்தக்கது. நீண்ட காலமாக தமிழக கத்தோலிக்க சர்ச்சின் தலைவர் `மயிலாப்பூர்' 'ஆர்ச்-பிஷப்' என்றே அழைக்கப்பட்டு வந்தார். தற்போதுகூட அவர் `மயிலாப்பூர் மற்றும் சென்னை ஆர்ச்-பிஷப்' என்றே அழைக்கப் படுகிறார்.

மயிலாப்பூர், தமிழகத்தின் தனிப்பெரும் மாமுனிவராகிய திருவள்ளுவர் பிறந்த இடமாகும். தெய்வத்தன்மையுள்ள இரண்டடிப் பாடல்களால் அவர் திருக்குறளைப் படைத்துத் தந்தார். திருக்குறள் சமயச் சார்பற்ற பெருநூல் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இத்தகைய நூலைப்படைக்க இறைவனே ஊக்கியிருக்க வேண்டும் என்பதை யார்தான் மறுக்க முடியும்!

## திருக்கோயில் திருக்குளம் :

இந்தக் கோவிலின் திருக்குளத்தைப் பற்றி ஒரு சுவையான செய்தி உண்டு. தொடக்கத்தில் கோவிலுக்குத் திருக்குளம் ஏதும் இல்லை. தற்போது குளமுள்ள இடம் ஆர்க்காடு நவாப் ஆகிய நவாப் முகம்மது அலிக்குச் சொந்தமாய் இருந்தது. அர்ச்சகர்களும், அன்பர்களும் அடங்கிய குழுவொன்று நவாபைச் சந்தித்து, ஆலயத்துக்குத் திருக்குளம் பெரிதும் அவசியம் என்று எடுத்துக்கூறியது. தாராள சிந்தையுள்ள ஆர்க்காடு நவாப் இந்தக் குளத்தை ஆலயத்திற்கு வழங்கினர்ர். இருந்தபோதிலும் அக்காலத்தில் ஷியா முஸ்லீம்கள் மொகரம் பண்டிகையின்போது டாசியாஸ் (பஞ்சாஸ்) என்னும் பொருட்களை அந்த குளத்தில் முழுக்காட்டி வந்தார்கள். `மொகரம் பண்டிகையின்போது ஷியா

முஸ்லீம்கள் குளத்தைத் தொடர்ந்து பயன்படுத்துவார்கள்' என்ற நிபந்தனையின் பேரில் குளம் கோவிலுக்கு வழங்கப்பட்டது. இந்த வழக்கம் இன்றும் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. காலகாலமாக ஆர்க்காடு நவாபின் வாரிசுகள் தங்கள் நல்லிணக்கத்தைக் கோயிலுக்குப் புலப்படுத்தி வந்துள்ளார்கள். தற்போது ஆர்க்காடு இளவரசர் பட்டத்திற்குரிய ஜனாப் முகம்மது அப்துல் அலி அவர்கள் தெப்பத்திருவிழாவின்போது திருக்கோவிலுக்கும், திருக்குளத்திற்கும் வருகை புரிந்து தெப்பத்தில் இறைவனைத் தரிசனம் செய்தார்கள். அவருக்கு ஆலயத்தின் மரியாதைகள் அளிக்கப்பட்டன.

மயிலாப்பூர் இறைவன் எங்கும் நிறைந்தவர். அனைவருக்கும் வாழ்வளிப்பவர். அவர் நிச்சயமாக எல்லோருக்கும் உரியவராவார்.

பேராசிரியர், டாக்டர் கூ. ராஜசேகரன், எம்.ஏ., பி.எச்.டி.

# 1. பண்டை மயிலையின் புகழ் பாடுவோம்

தமிழகத்தின் கடற்கரையோரமாக உள்ள ஊர்களில் பழமையும் பெருமையும் பொருந்திய ஊர் மயிலாப்பூராகும். வடக்கே திருவொற்றியூரும் தெற்கே திருவான்மியூரும் அணி செய்ய, சென்னை மாநகரின் நடுநாயகமாகத் திருமயிலை விளங்குகிறது.

தமிழ்நாட்டின் ஒரு பகுதியாகிய தொண்டை நாட்டில் பாடல் பெற்ற சிவத்தலங்கள் முப்பத்திரண்டு உள்ளன. அவற்றுள் ஒன்றாகத் திருமயிலை விளங்குகிறது. அழகிய திருக்கோயில், பெரிய திருக்குளம், அகலமான தேரோடும் மாட வீதிகள் முதலியவற்றை உடையதும் வேறு பல பெருமைகளை உடையதும் இந்நகரமேயாகும். ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியார் செயின்ட் ஜார்ஜ் கோட்டையைக் கட்டிய பிறகு அதனோடு சேர்ந்து பெரிய நகரமாகத் திருமயிலை உருவாயிற்று. பழங்காலத்தில் புகழ்பெற்ற துறைமுகமாகவும் திருமயிலை விளங்கியது.

## திருமயிலை - பெயர் விளக்கம்

தமிழ்நாட்டில் இறைவன் திருக்கோயில் உள்ள ஊர்களெல்லாம் திரு என்னும் அடைமொழியைப் பெற்றிருக்கின்றன. அதுபோலவே, திருக்கபாலீசுவரர் எழுந்தருளியிருக்கும் இடமாதலின் இத்தலம் திரு என்னும் அடைமொழியைப் பெற்றுத் திருமயிலை என்று ஆகியது.

மயிலாப்பூர் என்னும் பெயர்தான் மயிலை என மருவியது. மயில் ஆர்ப்பு ஊர் - மயில்கள் ஆரவாரம் செய்யும் ஊர் எனப் பொருள் வரும். மயிலை என்னும் மருஉச்சொல் திரு என்னும் வடமொழியைப் பெற்றுத் திருமயிலை என்று ஆகியது.

## திருமயிலையின் பெயர்கள் :

கி.பி. 119 -161 காலப் பகுதியில் வாழ்ந்த மேல்நாட்டுப் புவியியல் அறிஞர் தாலமி, தன்னுடைய புவியியல் நூலில் `மலியார்பா' (Maleiarpha) என்று குறிப்பிடுவது திருமயிலையைக் குறிக்கும் என்பர் வரலாற்று ஆராய்ச்சியாளர். கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் திருமழிசையாழ்வார், `மாமயிலை' என்னும் பெயரால் திருமயிலையைக் குறிப்பிடுகின்றார். கி.பி. ஏழாம் நூற்றாண்டில் இவ்வூர், `மயிலாப்பில், மயிலாப்பு' என்னும் பெயர்களால் வழங்கப்பட்டது என்பதை அப்பர் திருவாக்கால் அறியலாம். இக்காலத்திலேயே `மயிலை' எனவும் அழைக்கப்பட்டது என்பதைச் சம்பந்தர் பாடிய பூம்பாவைப் பதிகம் உணர்த்துகிறது. கி.பி. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருமங்கையாழ்வார், மயிலை, மாமயிலை என்றும். சுந்தரர் தொன்மயிலை என்றும் குறிப்பிடுகின்றார். கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் மயிலை, மயிலாபுரி என்னும் பெயர்களால் இவ்வூர் அழைக்கப்பட்டதை நந்திக்கலம்பகம் உணர்த்துகிறது. இக்காலத்தில் மயிலார்ப்பில் எனவும் இவ்வூர் அழைக்கப்பட்டதைப் பல்லவப் பரம்பரையின் இறுதிக் காலத்தில் வாழ்ந்த கம்பவர்மன் காலத்துக் கல்வெட்டு உணர்த்துகிறது. கி.பி. பதினோராம் நூற்றாண்டில் மயிலை என அழைக்கப்பட்டது என்பது திருத்தொண்டர் திருவந்தாதியால் அறியப்படுகிறது.

கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் மயிலை, மயிலாப்பில், திருமயிலாபுரி, திருமயிலை, தொல்மயிலாபுரி, மயிலாப்பூர் என்னும் பெயர்கள் இவ்வூருக்கு வழங்கின என்பது கல்வெட்டுக்களாலும், கலிங்கத்துப்பரணியாலும், பெரிய புராணத்தாலும் புலப்படுகிறது. கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்த வெனிசு வணிகர் மார்க்கோபோலோ, மயில்கள் நிறைந்த பகுதி என மயிலையைக் குறிப்பிடுகின்றார். கி.பி. பதினான்காம் நூற்றாண்டில் மயிலாப்பில் என்னும் வழக்கைத் தொல்காப்பியத்திற்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரை உணர்த்துகிறது. இந்த நூற்றாண்டிலே, ஜான் டி மரிக்நோலி (John De Marignoli)

என்னும் மேல்நாட்டு வழிப்போக்கர் மயிலையை, 'மைராபோலிஸ்' (Myropolis) என்று குறிப்பிடுகின்றார். கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டில் அருணகிரிநாதர் மயிலை என்றே குறிப்பிடுகின்றார். கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் டூரேட் பார்போஸா (Turate Barbasa) என்பவர் 'மைலாபூரா' (City of Mylapore) என்று குறிப்பிட்டு உள்ளார். போர்த்துக்கீசியர்கள் 'மெலியபூர்' (Meliyapur) என வழங்கினர். கி.பி. பதினேழாம் நூற்றாண்டில் மிலாப்பூர் (Milapur) என வழங்கப்பட்டது. மறைத்திரு ஆண்ட்ரியா லோபெஸ், சே.ச. (Fr. Antrea lopeys) உள்ளூர் மக்களால் சாந்தோம், மைலாப்பூர் (Mylapore) என குறிப்பிடப்படுகிறது என்று கூறியுள்ளார். இச்செய்திகள் 'Vestiges of Gold Madras' என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளன. வடமொழியில் உள்ள பிரம்மாண்ட புராணம் மயிலையை, மயூரபுரி, மயூரநகரி என்று குறிப்படுகின்றது. சென்னை வாழ் மக்கள் மயிலாப்பூர் (Mylapore) என அழைத்தனர். ஆங்கிலேயர், மைலாப்பூர் (Mylapore) என அழைத்தனர்.

## திருமயிலைக்கு வழங்கும் வேறு பெயர்கள் :

திருமயிலைக்குப் புன்னவனம், வேதநகர், சுக்கிரபுரி, பிரமபுரம், கந்தபுரி, கபாலீச்சரம், கபாலி மாநகர் என்னும் வேறு பெயர்களுமுண்டு.

## பெயர்க்காரணங்கள் :

திருமயிலைக்குரிய பெயர்க் காரணங்கள் பல. அவற்றுள் திருமயிலைத் தலபுராணத்தில் கூறப்படும் செய்தி வருமாறு:

ஒரு காலத்தில் சிவபெருமான் உமையம்மையாருடன் திருக்கைலாயத்தில் வீற்றிருந்தார். அப்போது அம்மையாரின் வேண்டுகோளுக்கிணங்க ஐந்தெழுத்தின் பெருமையையும் திருநீற்றின் மகிமையையும் பற்றிப் பெருமான் விளக்கம் செய்து கொண்டு இருக்கும்போது ஒரு மயில் தன் தோகையை

விரித்தாடியது. அதன் அழகை உற்று நோக்கிய அம்மையார் அதன் ஆட்டத்தில் தமது கவனத்தைச் செலுத்தினார். இதைப் பார்த்த சிவபெருமான் 'நீ பூதலத்தில் மயில் உருப் பெற்றிடுவாய்' என்பதாக ஆணை பிறப்பித்தார். இந்நிலைக்கு வருந்திய தேவியார், 'இதைத் தவிர்ப்பது எங்ஙனம் ?' எனக் குறையிரப்ப, இறைவன் 'புண்ணிய நாடாகிய தொண்டை நாட்டிற்குச் சென்று தவமியற்றுவாய்' என்பதாகக் கூறினார். அவ்வாறே அம்மையார் தொண்டை நாட்டில் இப்போது மயிலாப்பூராக அமைந்துள்ள பகுதியில் புன்னை மரத்தின் கீழ்ச் சிவலிங்கம் ஒன்றைத் தாபித்துப் பூசித்து வந்தார். அப்போது சிவபெருமான் தேவியின் முன் தோன்றி, 'மயிலாய் இருந்த பழி உன்னை விட்டகன்றது. கற்பகவல்லி என்பதான பெயர் உனக்காகுக!' என்பதான வரமும் தந்தனர். உமாதேவியாரும் பரமனாரை நோக்கி, 'அடியேன் இங்குத் தவம் செய்து உய்ந்தேன். இப்பெரும் பகுதிக்கு மயிலை என்னும் பெயர் ஓங்க வேண்டும். என்னுடன் தாங்கள் பிரியாது இங்கிருக்க வேண்டும். இங்கு வந்து வழிபடுபவர்களுக்கெல்லாம் தாங்கள் அருள்புரிய வேண்டும்' என வேண்டிக் கொண்டபடியால் மயிலை என்னும் பெயர் பெற்றது என்று திருமயிலைத் தலபுராணம் கூறுகின்றது.

> ***"புன்னாக வனத்து எழில்சேர் கயிலை மலையுமை***
> ***மயிலாய்ப் பூசை செய்யு***
> ***நன்னாமத்தான் மயிலையென விளங்கு மூதூர்"***

என்றும் மயிலைத் தலபுராணம் கூறுகின்றது.

மயிலாப்பு என்பதற்குப் பொருள் 'மயிலாதல்' என்பதாகும். உமை மயிலாக ஆகிய செயல் காரணமாகத்தான் 'மயிலாப்பு' என்னும் பெயர் பெற்றது என்பார் பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம். மயிலை என்னும் பழைய பெயரும் புரம் என்னும் வடமொழிச் சொல்லும் சேர்ந்து மயிலாப்பூர் என்றாகியது என்பர் சிலர். பழைய சைவ சமயப் புராணக் கதையை விரும்பாதவர்கள்தாம் மயில்களின் ஆரவாரத்தினால் மயிலாப்பூர் என்றாகியது என்பர் என்று பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம் கூறுகிறார்.

‘சென்னைத் திருமயிலையம்பதியின் முழுப்பெயர் மயில் ஆர்ப்பு ஊர் என்பது, இச் சொற்களைப் புணர்த்திக் கூறுங்கால் மயிலாப்பூர் ஆகும். மயிலார்ப்பூர் என்பது நாளடைவில் மயிலாப்பூர் என வழங்கப்பட்டு, அதன் பின் மயிலை என மருவி வழங்கலாயிற்று’ என்பர் பாலூர் கண்ணப்ப முதலியார்.

திருமயிலை வடமொழியிலும் `மயூர சப்தபட்டினம்’ என்று குறிக்கப்படுகிறது. தாலமி கூறும் `மலியார்பா’ என்பது மயிலார்ப்பு என்பதன் திரிபாக இருந்திருக்க வேண்டும். ஆகவே மயிலார்ப்பூர் என்பதே பழம் பெயராக இருந்திருக்க வேண்டும் என்பர்.

கி.பி. பதினேழாம் நூற்றாண்டில் மறைத்திரு. இப்போலிட்டோ தேசிதேரி சே.ச (Fr. Iffolito Desider, S.J.) அவர்கள் `மைலாப்பூர்’ (Mylapore) என்று குறிப்பிட்டு மயில்நகர் (Peacock City) என்று விளக்கம் தருகிறார். மிகப் பழங்காலத்தில் மயிலைப் பகுதியை ஆண்ட அரசர்களின் மரபுரிமைச் சின்னமாக (Coat of Arms) மயில் விளங்கியிருக்கும். ஆகவே, மயிலாப்பூர் என்னும் பெயர் பெற்றது என்று கூறுகிறார்.

மேற்கூறிய அனைத்தையும் தொகுத்துப் பார்க்கும்போது மயிலை என்னும் பெயர் வந்ததற்கு மூன்று காரணங்கள் கூறப்பெறுகின்றன. அவை, 1. புராணக் கதைகளால் அப்பெயர் பெற்றமை; 2. அப்பகுதியை ஆண்ட பழைய குலத்தவரின் மரபுரிமைச் சின்னமான மயில் ஊரின் பெயராக அமைந்தமை; 3. மயில்களின் ஆரவாரத்தினால் அப்பெயர் பெற்றமை ஆகியவையாகும்.

இவற்றுள் மூன்றாவது காரணமே பொருத்தமுடையதாகும். மயிலோடு தொடர்பு படுத்தி மயிலை பேசப்படுகிறது. தமிழ்நாட்டில் இதைப் போல, மயிலம், மயிலாடுதுறை என்னும் பெயர்களில் மயிலோடு தொடர்பு படுத்திப்பேசப்படும் ஊர்கள் உள்ளன.

ஆகவே, மயில்களின் ஆர்ப்பரிப்பினால் இத்தலம் ‘மயில் ஆர்ப்பு’ எனப் பெயர் பெற்றது என்று கூறலே பொருத்தமுடையதாகும். பின்னர் இப்பெயர், வழக்கில் ‘மயிலாப்பு’ என்றாகிறது. இதனை அப்பர் தேவாரத்தால்

அறியலாம். இப்பெயர்களே மருவி 'மயிலை' என்றாயிற்று என்பதைச் சம்பந்தர் வாக்கால் அறியலாம்.

ஆகவே, இன்று வழங்கும் பெயர் மயில் ஆர்ப்பு ஊர் என்னும் சொற்கள் புணர்ந்து மயிலாப்பூர் என்று ஆகிப் பின்னர் நாளடைவில் மயிலாப்பூர் என வழங்கப்பட்டது என்பதே பொருத்தமுடையதாகும்.

## இருப்பிடம்:

மிகப் பழங்காலத்தில் தொண்டை மண்டலத்து அருவா வடதலை நாட்டில், புலியூர்க் கோட்டத்துள் ஓர் ஊராகத் திருமயிலை குறிப்பிடப்படுகிறது. 13·20° வடக்கு நில நேர்க்கோட்டிலும், 80 61° கிழக்குநிலைக் கோட்டிலும் இவ்வூர் உள்ளது.

## எல்லைகள்:

முற்காலத்தில் மயிலைக்குக் கிழக்கு எல்லை வங்கக் கடல். மேற்கு எல்லை நுங்கம்பாக்கம், தெற்கு எல்லை அடையாறு, வடக்கில் திருவல்லிக்கேணியை உள்ளடக்கியிருந்தது. இக்காலத்தில் மயிலையின் எல்லைகளாக வடக்கில் டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலையும், தெற்கில் அடையாறும், கிழக்கில் கடலும், மேற்கில் டி.டி.கே. சாலையும் அமைந்துள்ளன.

## திருமயிலையின் தொன்மை:

திருமயிலை பற்றித் தமிழ், வடமொழி ஆகியவற்றில் எழுந்த தல புராணங்களினாலும், மரபு வழிச் செய்திகளாலும், இலக்கியங்களினாலும், வெளிநாட்டவர் மயிலையைக் குறிப்பிட்டுள்ள செய்திகளாலும், மயிலைப் பகுதியில் தோண்டி எடுக்கப்பட்ட தொல் பொருள்களினாலும், கல்வெட்டுகளினாலும் திருமயிலையின் தொன்மை நன்கு விளங்கும்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே திருமயிலை, சிறந்த துறைமுக நகரமாக விளங்கியிருக்கிறது. ஆனால், திருஞானசம்பந்தர் காலத்திலிருந்து தான் நமக்கு மயிலையைப் பற்றிய ஆதாரங்கள் கிடைக்கின்றன.

## மரபு வழிச் செய்திகள்:

### திருவள்ளுவர் வரலாறு:

திருவள்ளுவர் பிறந்த இடம் திருமயிலை என்னும் செய்தி, காலத்தால் மிகவும் பிற்பட்ட நூல்களான கபிலகரவல், திருவள்ளுவ மாலை ஆகியவற்றில் காணப்படுகிறது. அவர் பிறந்த குடிசை, திருமயிலை முண்டகக்கண்ணியம்மன் கோயில் தெருவில் வடகோடியில் இப்போதுள்ள திருவள்ளுவர் கோயிலில் இருக்கும் ஏகாம்பரர் சந்நிதி என்பர். அவர் விளையாடிய இடத்தில் இருந்த இலுப்பை மரம் இப்போதும் இருக்கிறது என்பர். அவர் மனைவி பெயர் வாசுகி அம்மையார். திருவள்ளுவர் நெசவுத் தொழில் செய்து வந்தார். ஏலேல சிங்கர் என்னும் கப்பல் வணிகர் அவருடைய சீடர் என்று திருவள்ளுவரைப் பற்றிய கதை வழங்கி வருகிறது.

### அங்கம்பூம்பாவை வரலாறு:

திருமயிலையில் சிவநேசச் செட்டியார் என்னும் செல்வ வணிகர் வாழ்ந்து வந்தார். அவருடைய மகள் பெயர் பூம்பாவை. அவர் ஒரு நாள் பூக்கொய்யும்போது பூநாகம் கடித்து இறந்தாள். சிவநேசர் பூம்பாவையைச் சுட்டு அவளுடைய எலும்பையும் சாம்பலையும் திரட்டி ஒரு குடத்தில் அடைத்து அதனைக் கன்னிமாடத்தில் வைத்திருந்தார். சம்பந்தர் திருவொற்றியூர் வந்திருந்தார். சிவநேசர் அங்கு சென்று நடந்தது உரைத்தார். அவருடைய வேண்டுகோளுக்கு இணங்கி சம்பந்தர் மயிலை வந்தார். எலும்புக் குடத்தைக் கபாலிப் பெருமான் முன்னிலையில் வைத்து திருவருளை நினைத்துப் பதிகம் பாடினார். பாடி முடித்தவுடன் பூம்பாவை

உயிர் பெற்றெழுந்தாள். சிவநேசர் தம் மகளை மணந்து கொள்ளுமாறு சம்பந்தரை வேண்டினார். ஆனால், சம்பந்தர், தாம் அவளுக்கு மறு பிறவி தந்தமையால் தந்தை முறை என்று கூறி மறுத்தார். சிவநேசர் அவரை வேறொருவருக்குத் திருமணம் செய்வதில்லையெனக் கன்னிமாடத்தே இருத்தி வைத்தார். பூம்பாவை சிவத்தியானத்திலிருந்து முக்தி அடைந்தார் என்ற கதை வழங்கி வருகிறது.

## வாயிலார் நாயனார் வரலாறு :

திருமயிலைப் பதியில் வேளாளர் குலத்தில் பிறந்து இல்லறத்து இருந்து சிவமூர்த்திக்குத் தன் மனத்தில் திருக்கோயில் முதலியன சமைத்துத் திருமஞ்சன தூப தீப நிவேதனம் செய்து, பேரானந்தம் அடைந்து, நெடுநாள் வாழ்ந்திருந்து மார்கழி மாதம் இரேவதி நாள் இறைவன் திருவடி அடைந்தார். இவ்வாறு வாயிலார் பற்றிய வரலாறு வழங்குகிறது.

## இலக்கியங்களால் அறியப் பெறும் தொன்மை :

சங்க இலக்கியங்களில் மயிலையைப் பற்றிய குறிப்புகள் இல்லை. பல்லவர் காலத்து பக்தி இலக்கியங்களிலேதான் முதன் முதலாக மயிலையைப் பற்றிய குறிப்புகள் வருகின்றன.

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் திருமழிசை ஆழ்வார் `நீளோதம் வந்தலைக்கும் மாமயிலை மாவல்லிக்கேணி' என்று பாடுகிறார். இதனால் அவர் காலத்தில் மயிலையின் நடுப்பகுதியாகத் திருவல்லிக்கேணி இருந்தது அறியப்படுகிறது.

கி.பி. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஐயடிகள்காடவர் கோன் என்னும் பல்லவ அரசர் தாம் பாடிய சிவத்தளி வெண்பாவில், `மயிலைத் திருப்புன்னையங்கானல் சிந்தியா யாகில் இருப்பின்னையங்காந் திளைத்து' என்று மயிலைக் கபாலீசுவரர் கோயிலைக் குறிப்படுகிறார். இவரே, மூன்றாம் சிம்மவர்மன் என்று ஆராய்ச்சியாளர் குறிப்பிடுகின்றனர்.

தேவாரம் பாடிய மூவரும் தங்கள் பாடல்களில் மயிலையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். நந்திக் கலம்பகமும், நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியும், கலிங்கத்துப்பரணியும், பெரியபுராணமும், திருப்புகழும் மயிலையின் பெரும் புகழினைச் சிறப்பித்துப் பாடுகின்றன.

## தொல் பொருள்கள் :

திருமயிலை, சாந்தோம் ஆகிய பகுதிகளில் பல்வேறு இடங்களில் கண்டெடுக்கப்பெற்ற தொல்பொருள்களும் மயிலையின் தொன்மையை உணர்த்துகின்றன. அவை சாந்தோம் பிஷப் இல்லத்து அருங்காட்சியகத்தில் இருக்கின்றன.

உடைந்த கல்தூண் ஒன்று செயிண்ட் தாமஸ் ஆலயத்துக்குப் பக்கத்திலுள்ள ஆலயத்திற்குச் சொந்தமான தென்னந்தோப்பில் கண்டெடுக்கப்பட்டது. கல்தூணின் ஒரு பகுதியில் மூன்று புறமும் தமிழ்க் கல்வெட்டுகள் உள்ளன. அதன் காலம் முதல் இராஜராஜனுடைய காலமாகும். சாந்தோமில் ஒரு தோட்டத்திலிருந்து முருகனோடு மயில், நாகம் கூடிய கற்சிலை கண்டெடுக்கப்பட்டது.

1923 ஜனவரி 25 முதல் பிப்ரவரி 10 முடிய செயிண்ட் தாமஸ் பேராலயத்தைச் சுற்றிலும் தொல்பொருள் ஆய்வுத் துறையினாரால் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. பிறகு அந்த ஆராய்ச்சி நிறுத்தப்பட்டு விட்டது. அகழ்வாராய்ச்சி நடந்த போது பூமியில் புதைந்திருந்த கிழக்குப் பக்கத் திருச்சுவரில் மயிலாப்பூர் ஈச்சரமுடையார் கூத்தாடுந் தேவர்க்கு ஒரு சந்தி விளக்கு எரிய வைப்பதற்காக இறையிலி நிலம் அளித்ததைக் குறிக்கும் கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டது.

இச்செய்திகள் Rev. H Hosten என்பவர் எழுதியுள்ள "Antiquities from Santhome and Mylapure" என்னும் நூலில் உள்ளன.

1974ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் மயிலையிலுள்ள திருவள்ளுவர் கோயிலைப் புதுப்பிக்கும்போது அடிக்கல் வைப்பதற்காகத் தோண்டும்போது பூமிக்குக் கீழே நான்கடி ஆழத்தில் திருவள்ளுவருடைய கருங்கல் சிலை கிடைத்தது. ஐந்நூறு ஆண்டுகளுக்கு முந்தியதாகக் கருதப்படும் இச்சிலை, தலை, இடக்கை உடைந்து தனியாக இருந்த நிலையில் கண்டு எடுக்கப்பட்டது. உடைந்த பகுதிகளைச் சேர்த்துப் பார்க்கும்போது நீண்ட தாடி, முறுக்கிய மீசையுடன் அமர்ந்த நிலையில் திருவள்ளுவர் சிலை காணப்பட்டது. வலக்கை சின் முத்திரையுடன் அக்க மாலை ஏந்தியாவாறு ஒரு பீடத்தின் மீது சிலை உள்ளது. நான்கடி உயரத்துக்கு மேல் உள்ளது. இச்சிலை கி.பி. பதினான்கு அல்லது பதினைந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்று தொல்பொருள் ஆய்வுத் துறையினர் கருதுகின்றனர்.

## கல்வெட்டுகள் :

திருமயிலையில் கிடைக்கும் கல்வெட்டுகளில் பெரும்பாலானவை திருவான்மியூர், திருவிடைச்சுரம் ஆகிய ஊர்களைச் சேர்ந்தவையாகும். சில கல்வெட்டுகள் மயிலை என்னும் ஊர்ப் பெயரைக் குறிப்படுகின்றன. இங்கு கிடைக்கும் கல்வெட்டுகள் மயிலையின் வரலாற்றை அறிவதற்குத் துணை செய்யவில்லை. ஆனால், மயிலையின் தொன்மையை உணர்ந்து கொள்வதற்குப் பயன்படுகின்றன. திருவொற்றியூர் ஆதிபுரிஸ்வரர் கோயில் கருப்பக்கிருகத்திற்கு முன்னுள்ள மண்டபத்தின் தரையில் உள்ள கல்லில் காணப்படும் கல்வெட்டு கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் கம்பவர்மன் ஆட்சியில் மயிலை இருந்ததை உணர்த்துகிறது.

கம்பவர்மனுடைய ஏழாம் ஆட்சியாண்டில் திருவொற்றியூர் மகாதேவர் கோயிலுக்கு விளக்கெரிக்க மயிலார்ப்பில் இறையான்சேரி வெம்பன் குணுங்கனம்மன் பதினைந்து கழஞ்சு பொன் அளித்த செய்தியைக் குறிப்பிடுகிறது. இதனால் கி.பி.

855–896ஆம் ஆண்டுகளில் கம்பவர்மனுடைய ஆட்சியின் கீழ் மயிலை இருந்து வந்ததை அறியலாம். பொன்னேரிக்கு அருகிலுள்ள காட்டூரில் கிடைத்த கல்வெட்டில் மயிலார்ப்பில் என்னும் ஊரில் நானாதேசிகன் என்னும் கடல் வாணிகர்கள் ஒன்றுகூடி முடிவெடுத்த செய்தி தெரிய வருகிறது. இக்கல்வெட்டின் காலம் கி.பி. 11ஆம் நூற்றாண்டு ஆகும்.

முதலாம் இராசராசன் காலத்துக் கல்வெட்டு, சாந்தோம் பேராலயத்துத் தென்னந்தோப்பிலிருந்து கண்டெடுக்கப் பெற்ற ஒரு தூணில் காணப்படுகிறது. இதில் இராசராசன் மெய்க்கீர்த்தியில் ஒரு பகுதியே உள்ளது. காலம் கி.பி. 10-11ஆம் நூற்றாண்டாகும். செயிண்ட் தாமஸ் மலையிலுள்ள தூய அப்பாஸ்ல்ஸ் கன்னி மாடத்தின் உணவருந்தும் அறையின் பக்கத்தில் உள்ள மாடிப்படியில் ஒரு கல்லில் காணப்படும் கல்வெட்டு, மயிலாப்பூரிலுள்ள திருப்பூம்பாவைக்குச் சில வரிகளிலிருந்து கிடைக்கப் பெறும் வருமானத்தைக் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது. இதன் காலம் தெரியவில்லை.

சாந்தோம் பேராலயத்தில் கிழக்குப் பக்கத் திருச்சுற்றில் வடமொழிக் கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. இதன் காலம் கி.பி. 12ஆம் நூற்றாண்டாகும். இக் கல்வெட்டில் கருப்பக்கிருகம் உட்பட எல்லாக் கட்டிடங்களும் மயிலாப்பூரில் உள்ள புகழ் பெற்ற சிவனுக்கும் பார்வதிக்கும் உரியவையாகும் என்னும் செய்தி உள்ளது. பிறிதொரு கல்வெட்டு மயிலாப்பூர் ஈச்சரமுடையார் கோயிலில் கூத்தாடுந்தேவர்க்கு ஒரு சந்தி விளக்கு எரிய வைப்பதற்காக இறையிலி நிலம் அளித்ததைக் குறிக்கிறது.

திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலின் முன் உள்ள குளத்தின் படிக்கட்டுகளில் ஒரு கல்லில் திருப்பூம்பாவை என்று குறிக்கப்பட்டுள்ளது. கல்வெட்டின் சிறு பகுதியே கிடைத்துள்ளது.

## கபாலீசுவரர் கோயிலிலுள்ள கல்வெட்டுகள் :

கி.பி. 1896ஆம் ஆண்டில் கபாலீசுவரர் கோயிலின் கருவறை நுழைவாயிலுள்ள கல்வெட்டில் திரு மயிலாப்பூர் இராக்கியப்ப முதலியார் வீதியில் நான்காம் எண் வீட்டைச் சார்ந்த சுப்பராய முதலியார் குமாரர் ஆறுமுக முதலியார் தமது தோட்டத்தையும் வீட்டையும் கபாலீசுவரர் கோயில் பிரம்மோற்சவத்தில் முதல் நாளாகிய கொடி நாளன்று காலை, மாலை மகோற்சவங்கள் நடத்துவதற்கும், தேவஸ்தான நள்ளிரவுப் பூசையில் ஒவ்வொரு நாளும் மிளகமுது செய்து, யாத்திரை மேற்கொண்டு வருவோர்களுக்கு அளிக்கவும், தானமாக அளித்தார் என்பதையும், மூவாயிரம் ரூபாய் (அக்காலத்து) மதிப்புள்ள இரத்தினக் கொடி ஒன்றையும் அவர் அளித்துள்ளார் என்பதையும் இக்கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

கபாலீசுவரர் கோயிலிலுள்ள பதினாறு கல்வெட்டுகளின் சுருக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

கற்பகாம்பாள் சந்நிதித் திருச்சுற்றின் வடபுறத்திலுள்ள 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சுந்தர பாண்டியன் கல்வெட்டு, கபாலீசுவரர் கோயிலுக்கு நிலம் கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

மற்றொரு கல்வெட்டு, சில கோயில்களைச் சேர்ந்த தேவஸ்தான நிலங்களைத் திரிசூல இறைவனுக்குக் காணியாக விற்றுத் தந்ததைக் குறிக்கிறது.

இன்னொரு கல்வெட்டில், ஆண்ட பிரானான அரச திவாகர பட்டன் என்பான் குறிக்கப்பட்டுள்ளான்.

வெளிப்புறச் சுவரிலுள்ள 13ஆம் நூற்றாண்டின் கல்வெட்டு வானவன் மாதேவிச் சதுர்வேதி மங்கலத்துத் திருச்சுரமுடைய நாயனாரைக் குறிக்கிறது.



427/1--1a.

கபாலீசுவரர் கோயிலின் மேற்குச் சுவரில் (வெளிப்புறம்) உள்ள கி.பி. 13ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு வானவன்மாதேவி சதுர்வேதி மங்கலத்தும் திருச்சுரமுடைய நாயனார்க்குத் திருநந்தாவிளக்கு வைத்ததைக் குறிப்பதாகத் தெரிகிறது.

மேற்படி இடத்திலுள்ள 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சுந்தர பாண்டியனின் கல்வெட்டு திருச்சுரமுடைய நாயனாருக்கு இரண்டு நந்தா விளக்கு வைப்பதற்கு 60 பசுக்கள் கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

இதே இடத்திலுள்ள, மூன்றாம் குலோத்துங்கனின் 33ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு நாயகப் பெருமானுக்குச் சந்திவிளக்கு ஒன்று வைப்பதற்காக அளித்த கொடையைக் குறிக்கிறது.

இக் கோயில் வடக்குச் சுவரில் (உட்புறம்) உள்ள கல்வெட்டு நந்தாவிளக்கு இரண்டு வைப்பதற்கு 20 எருமைகள் கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

இக் கோயில் கிழக்குச் சுவரில் (உட்புறம்) உள்ள 13ஆம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டு அழியாவிரதங் கொண்டான் மடத்துக்கு நிலம் வழங்கியதைக் குறிக்கிறது.

வடக்குச் சுவரிலுள்ள கி.பி. 13ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில் திருச்சுரமுடைய நாயனார்க்கு விளக்கு ஒன்று வைப்பதற்கு 32 பசுக்களைக் கொடையாக அளிக்கப்பட்டது குறிக்கப்பட்டுள்ளது.

இக்கோயிலின் மேற்குச் சுவரிலுள்ள கோச்சட பன்மர் கல்வெட்டு, பூசைக்கும் திருப்பணிக்கும் கொடையளித்ததைக் குறிக்கிறது.

மேற்குச் சுவரிலுள்ள கல்வெட்டில் விக்கிரம சோழனின் மெய்க்கீர்த்தியில் ஒரு பகுதி உள்ளது. இது கி.பி. 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.

கபாலீசுவரர் கோயில் கருவறையின் வாயில் நிலை இடப்புறக் கல்லில் உள்ள 13ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு,

இராமராச திருமலை தேவமகராசனுக்குப் புண்ணியமாகத் திருப்பதி எல்லப்பர் பிள்ளை என்பார் திருமதில் கட்டி வைத்ததைக் குறிக்கிறது.

இக்கோயில் உட்புறச் சுற்றின் மேற்குச் சுவரிலுள்ள கல்வெட்டு திருவான்மியூர் உலகாளுடைய நாயனாருக்குக் கொடையளித்ததைக் குறிக்கிறது.

இக்கோயில் மேற்குக் கோபுரத்தின் உச்சி மீதுள்ள ஒரு கல்லில் கி.பி. 13ஆம் நூற்றாண்டு கல்வெட்டு உள்ளது. அதில் நந்தா விளக்கு எரிப்பதற்காக மூன்று பசுக்களைக் கொடையளித்தது குறிப்பிடப்பட்டுள்ளது.

கபாலீசுவரர் கோயில் மேற்குச் சுவரின் உட்புறத்தில் காணப்படும் கி.பி. 13ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு, மயிலாப்பூரைச் சேர்ந்த தண்டிபிடிக்கோன் என்பவானிடமிருந்து 22 ஆடுகளைப் பெற்றுத் திருவான்மியூர் உலகாளுடைய நாயனாருக்கு இரண்டு விளக்கு வைத்ததைக் குறிக்கிறது.

திருமயிலை விருபாட்சிசுவரர் கோயில் கருவறையின் தென்புறச் சுவரில் உள்ள கி.பி. 13ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு, திருப்பூம்பாவை நாயனாரையும் ஐந்து வணிகர்களையும் குறிப்பிடுகின்றது.

இக் கல்வெட்டுகளினால் மயிலையின் தொன்மை நன்கு விளங்கும்.

பல்லவர் காலத்திலும், பிற்காலச் சோழர் காலத்திலும், பிற்காலப் பாண்டியர் காலத்திலும், விஜயநகர அரசர் காலத்திலும் போர்த்துக்கீசியர் காலத்திலும், ஆங்கிலேயர் காலத்திலும், புகழ்பெற்று விளங்கியது இராசமாநகரம் மயிலை. இக் காலத்திலும் இதன் புகழ் சிறந்தோங்கிக் கொண்டிருக்கிறது.

## 2. கற்றார்கள் ஏத்தும் கபாலீச்சரம் போற்றுவோம்

சென்னை சென்டரல் இரயில் நிலையத்திற்குத் தெற்கில் எட்டுக் கிலோ மீட்டர் தொலைவில் திருமயிலாப்பூர் உள்ளது. மயிலையிலுள்ள கச்சேரி சாலைக்குத் தெற்கில் உள்ளது, தெற்கு மயிலாப்பூர் ஆகும். இக் கச்சேரி சாலைக்குத் தெற்குப் பக்கத்தில், மாட வீதிகளுக்கு நடுவில், திருக்குளத்திற்குக் கிழக்கில் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் காட்சியளிக்கிறது. இக்கோயில் உள்ள பகுதியைக் கபாலீச்சரம் என்றழைக்கின்றனர். கபாலீச்சரம் 80 மீட்டர் நீளமும், 26 மீட்டர் அகலமும் கொண்ட 2080 சதுர மீட்டர் பரப்பில் அமைந்துள்ளது.

### பெயர்க் காரணம்:

சிவபெருமானுடைய திருவுருவங்களில் பிரம சிரச்சேத மூர்த்தியும் ஒன்றாகும். இந்தத் திருவுருவம் ஏற்பட்டதற்கான கதைகளைக் கூர்ம புராணம், வராக புராணம், கந்த புராணம் ஆகிய புராணங்கள் கூறுகின்றன. பிரமன் சிவமூர்த்தியைப் போலத் தானும் ஐந்து சிரம் உடையவனென்று செருக்கடைந்த காலத்தில் அவன் நடுச் சிரத்தைக் கிள்ளிப் பலியேற்ற இச்சிவ உருவத்தைக் கபால மூர்த்தி என்பர். கபாலம் என்பதற்கு மண்டையோடு என்பது பொருளாகும். கபாலத்தை ஏந்தியவன் கபாலி எனப்பட்டான். சிவபெருமானை ஈசுவரன் என்றழைப்பர். கபாலம் ஏந்திய ஈசுவரன் கபாலீசுவரன் ஆனான். ஈசுவரன் இருக்குமிடம் ஈசுவரம். பல்லவர் காலத்தில் சிவன் திருக்கோயில்களை ஈசுவரம் என்று அழைக்கும் மரபு ஏற்பட்டது. கபாலீசுவரன் இருக்குமிடம் கபாலீசுவரம் என்றழைக்கப்படுகிறது என்று காரணம் கூறுவர். திருஞானசம்பந்தரும் பூம்பாவைப் பதிகத்தின் எல்லாப் பாடல்களிலும் கபாலீச்சரம் என்று திருமயிலைக் கபாலீசுவரர் கோயிலைக் குறிப்பிட்டுள்ளார்.

சைவ சமயத்தின் கிளைப் பரிவுகளில் ஒன்றான கபாலிக மதத்தைச் சார்ந்தவர்களுக்கு உரியது இக்கோயில். ஆகவே, இக்

கோயில் கபாலீசுவரம் என்னும் பெயர் பெற்றது என்று மற்றொரு காரணம் கூறுவர். காபாலிகர்கள் அக்காலத்தில் இருந்ததால் திருமயிலைச் சிவன் கோயில் 'காபாலீச்சரம்' என்றழைக்கப்பட்டது என்று மொ. அ. துரையரங்கனார், Religion and philosophy of Thevaram என்னும் நூலில் கூறுகிறார். அக் காலத்தில் திருவொற்றியூர் சிவன் கோயிலில் காபாலிகர் நிறைந்திருந்ததைப் போலத் திருமயிலைக் கபாலீசுவரர் கோயிலிலும் காபாலிகர்கள் இருந்தது கபாலீசுவரன் என்னும் பெயரினால் புலப்படும். காபாலிகர்கள் திருமயிலையில் இருந்ததைத் திருமயிலை உலா என்னும் நூல் குறிப்பிடுகின்றது.

*"மண்ணி னிற்பிறந் தார் பெறும் பயன்மதிசூடும்*
*அண்ண லார்அடி யார்தமை அமுதுசெய் வித்தல்"*

என்னும் சேக்கிழார் பெருமானின் வாக்கு பிட்சாடன மூர்த்தியைக் குறிப்பதாகவே உள்ளது.

ஆகவே, சிவபெருமான் திகம்பரராய்க் கையில் பிரம கபாலத்துடன். தாருகாவனத்து ரிஷிகளின் இல்லம் சென்று பிச்சை ஏற்ற காரணத்தினால் தான் கபாலீசுவரர் எனப்பட்டார் என்பதே பொருத்தமுடையதாகும் என்று சைவ சித்தாந்தப் பேராசிரியர் டாக்டர் இரத்தின சபாபதி கூறுகிறார்.

## சம்பந்தர் பாடிய கபாலீச்சரம் இருந்த இடம்:

கபாலீசுவரர் திருக்கோயில் இப்போதுள்ள இடத்தில் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு புதிதாகக் கட்டப்பட்டதென்றும், பழைய கோயில் சாந்தோம் கடற்கரையில் இருந்ததென்றும் ஆராய்ச்சி அறிஞர்கள் ஒரு சாரார் உரைக்கிறார்கள். மற்றொரு சாரார் இக் கருத்தை மறுத்து, பழைய கோயில் இப்போதுள்ள இடத்திலேயே இருந்ததென்றும். அது இடிக்கப்பபட்டவுடன் அவ்விடத்திலேயே புதிய கோயில் திரும்பக் கட்டப்பட்டதென்றும் கூறுகிறார்கள். இரு சாராரும் தங்கள் ஆராய்ச்சிக்குரிய பொருத்தமான கருத்துகளைத் திருத்தமாகக் கூறுகிறார்கள்.



427/1--1c.

## கடற்கரையோரக் கபாலீசுவரர் கோயில்:

இப்போதுள்ள கபாலீச்சரம் திருஞானசம்பந்தரால் பாடப்பட்டதன்று. பழைய கோயில் கடலுக்கு அடியில் உள்ளது என்று எஸ். கல்யாணசுந்தரம் தாம் எழுதிய மயிலாப்பூர் வரலாறு என்னும் ஆங்கில நூலில் கூறுகிறார். மேலும், மயிலாப்பூரைக் கடல் கொண்டதற்கான மரபு வழிச் செய்தி உள்ளது. மாரிஸ் பிலிப்ஸ் (Marice Philips) என்பவர், நில நடுக்கம் ஒன்று ஏற்பட்டதால் மயிலையின் கடற்கரை தாழ்ந்து, கடல் ஊருக்குள் பரவியது என்று கூறுகிறார். கி.பி. 1651 இல் மீனவர் ஒருவரின் தூண்டில் கடலின் அடிப்பகுதியில் சிக்கியது என்றும், அது என்னவேன்று பார்த்தபோது நங்கூரமாக இருந்தது என்றும், நங்கூரத்தின் குத்துக்கம்பில் களிமண் படிந்து இருந்தது என்றும் இதனைக் கொண்டு, அப்பகுதி முற்காலத்தில் நிலப் பகுதியாக இருக்க வேண்டும் என்றும் மானுக்கி ( Mannucci) குறிப்பிட்டுள்ளார். கடற்கரையோரமாகவே நன்னீர் பூமியில் கிடைப்பதாலும், கடற்கரை அருகிலேயே களிமண் நிலம் காணப்படுவதாலும் முற்காலத்தில் கடல் இப்போதுள்ள இடத்திலிருந்து மிகத் தொலைவில் இருந்திருக்க வேண்டும் என்று கூறிப் பழைய கோயில் கடலால் கொள்ளப்பட்டது என்று முடிவுக்கு எஸ். கல்யாணசுந்தரம் வருகிறார்.

இப்போதுள்ள கபாலீசுவரர் கோயில் பழைய கோயில் அன்று என்றும், சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட புதிய கோயில் என்றும், பழைய கோயில் கடற்கரையோரம் இருந்ததாகவும் அது போர்த்துக்கீசியர்களால் அழிக்கப்பட்ட தாகவும் வரலாற்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர் என்று பம்மல் சம்பந்த முதலியார் கூறுகிறார்.

இப்போதுள்ள கோயிலிலுள்ள சிற்பங்கள் விஜயநகர அரசர் காலத்துக்குப் பிற்பட்டவை என்பதாலும், கோயில் வரலாற்றை உணர்த்தும் பழைய கல்வெட்டுகள் எதுவும் இல்லாததனாலும், சுவாமி சந்நிதி மேற்குப் பார்த்திருப்பதாலும் இக் கோயில் புதிய

கோயில் என்று கொள்ளலாம். மேலும், எல்லாப் பெரிய கோயில்களிலும் முற்காலத்தில் கோயில் குளமானது சுவாமியைத் தரிசிக்க வரும் அடியார்கள் சுத்தம் செய்து கொள்வதற்காகக் கோயில்களின் முன்புறமே அமைக்கப்பட்டிருக்கிறது. மயிலாப்பூர் பெரிய குளம் கோயிலுக்குப் பின்புறம் வெட்டப் பட்டிருப்பதும் இக்கோயில் அண்மைக்காலத்தில் கட்டப்பட்டது என்பதற்கு ஆதாரமாகும்.

பழைய கோயில் இப்போதிருக்கும் சாந்தோம் மாதா கோயில் உள்ள இடத்திலோ அல்லது அதன் அருகிலோ இருந்திருத்தல் வேண்டும். நாகப்பட்டினம் முதல் சென்னை வரையில் இருந்த கோயில்களை எல்லாம் அழித்த போர்த்துக் கீசியர்கள் சாந்தோமில் தங்களுடைய முக்கியமான இடமாகிய செயிண்ட் தாமஸின் ஆலயத்துக்கு அருகில் ஓர் இந்து ஆலயத்தை இருக்க விட்டிருக்க மாட்டார்கள்.

மேலும், மேற்குறித்த இடத்தில் ஒரு பழைய ஆலயம் இருந்த தென்பதற்கு ஒரு முக்கியமான ஆதாரம் உண்டு. நூறு ஆண்டுகளுக்கு முன்பு, மயிலைக்கு எதிரில் இருக்கும் கடற்கரை சற்றே உள்வாங்கி வந்தபோது அலைகள் மோதுதலினால் உடைபட்டு மணற்கூரை கரைந்த போது அங்கு சிவாலயத்திற்குரிய கற்றூண்கள் முதலியன கண்டெடுக்கப்பட்டன. ஆயினும் இது இன்றும் ஆராயத்தக்க செய்தி. ஆகவே, பழைய கோயில் எங்கு இருந்தது என்பதை நிச்சயமாகக் கூறுவதற்கில்லை என்று பம்மல் சம்பந்த முதலியார் கூறுகிறார்.

இவரே, 'சிவாலயங்கள் இந்தியாவிலும் அப்பாலும்' என்னும் நூலில் 'பழைய கோயில் சமுத்திரக்கரையோரம் இருந்தது. போர்த்துக்கீசியரால் இடிக்கப்பட்டதென்று எண்ணுவதற் கிடமுண்டு' என்று குறிப்பிட்டுள்ளார்.

தற்போது இருக்கும் கோயில் 300 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது. பழைய கோயில் கடற்கரையில் இருந்ததாம். பறங்கியர்கள் அதனை இடித்துத் தமது பள்ளிகளைக் கட்டிச்

சுற்றிலும் கோட்டையை எழுப்பிக்கொண்டார்கள். ஒரு பள்ளியைப் பழுது பார்ப்பதற்காக 75 ஆண்டுகளுக்குமுன் நிலத்தைத் தோண்டிப்பார்த்ததில் பல உருவ சிலைகளும் கற்களும் கிடைத்தன. அவ்வகளைக் கொண்டு அந்த இடத்தில் பழைய கோயில் இருந்ததாக ஊகிக்கலாம். இடித்த பழைய கோயில்களின் கற்களைக் கோண்டு புதுக்கோயில் தற்போது இருக்கும் இடத்தில் கட்டப்பட்டது. அப்போது கல்வெட்டுக்களின் அருமையை அறியாது அவைகளைத் தாறுமாறாக இணைத்துவிட்டார்கள். ஈழ நாட்டுத் திருகோணமலை, துளவ நாட்டுக் கோவ (Gova) முதலிய இடங்களில் பறங்கியர் 400 ஆண்டுகளுக்கு முன் செய்த வண்ணமே இம்மயிலையிலும் பறங்கியர்கள் கோயிலையும் மனைகளையும் இடித்துப் பள்ளியும் கோட்டையும் கட்டியிருக்கக் கூடும். அதற்குச் சான்றுகள் மேல் கூறிய புதைந்த கல்வெட்டுகளேயன்றிக் கோட்டைத் தெரு என்ற வழக்கப் பெயரும், கொடிமரம் முதலிய சின்னங்களுமேயாகும் என்று சி.எம். இராமச்சந்திர செட்டியார் கருதுகிறார்.

பழைய ஆலயம் இப்போது சாந்தோம் கதீட்ரல் உள்ள இடத்திலிருந்தது. அருணகிரிநாதர் காலம் வரையில் (கிபி. 1540) கடற்கரையிலிருந்து; 'கடலக்கரை திரையருகே சூழ் மயிலைப் பதிதனில் உறைவோனே' என்ற திருப்புகழ்ப் பகுதியால் துலங்கும். கி.பி. 1516-ல் மயிலாப்பூர் போர்த்துக்கீசியர் கையில் சிக்கியது. சில ஆண்டுகளுக்குள் அவர்கள் ஆலயத்தை தகர்த்துக் கோட்டையும், தங்கள் தொழுகைக்கு இடமும் கட்டினார்கள். கி.பி. 1672-க்கு முன்பு இப்போதுள்ள இடத்தில் ஆலயம் கட்டப்பட்டிருக்க வேண்டும். அவ்வாண்டில் பிரெஞ்சுக்காரர் களுக்கும் டூர்துருக்கருக்கும் நடந்த போரில் பிரெஞ்சு சேனையின் பகுதி இப்போதுள்ள ஆலயத்தில் பதுங்கியிருந்தது. சாந்தோம் கதீட்ரல் நாற்பது ஆண்டுகளுக்கு முன் பழுது பார்க்கப்பட்டது. நிலத்தை அகழ்ந்தபோது பழைய சிவாலயத்தின் கற்களும் கல்வெட்டுகளும் கிடைத்தன. அவை அரசாங்கத்தினரால் 215-223/1923 என்று குறிக்கப்பட்டுள்ளன. ஒரு கல்வெட்டில் கூத்தாடு

தேவர்க்கு விளக்கு வைத்த செய்தியும், மற்றொன்றில் பூம்பாவை பற்றியும் குறிப்பும் உள்ளன. ஆகவே, பழைய கோயில் கடற்கரை அருகில் இருந்ததென்றும், போர்த்துக்கீசியரால் அழிக்கப்பட்டது என்றும் ம. பாலசுப்பிரமணிய முதலியார் கருதுகின்றார்.

இப்போதுள்ள கபாலீசுவரர் கோயில், நாயன்மார்களால் பாடப் பெற்ற பழைய கபாலீசுவரர் கோயில் என்ற பொதுவான நம்பிக்கை மக்களிடையே நிலவி வருகிறது. தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் சாந்தோமில் கண்டெடுத்த புதைபொருள் களிலிருந்து பழைய கோவில் வேறு இடத்தில் இருந்திருக்க வேண்டும் என்றும், பெரும்பாலும் சாந்தோம் கடற்கரையாக இருக்கலாம் என்றும் எண்ண வேண்டியிருக்கிறது. சி.எம். இராமச்சந்திர செட்டியார் கருத்துகளின்படி பார்த்தால் இப்போதுள்ள கபாலீசுவரர் கோயில் பழைய கோயில் இருந்த இடத்திலேயே முற்றும் புதிதாகக் கட்டப்பட்டிருக்க வேண்டும் அல்லது பழைய கோயில் இருந்த இடத்தைக் கைவிட்டு விட்டு வேறு இடத்தில் புதிதாகக் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்றும் கருத வேண்டியிருக்கிறது. இவற்றுள் இரண்டாவது கருத்தே பொருத்தமானதாகத் தோன்றுகிறது. பழைய கபாலீசுவரர் கோயில் இடிபாடுகள் இப்போதுள்ள கோயிலுக்குச் சிறிய தொலைவில் கிழக்குத் திசையில் சாந்தோம் கடற்கரையருகே கண்டு எடுக்கப்பட்டதே இதற்குக் காரணமாகும்.

1923 இல் தொல்பொருள் ஆய்வுத் துறையினர் சாந்தோம் கதீட்ரலில் நிகழ்த்திய அகழ்வாராய்ச்சிகளில் கல்வெட்டுகளும், தூண்களும், சிலைகளும் கண்டெடுக்கப்பட்டன. கல்வெட்டுகள் சிவன் கோயிலைக் குறிக்கின்றன. கல் தூண்களிலும் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. மயிலோடு கூடிய முருகர் சிலையும் கண்டெடுக்கப்பட்டது. 1921-ல் மறைத்திரு ஹோஸ்டன், சாந்தோம் கதீட்ரலில் கண்டெடுத்த வடமொழிக் கல்வெட்டு 'கருவறை உட்பட எல்லாக் கட்டிடங்களும் மயிலாப்பூரிலுள்ள புகழ்பெற்ற சிவனுக்கும் பார்வதிக்கும் உரியவையாகும்' என்று குறிப்பிடுகிறது. மற்றொரு தானக் கல்வெட்டில், 'திருமயிலாப்பில் பூம்பாவை'

என்று குறிப்பிடப்படுவதாலும், பழைய கபாலீசுவரர் கோயில் கடற்கரையருகே இருந்திருக்க வேண்டும் என்பது புலனாகிறது.

சி.எஸ். சீனிவாசாச்சாரியார் அவர்களும் பழைய கோயில் கடற்கரையருகே இருந்திருக்க வேண்டும், கடல் கோளால் அக் கோயில் கைவிடப்பட்டிருக்க வேண்டும் என்று கருதுகிறார்.

பழைய கோயில் எப்போது கைவிடப்பட்டது. புதிய கோயில் எப்போது கட்டப்பட்டது என்பதும் தெரியவில்லை. அருணகிரிநாதர், திருப்புகழில் கபாலீசுவரர் கோயில் கடற்கரை அருகே இருந்தது என்று குறிப்பிடுவதால், பழைய கோயில் கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டு வரை கடற்கரையருகே இருந்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வரலாம் என்று கே. வி. இராமன், The early History of the Madras Region' என்னும் நூலில் கூறுகிறார்.

இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்புத் துறை வெளியிட்ட சென்னை மாநிலக் கோயில்கள் (Temples of Madras State) என்னும் நூல் கி.பி. 16ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சாந்தோம் கடற்கரையிலிருந்த கோயில் போர்த்துக்கீசியர்களால் அழிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கூறுகிறது. இந்நூல் கூறும் புதிய செய்தி, இப்போதுள்ள கபாலீசுவரர் கோயிலும். குளமும் முந்நூறு ஆண்டுகளுக்கு முன் மயிலை நாட்டு முத்தையப்ப முதலியாராலும் அவருடைய வாரிசுகளினாலும் கட்டப்பட்டது என்பதேயாகும். இச்செய்திக்கான ஆதாரத்தை இந்நூல் குறிப்பிடவில்லை.

மு. கோ. ராமன் பதிப்பித்த திருமயிலை உலா என்னும் நூலை அடிப்படையாகக் கொண்டு இப்போதுள்ள கபாலீசுவரர் கோயிலை நயினியப்பன் புதல்வன் முத்தியப்பன் கட்டினான் என்று முடிவுக்கு வரலாம். ஆகவே, பழைய கோயிலின் இடிபாடுகளிலிருந்து இக்கோயில் கட்டப்பட்டதன்று.

கி.பி. 1697-ல் சாந்தோம் கோட்டை இடிக்கப்பட்டது. அக்கோட்டையின் இடிபாடுகளைக் கொண்டு இக்கோயிலை

முத்தியப்பன் கட்டினான். பழைய கோயில் திரும்பக் கட்டப் பெற்றது என்பது பொருந்தாததாகும் என்றும் என். எஸ். இராமசாமி, `Mylapure Temple' என்னும் கட்டுரையில் கூறுகிறார்.

இச்செய்தி, திருமயிலை உலா வெளியான பிறகு கிடைத்த புதிய செய்தி என்று குறிப்பிடுகின்றார். ஆனால், இச்செய்தி, இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்புத்துறை, 1965-ல் வெளியிட்ட `Temples of Madras, Chinglepet District and Madras City' என்னும் நூலில் முன்னரே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, இது புதிய செய்தி அன்று.

## இப்போதுள்ள கோயில் பழைய கோயிலே:

'கோயில் மேற்குப் பார்த்த கோயில். இது கிழக்கே பார்த்து இருந்தது என்பதற்கு ஏற்ற காரணங்கள் இல்லை. இப்போதுள்ள கோயில் 'கடற்கரையில் இல்லையே' என்று கூறுகின்றார்கள். இப்போதும் கடற்கரையில் தான் இருக்கிறது என்பதில் என்ன தடை? ஐம்பதாண்டுகளுக்கு முன் இங்கே வந்து குடியேறிய பெரியார்கள் சிலர் இன்றும் இருக்கிறார்கள். அவர்கள் இங்கே வந்த காலத்தில் கடல், சாந்தோம் மாதா கோவில் அருகில் இருந்ததென்றும், இந்த நாற்பது ஐம்பதாண்டுகளில் மிகதூரம் கிழக்கே கடல் தள்ளிப் போய்விட்டது என்றும் இ.மு. சுப்பிரமணிய பிள்ளை, சென்னை மாவட்டக் கோவில் வரலாறு என்னும் நூலில் கூறுகிறார். ஆராய்ச்சி அறிஞர், இப்பகுதிக்குக் கடல் கிழக்கே தான் தள்ளிப் போய்க்கொண்டிருக்கிறது. இராயபுரம் பகுதியில் கடல் உள்ளே வந்து கொண்டேயிருக்கிறபடியால் இப்போதுள்ள இராயபுரத்தார் அதனைத் தடுக்கத்தக்க ஏற்பாடுகள் செய்து வருகிறார்கள் என்று கூறுவது மறுக்க முடியாத உண்மை. ஆதலின், பண்டைக் காலத்தில் கடல் மேற்கே மிகவும் தள்ளி இப்போதுள்ள கோயிலுக்கு நெருங்கியிருத்தல் கூடும். ஆதலின் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் கடல் மேற்கே ஏறி மணலை அரித்ததென்பதும் அப்போது சிவன் கோயிலுக்குரிய தூண்கள் வெளிப்போந்தன என்பதும் நிகழ்ந்திருத்தல் முடியாது.

பழைய கபாலீசுவரர் கோயிலைப் போர்த்துக்கீசியர்கள் இடித்ததும் மயிலை மக்கள் இக் கோயிலைப் பெரும்பாலும் அக்கற்களைக் கொண்டே திரும்பக் கட்டினார்கள்.

ஆழ்வார்கள், அப்பர், ஞானசம்பந்தர் காலத்திலேயும் திருக் கோயிலைச் சூழ மாடவீதிகள் இருந்தமை அவர்தம் பாடல்களால் புலப்படுகிறது. இப்போதும் அழகிய மாடவீதிகள் உள்ளன.

கபாலிப் பெருமான் மேற்கே பார்த்திருப்பது இப்போதுள்ள கோயில் புதுக்கோயில் என்பதற்குக் காரணம் ஆகாது. திருவான்மியூரிலும், திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் வட்டத்தைச் சேர்ந்த சிவசயிலம் திருக்கோயிலிலும் இறைவன் மேற்கே பார்க்கவே இருக்கிறான்.

கபாலி நாயகன் திருக்கோயிலில் கல்வெட்டு இல்லாமைக்குக் காரணம், சூழ உள்ள சுவர் கற்கட்டில்லாமல் செங்கற்கட்டாக இருந்ததும், மேலும் கூத்தப் பெருமான், அறுபத்து மூவர் ஆகிய இவர்கள் சூழ எழுந்தருளியிருந்ததுமே ஆகும். பண்டைக் கோயில்கள் செங்கற் கோயில்களாகவே எழுந்தன என்பது ஆராய்ச்சி அறிஞர்கள் கண்ட உண்மை.

கடற்கரை அருகே இருந்தது சமணர் கோயில்; அதுதான் இடிக்கப்பட்டது. அஸ்திக் குட்டை (எலும்பு) என்று ஒன்று கோயிலின் தென்மேற்கில் இப்போதுள்ள இராமக்கிருட்டினர் திருமடத்தின் அருகே இருப்பதும், அங்கே உள்ள மடத்து மருத்துவச் சாலை இன்றும் அஸ்திக்குட்டை ஆசுபத்திரி என்று வழங்கி வருவதும், அப்பகுதிதான், மயிலாப்பூரின் சுடுகாடாக முன்பு இருந்தது. அதிலேதான் பூம்பாவையை எரித்து அவளுடைய அஸ்தியை எடுத்து வைத்தார்கள் என்பதும் ஆகியவை. உண்மைகளை ஆராய்ச்சியாளருக்குப் புலப்படுத்துவனவாகும். என்று இ.மு. சுப்பிரமணியபிள்ளை கூறி, இப்போதுள்ள கோயில், இருந்த இடத்திலேயே திரும்பக் கட்டப்பட்டது என்று விளக்குகின்றார்.

## இப்போதுள்ள கோயில் புதிய கோவிலே:

கபாலீசுவரர் கோயில் இருக்குமிடம் பற்றிய கருத்துகள் இரண்டாகும். முதல் கருத்து, பழைய கபாலீசுவரர் கோயில், சாந்தோம் கடற்கரையருகே இருந்தது; இரண்டாவது கருத்து இப்போது கோயில் இருக்குமிடத்திலேயே பழைய கோயில் இருந்தது என்பதுமேயாகும்.

முதல் கருத்துக்குச் சான்றுகள் காட்டி வலியுறுத்துகிறவர்கள் எஸ். கல்யாணசுந்தரம், பம்மல் சம்பந்த முதலியார், சி.எம். இராமச்சந்திர செட்டியார், ம. பாலசுப்பிரமணிய முதலியார், கே.வி. இராமன், என். எஸ். இராமசாமி ஆகியோர் ஆவர். இவர்கள் காட்டும் சான்றுகள் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் உள்ளன.

இரண்டாவது கருத்தைச் சான்றுகள் காட்டி வலியுறுத்துகிற்வர் இ.மு. சுப்பிரமணிய பிள்ளை. அவர் இப்போதுள்ள கோயிலுக்கு அருகே முற் காலத்தில் கடல் இருந்தது என்று கூறுகிறார். இவர் கருத்துக்கு எஸ். கல்யாணசுந்தரம் கூறும் கருத்து மறுப்பாக அமையும். அவர் இப்போதுள்ள கடல் பகுதியிலேயே நிலப்பகுதி இருந்திருக்க வேண்டுமென்பதைத் தக்க ஆதாரங்களோடு காட்டுகிறார். எனவே, கடற்கரை அருகே பழைய கோயில் இருந்ததென்பதே பொருந்துவதாகும்.

இரண்டாவது முக்கிய காரணமாக, பழைய கபாலீசுவரர் கோயிலைப் போர்த்துக்கீசியர் இடித்ததும் மயிலை மக்கள் இக் கோயிலைப் பழைய கற்களைக்கொண்டு அதே இடத்தில் திரும்பக் கட்டினார்கள் என்று கூறுகின்றார். இக் கருத்தை மறுப்பதற்குத் திருமயிலை உலா பெரிதும் உதவுகிறது. இந் நூலில் இப்போதுள்ள கபாலீசுவரர் கோயிலும், குளமும், மண்டபங்களும், மாடவீதிகளும், நந்தவனங்களும் மற்றும் உளவும் நேசமுடனே முத்தியப்பன் அமைத்தான் என்று கூறப்பெறுவதால், இக் கோயில் பழைய கோயில் இருந்த இடத்தில் திரும்பக் கட்டப்பட்ட (Rebuilt) கோயிலன்று; புதியதாக வேறு இடத்தில் கட்டப்பட்ட கோயில் என்பது நன்கு விளங்கும்.

மூன்றாவது காரணம், அழகிய மாட வீதிகளை உடையது மயிலை என்று ஆழ்வார்கள், அப்பர், சம்பந்தர் குறிப்பிட்டுள்ளார்கள். இப்போதும் அழகிய மாட வீதிகள் உள்ளன. ஆகவே, இது பழைய கோயில் என்று கூறுகின்றார்.

இப்போதுள்ள கோயில், குளம், மாட வீதி ஆகியவைகள் இருக்குமிடம் மயிலையின் தெற்குப் பகுதி. இப்பகுதி புதிதாக ஏற்பட்ட பகுதி என்பது எஸ். கல்யாணசுந்தரம் அவர்கள் 'ஐம்பதாண்டுகளுக்கு முன்னர் மாட வீதிகளில் ஒருசில வீடுகளே இருந்தன' என்று கூறுவதால் புலப்படும்.

நூறாண்டுகளுக்கு முன் மாட வீதிகளைச் சுற்றிச் சத்திரங்களும், மடங்களுமே இருந்தன என்பதற்குச் சான்றுகள் உள்ளன. குன்றக்குடி ஆதீனம், குமாரதேவர் மடம் ஆகியவையும், சித்திரச் சத்திரம் முதலிய சத்திரங்களும் இன்றும் உள்ளன. சத்திரங்கள்தாம் வீடுகளாக மாறின என்பதை அவ்வீடுகளைச் சென்று பார்த்தாலே புலப்படும். அது மட்டுமல்லாமல் 'முத்தியப்பன் மாடவீதிகள் அமைத்தான்' என்று தெளிவாக திருமயிலை உலா கூறுவதாலும் இப்போதுள்ள கோயில் பழைய கபாலீசுரம் அன்று என்பது புலப்படும்.

நான்காவது முக்கிய காரணமாக அஸ்திக்குட்டை என்ற குட்டையைப் பூம்பாவை வரலாற்றோடு தொடர்பு படுத்திப் பழைய கோயில் என்று கூறுகின்றனர். இது அஸ்திக்குட்டையன்று. அத்திக்குட்டையாகும். இங்கு முன்பு அத்தி மரங்கள் நிறைந்திருந்தன. நடுவில் குட்டையொன்று இருந்தது. ஆகவே, அத்திக்குட்டை என்று வழங்கப்பட்டது. இதற்கும் பூம்பாவை வரலாற்றுக்கும் தொடர்பு கிடையாது என்பர்.

ஆகவே, இக் காரணங்களால் இப்போதுள்ள கோயில் கி.பி. 16ஆம் நூற்றாண்டில் மயிலை நாட்டு நயினியப்ப முதலியார் குமாரன் முத்தியப்ப முதலியாரால் கட்டப் பெற்ற புதிய கோயில் என்பது தெளிவாகப் புலனாகும்.



அருள்மிகு கற்பகாம்பாள்



அதிகாரநந்தி வாகனத்தில் அருள்மிகு கபாலீசுவரர்,
அருள்மிகு கற்பகாம்பாள்

கடற்கரை அருகே இருந்த பழைய கோயில் அழிந்ததற்கான காரணங்களாக இரண்டினைக் கூறுகின்றனர். அவை, 1. கடல் கோளால் அழிந்தது; 2. போர்த்துக்கீசியரால் அழிக்கப்பட்டது என்பவையாகும். கடல் கோளால் அழிந்ததற்கு நேமிநாதர் கோயில் தொடர்பான, சமணர் மரபு வழிச் செய்திகளைக் கூறுகின்றனர். இக் கருத்தை மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் மறுத்து, காலப் போக்கில் கடல் பின் சென்றது; கடலால் கோயில் அழியவில்லை. போர்த்துக்கீசியர்களால், நேமிநாதர் கோயிலும் கபாலீசுவரர் கோயிலும் அழிக்கப்பட்டது என்று கூறுவதாலும், போர்த்துக்கீசியர்கள் இந்துக் கோயில்களை அழித்த செய்தியைக் கேள்விப்பட்டு இராமராயர் கி.பி. 1558-ல் சாந்தோம் மீது படை எடுத்துப் போர்த்துக்கீசியரைப் பணியவைத்துப் பின்னர் பழுதுபட்ட கோயில்களைப் பழுது பார்க்க ஆணையிட்ட செய்தியாலும் பழைய கபாலீசுவரர் கோயில் போர்த்துக்கீசியர்களால் அழிக்கப்பட்டது என்ற முடிவுக்கு வரலாம்.

ஆகவே, முடிவாக பழைய கபாலீசுவரர் கோயில், கடற்கரை அருகே இருந்ததென்பதையும் கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் போர்த்துக்கீசியரால் அழிக்கப்பட்டதென்பதையும் கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் இப்போதுள்ள இடத்தில் புதிய கோயில், மயிலை நாட்டு நயினியப்ப முதலியார் மகன் முத்தியப்ப முதலியாரால் கட்டப் பெற்றது என்பதையும் தெளிவாக உணரலாம்.

# 3. திருக்கோயில் வலம் வருவோம்

## கோயில் அமைப்பு:

கோயில்கள் மனிதர் உடம்பின் வடிவிலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன. இதனை, 'க்ஷேத்திரம் சரீர பிரஸ்தாரம்' என்பர். கோயில் மனிதர் உடம்பு போல அமைக்கப்பட்டிருக்கிறது என்பது இதன் பொருள். இதனை வேறொரு முறையிலும் உடம்போடு ஒப்பிட்டுக் கூறுவர். மனித உடம்பில் உள்ள பாதங்கள் கோபுரம்; முழங்கால் ஆஸ்தான மண்டபம்; தொடை நிருத்த மண்டபம், கழுத்து அர்த்த மண்டபம், கொப்பூழ் பலிபீடம், மார்பு மகா மண்டபம், சிரம் கருப்பக் கிரகம், சிரத்தில் உள்ள இரு செவிகளில் வலச் செவி தக்ஷிணாமூர்த்தி, இடச் செவி சண்டிகேசுவரர், மார்பில் நடராஜர், கழுத்தில் நந்தி, வாய் ஸ்தபந மண்டப வாசல், மூக்கு ஸ்தபந மண்டபம், புருவ மத்தி லிங்கம், தலையின் உச்சி விமானம் என்பர்.

கோயிலில் மூல விக்கிரகத்தைப் பிரதிட்டை செய்துள்ள கருவறை மிகச் சிறியதாக, அருச்சகர் மட்டும் நின்று தொண்டு செய்யும் இடமாக அமையும். அதனை அடுத்து அர்த்த மண்டபம், கருவறையை விடச் சிறிது பெரிதாக இருக்கும். இங்கு நின்றபடி அருச்சகர் தீபாராதனை செய்வர். இதனை அடுத்து மேலும் அகலமாக அமைக்கப்படுவதே மகா மண்டபம். இவை தவிரச் சுற்றுப் பிரகாரங்களும், நடன அரங்குகள், திருச்சுற்று மதில்கள், கோபுரங்கள், கருவறையின் மீது விமானம் ஆகியவையையும் கட்டப் பெறும் வழக்கம் உண்டு.

சைவத்திருக்கோயில்களில், முதன்மைத் தெய்வம் சிவலிங்கமேயாகும். பரிவார தெய்வங்கள் என்ற நிலையில் விநாயகர், முருகர் ஆகியோரையும் பிரதிஷ்டை செய்வர். கருவறை வாயிலில் துவாரபாலகர் இருவர் நிற்பர். கருப்ப கிரகத்தில் வெளிப்புறம் தெற்குச் சுவரில் தட்சிணாமூர்த்தியையும், மேற்கு சுவரில் லிங்கோத்பவ மூர்த்தியினையும், வடக்குச் சுவரில்

துர்க்கையினையும் ஸ்தாபிப்பர். துர்க்கைக்கு எதிரே எதிர்முகமாகத் தனியே சண்டேசுவரைத் ஸ்தாபிப்பர். அவர் தெற்கு நோக்கி இருப்பார். சோமாஸ்கந்தர், சபாபதி, பைரவர் போன்ற சிவன் திருக்கோலங்களும் சுற்றுத் தெய்வங்களாகப் பிரதிட்டிக்கப்படுதல் உண்டு. அறுபத்து மூன்று நாயன்மார்கள் பிரதிட்டை செய்யப்பட்டிருக்கும் வெளிப்பிரகாரத்தில் வாயிலுக்கு நேரே பலிபீடம், பெரிய நந்தி, கொடிமரம் ஆகியவை இடம் பெறும். நவகிரகங்களைப் பிரதிட்டை செய்யும் வழக்கம் பிற்காலத்தில் ஏற்பட்டது. நாளடைவில் சிவன் தவிர விநாயகர், முருகன் போன்ற தெய்வத் திருக்கோலங்களும் முதன்மைத் திருக்கோலங்களாகக் கோயில்களில் பிரதிட்டிக்கப்படலாயின என்று சைவ சமயம் (ஓர் அறிமுகம்) என்னும் நூலில் ப. அருணாசலம் கூறுகிறார். இதுவே சிவன் கோயிலின் பொதுவான அமைப்பு முறையாகும். இத்தகைய முறையிலேயே கபாலீசுவரர் கோயில் அமைப்பும் உள்ளது.

## கோயில் எல்லை:

கிழக்கில் பொன்னம்பல வாத்தியார் தெரு, மேற்கில் கிழக்குத் குளக்கரைத் தெரு, தெற்கில் குமரகுருநாத முதலி தெரு, வடக்கில் வடக்கு மாட வீதி ஆகியவைகளை எல்லையாகக் கொண்டு திருச்சுற்று மதிலோடு கபாலீசுவரர் திருக்கோயில் 33 மனைகள், 2234 சதுர அடிப் பரப்பில் அமைந்துள்ளது.

## மேலைக் கோபுரம் :

கபாலீச்சரம் மேற்கு நோக்கியுள்ளது, சிறிய மேலைக் கோபுரம் அமைந்துள்ளது. இக்கோபுர நுழை வாயிலில் வடக்குப் பக்கத்தில் கற்பக விநாயகரும் தெற்குப் பக்கத்தில் பால முருகனும் காட்சி அளிக்கின்றனர். இப்பிரகாரத்திலிருந்து வழிபாடு தொடங்குவது முறையாகும்.

## அண்ணனும் தம்பியும் :

கற்பக விநாயகர் கோயில் மேற்குக் கோபுரத்தின் நுழை வாயிலுக்கு வடக்கில் 3 மீட்டர் நீளமும், 2½ மீட்டர் அகலமும், 3 மீட்டர் உயரமும் கொண்ட சந்நிதியில் மேற்கு நோக்கியுள்ளது.

இந்நுழைவாயிலுக்குத் தெற்கில் 3 மீட்டர் நீளமும், 2½ மீட்டர் அகலமும், 3 மீட்டர் உயரமும் கொண்ட சந்நிதியில் பால முருகர் மேற்கு நோக்கியுள்ளார்.

## அங்கம் பூம்பாவை :

கற்பக விநாயகரையும் பாலமுருகரையும் வணங்கிய பின்னர் இக்கோயிலின் மேற்கு கோபுரத்தின் வழியாகக் கோயிலினுள் செல்லும்போது அங்கம் பூம்பாவை சந்நிதி 3.68 மீட்டர் சதுரப் பரப்பில் அமைந்துள்ளதைக் காணலாம். இதற்கு விமானம் உள்ளது. அங்கம் பூம்பாவையின் திருவுருவம் கிழக்கு நோக்கியவாறு 1 மீட்டர் உயரத்திலுள்ளது. இச்சந்நிதியிலேயே அங்கம் பூம்பாவையின் திருவுருவத்திற்கு வலப்புறத்தில் அங்கம் பூம்பாவையை உயிர்ப்பித்த திருஞானசம்பந்தர் திருவுருவம் வடக்கு நோக்கிய வண்ணம் நிலைப்படுத்தப்பட்டுள்ளது.

## மயில் செய்யும் பூசை :

மேற்கு உள் பிரகாரத்தில் அங்கம் பூம்பாவை சந்நிதியைக் கடந்து வடக்கு நோக்கிச் சென்று கிழக்கு உள்பிரகாரத்தில் செல்லும்போது புன்னைவனநாதர் சந்நிதி 4 மீட்டர் நீளத்திலும், 3½ மீட்டர் அகலத்திலும் இருப்பதைக் காணலாம். இச் கோயிலுக்குரிய தலவிருட்சம் புன்னை மரமாகும். உமையம்மை யார் புன்னை மரத்தடியில் சிவலிங்க வழிபாடாற்றினார். இக் காட்சியைப் புன்னைவன நாதர் சந்நிதி விளக்குகிறது. இங்கு உமையம்மையார் மயில் வடிவில் பூசை செய்யும் காட்சியை இங்குள்ள சிற்பம் சித்தரிக்கின்றது. நான்கு தூண்களுடன் கூடிய முன் மண்டபம் இங்குள்ளது. இச் சந்நிதிக்கு அழகிய விமானம் இருக்கிறது.

இதற்கருகில் மூன்று மீட்டர் சதுரப் பரப்புடைய மேடையில் 2 மீட்டர் சுற்றளவுடைய புன்னை மரம் உள்ளது. இதைப் பக்தர்கள் சுற்றிவர இயலுமாறு போதுமான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

புன்னைவனநாதர் கோயிலுக்குச் சற்று தென்மேற்கில் புன்னை மரத்தின் அருகில் மயில் வளர்ப்பிடம் 5 மீட்டர் நீளமும், 4 மீட்டர் அகலமும் கொண்ட அமைப்பில் அமைந்துள்ளது. இதற்குப் பக்கத்தில் வாகனக் கிடங்குகள், கருவூல அறை ஆகியவை உள்ளன.

## சுந்தரேசர் :

கிழக்கு உள் பிரகாரத்தில் முகப்பில் கிழக்கு நோக்கிய வண்ணம் 8 மீட்டர் நீளமும், 5 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் சுந்தரேசுவரர் சந்நிதி உள்ளது. இங்கு சுந்தரேசுவரர் சிவலிங்க வடிவில் உள்ளார். மகிழ மரம் காட்சி அளிக்கிறது.

## சனீசுவரர் சந்நிதி :

கிழக்குப் பிரகாரத்தில் வடகோடியில் சனீசுவரர் சந்நிதி 2.45 மீட்டர் நீளமும், 2 மீட்டர் அகலமும் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. சனீசுவரர் 1 மீட்டர் உயரத்தில் காக வாகனத்தின்மீது வீற்றிருக்கிறார்.

## நவகிரகங்கள் :

சுந்தரேசுவரர் சந்நிதிக்குத் தெற்கில் மேடையின் மீது 4½ மீட்டர் சதுரப்பரப்பில் நவகிரகங்கள் சந்நிதி உள்ளது. வலம் வருவதற்கு வசதியாக இம்மேடையில் நாற்புறங்களிலும் இடம் உள்ளது.

## ஜெகதீசுவரர்:

நவகிரகங்களின் சந்நிதிக்குத் தெற்கில் ஜெகதீசுவரர் சந்நிதி கிழக்கு நோக்கியவாறு 7½ மீட்டர் நீளத்திலும், 4 மீட்டர் அகலத்திலும் இருக்கிறது. இதற்கு விமானமும் உள்ளது. ஜெகதீசர் இலிங்க வடிவில் உள்ளார்.

## கூத்தாடும் பிள்ளையார்:

இராஜ கோபுர (கிழக்குக் கோபுரம்) வாயிலுக்கு நேரெதிரில் 9 மீட்டர் நீளமும், 6 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பளவில் நர்த்தன விநாயகர் சந்நிதி உள்ளது.

## அண்ணாமலையார்:

நர்த்தன விநாயகர் சந்நிதிக்குத் தெற்கில் அண்ணாமலையார் சந்நிதி 5 மீட்டர் நீளமும், 4½ மீட்டர் அகலமும் கொண்ட பரப்பிலுள்ளது. இச் சந்நிதியின் வடபுறத்தில் தெற்கு நோக்கியவாறு உண்ணாமுலை அம்மையார் கோயில் 2 மீட்டர் நீளமும் 1½ மீட்டர் அகலமும் கொண்ட பரப்பிலுள்ளது.

## சிங்காரவேலர்:

தெற்குப் பிரகாரத்தில் மேற்கு நோக்கியவாறு 9 மீட்டர் நீளமும், 7 மீட்டர் அகலமும் கொண்டு சிங்காரவேலர் சந்நிதி அமைந்துள்ளது. இங்கு சிங்காரவேலர், வள்ளி தெய்வயானை யுடன் காட்சி அளிக்கிறார். இக் கோயிலின் முன்புறம் 7½ மீட்டர் சதுரப் பரப்பில் ஒரு மண்டபம் 14 தூண்களுடன் உள்ளது. இம் மண்டபத்திலுள்ள கொடிமரம், மயில் உருவம், பலிபீடம் ஆகியவை உள்ளன. முருகன் (ஆறுமுகன்) மயில் வாகனத்திலும் வள்ளி, தெய்வயானை இருவரும் இரண்டு யானை வாகனங்களிலும் வீற்றிருக்கிறார்கள்.

## பழனி ஆண்டவர்:

தெற்குப் பிரகாரத்தில் வடக்கு நோக்கிய நிலையில் 4.25 மீட்டர் நீளமும், 3 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் பழனி ஆண்டவர் சந்நிதி இருக்கின்றது. சந்நிதியின் இருபுறங்களிலும் இடும்பன், கடம்பன் ஆகியோர் திருவுருவங்கள் எடுப்பாக உள்ளன.

## வாயிலார் நாயனார்:

பழனி ஆண்டவர் சந்நிதிக்கு மேற்கில் வாயிலார் நாயினார் சந்நிதி 4.25 மீட்டர் நீளமும், 3½ மீட்டர் அகலமும் கொண்ட பரப்பிலுள்ளது. இச் சந்நிதி 1911-ல் கட்டப் பெற்றது. வாயிலார் திருவுருவம் இறைவன்பால் ஒரே சிந்தனையைச் செலுத்திய வண்ணம் உள்ளது. இவர் சிவபெருமானையே சிந்தித்தவண்ணம் திருமயிலையில் முக்தி எய்தினவராவார். பக்கத்தில் வில்வமரம் ஒன்றுள்ளது. இதன் அருகில் நூலகம் உள்ளது.

## அருணகிரிநாதர்:

மேற்குப் பிரகாரத்தில் சிங்காரவேலர் சந்நிதிக்கு நேர் எதிரில் அருணகிரிநாதர் கோயில் மேற்கு நோக்கிய வண்ணம் 3 மீட்டர் சதுரப்பரப்பில் உள்ளது. இக் கோயில் 1980-ம் ஆண்டில் கட்டப்பட்டதாகும்.

## நந்திதேவர்:

மேற்கு கோபுரத்திற்கு நேரெதிரில் 1½ மீட்டர் சதுரப்பரப்பில் நந்திதேவரின் திருவுருவம் கபாலீசுவரரை நோக்கிய வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது.

கொடிமரமும் பலிபீடமும் நந்திதேவரின் திருவுருவத்திற்கு அடுத்துள்ளன.

## கபாலீசுவரர் சந்நிதி :

கபாலீசுவரர் உட்கோயிலினுள் செல்லும்போது நுழைவாயிலின் வலப்புறம் விநாயகர் திருவுருவம் இருப்பதைக் காணலாம்.

கபாலீசுவரர் உட்கோயிலினுள் வடபுறத்தில் வள்ளி தெய்வயானையுடன் ஆறுமுக சுவாமி சந்நிதி கிழக்கு நோக்கிய வண்ணம் 3 மீட்டர் நீளமும், 2½ மீட்டர் அகலமும் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

கபாலீசுவரர் கருவறைக்கு வடபுறத்தில் தெற்கு நோக்கியவாறு நடராஜர் சந்நிதி 3 மீட்டர் சதுரப் பரப்பில் அமைந்துள்ளது. சிவகாமியும் மாணிக்கவாசகரும் அருகில் இருக்கின்றனர். பதஞ்சலி, வியாக்கிரபாத முனிவர் சந்நிதிகளும் உள்ளன. இங்குப் பன்னிரு சைவத் திருமுறைகள் ஒரு பேழையில் வைக்கப்பட்டு பூசிக்கப்படுகின்றன.

நடராஜர் சந்நிதிக்கு எதிரில் கபாலீசுவரர் கருவறையின் வடக்கு வெளிச்சுவரில் துர்க்கையின் திருவுருவம் உள்ளது.

துர்க்கை சந்நிதியையடுத்துக் கருவறையின் வடக்கு வெளிச்சுவர் மாடத்தில் பிரம தேவர் உருவம் அமைக்கப்பட்டுள்ளது.

கபாலீசுவரர் கருவறையின் வடக்கு வெளிச்சுவரை அடுத்தாற்போல் சண்டேசுவரர் சந்நிதி 1½ மீட்டர் சதுரப் பரப்பில் உள்ளது.

வடக்குப் பிரகாரத்தில் திருவுலாத் திருமேனிகளாகச் சந்திரசேகரர், சுக்கிரவார அம்மன், வள்ளி தெய்வயானையுடன் ஆறுமுகர், பிட்சாடனர், மோகினி, குண்டோதரன், அஸ்திரதேவர், விநாயகர், வீரபாகு, சுமித்திரத் தொண்டர் ஆகியோர் உள்ளனர்.

சந்திரசேகரர் முதலியோர், திருவுலாத் திருமேனிகளுக்குத் தொடர்ச்சியாக அறுபத்துமூவர், தொகையடியார் ஒன்பது பேர்கள், சிவநேசர், அங்கம்பூம்பாவை உலாத்திருமேனி ஆகியவை வரிசையிலுள்ளன.



அருள்மிகு கபாலீசுவரர்



கந்தருவி வாகனத்தில் அருள்மிகு கற்பகாம்பாள்

அறுபத்துமூவர் உலாத்திருமேனிகளை அடுத்துச் சரசுவதி, துர்க்கை, இலக்குமி ஆகியோர் திருவுருவங்கள் கிழக்கு நோக்கிய வாறுள்ளன. இவற்றையடுத்து ஐந்து தலை நாகப்படத்தின்கீழ் சிவலிங்கம், காமாட்சி, ஏகாம்பரேசுவரர் பெரிய சிவலிங்கம், ஐந்து தலைப்பாம்பின்கீழ்ச் சிவலிங்கம், இரு நாகங்களின் படங்களின்கீழ் சிவலிங்கம், ஐந்து தலைப்பாம்பின்கீழ் இரண்டு சிவலிங்கங்கள் வயிரவர் ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன.

கபாலீசுவரர் கருவறைக்குக் கிழக்கில் மேற்கு நோக்கிய வண்ணம் ஒரு சிவலிங்கமும், இதனையடுத்து ஐந்து தலைப்பாம்பின் படத்தின் நிழலில் மற்றொரு சிவலிங்கமும், விநாயகர், வீரபத்திரர், சிவலிங்கம் ஆகிய திருவுருவங்களும் உள்ளன. கபாலீசுவரர் கிழக்குக் கருவறை வெளிச்சுவர் மாடத்தில் இலிங்கோத்பவர் திருவுருவம் காணலாம். தெற்கு நோக்கி காலபைரவர் சந்நிதி உள்ளது.

கபாலீசுவரர் கருவறைக்குக் கிழக்கில் 4 மீட்டர் நீளமும் 1 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசகர் ஆகியோர் சந்நிதி உள்ளது. இதனையடுத்து ஒரு சிவலிங்கமும் அடுத்து நந்தி, விநாயகர் ஆகியோர் திருவுருவங்களும் காணப்படுகின்றன.

நந்தி, விநாயகர் திருவுருவங்களை அடுத்து மேற்கு நோக்கியும் வடக்கு நோக்கியும் அறுபத்துமூவர் திருவுருவங்கள் உள்ளன. கபாலீசுவரர் கருவறையின் தெற்குச் சுவர் மாடத்தில் 2 மீட்டர் நீளத்திலும் 1 மீட்டர் அகலத்திலும் தட்சிணாமூர்த்தி திருவுருவம் இருக்கிறது. இதற்கு மேற்கில் கருவறையின் தெற்குச் சுவர் மாடத்தில் விநாயகர் திருவுருவம் நிலைநாட்டப்பட்டுள்ளது.

அறுபத்துமூவர் திருவுருவங்களை அடுத்து வடக்கு நோக்கியவாறு பெரிய கண்ணாடி பொருத்தப்பட்டுள்ளது. இதில் நேர் வடக்கிலுள்ள நடராஜர் திருவுருவப் பிம்பம் காணலாம்.

மேற்கு வரிசையில் சந்திரசேகரர், விநாயகர், கற்பகாம்பாள் ஆகியோர் உலாத்திருமேனிகளாக உள்ளனர்.

கபாலீசுவரர் திருச்சந்நிதி மேற்கு நோக்கி உள்ளது. நுழைவாயிலில் துவாரபாலகர் இருவர் நின்ற நிலையில் காவல் புரிகின்றார்கள். இக்கருவறை 8 மீட்டர் நீளமும் 6½ மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் அமைந்துள்ளது. சந்நிதிமுன் அலங்காரப் பிரபைத் தீபமும், கருவறையினுள் சூரிய சந்திரப்பிரபை அலங்கார விளக்கும் உள்ளன. கருவறையில் கபாலீசுவரர் இலிங்கத்திருமேனியாகக் காட்சியளிக்கிறார். இத்திருமேனிக்கு வெள்ளிக்கவசம் உள்ளது.

## கற்பகவல்லி :

கபாலீசுவரர் சந்நிதிக்குமுன், வெளியில் இடப்புறம் தெற்கு நோக்கியவண்ணம் கற்பகாம்பாள் சந்நிதி இருக்கிறது. இச்சந்நிதி 10 மீட்டர் நீளமும் 6½ மீட்டர் அகலமும் கொண்டுள்ளது. இச்சந்நிதிக்குமுன் சிம்மத்தின் உருவமும் பலிபீடமும் உள்ளன. இச்சந்நிதியின் தென்மேற்கு கோடியில் பள்ளியறை உள்ளது. கற்பகாம்பாள் சந்நிதி உட்பிரகாரத்தில் அபிராமி அந்தாதிப் பாடல்கள் பொறிக்கப்பட்டுள்ளன. உட்பிரகாரச் சுவர்களில் தெய்வக்காட்சிகளை விளக்கும் படங்கள் வரிசையாக வைக்கப்பட்டுள்ளன. கற்பகாம்பாள் தெற்கு நோக்கியவாறு நின்று அருள்புரிகிறார்.

மகாமண்டபத்தில் தெற்குப்புறத் தூணில் இராமர், இலட்சுமணர், சீதை, அனுமன் ஆகியோர் திருவுருவங்கள் உள்ள தூண் இருக்கிறது.

வடக்குப் பிரகாரத்தில் தென்கிழக்கு மதில் சுவரை ஒட்டி பசுமடம், வாகன அறைகள், மடைப்பள்ளி ஆகியவை அமைந்துள்ளன. மடைப்பள்ளிக்கு வடபுறத்தில் தீர்த்தக்கிணறு, நீர் இறைக்கும் அறை, சந்தனக் கிடங்கு ஆகியவை உள்ளன.

## வாகனக் கிடங்குகள் :

பூம்பாவை சந்நிதியை அடுத்து மேற்குப் பிரகாரத்தில் வாகனக் கிடங்குகள் உள்ளன. பூம்பாவை சந்நிதிக்கு எதிரில் பெரிய கோயில் மணி உள்ளது. வடக்குப் பிரகாரத்திலும் வாகனங்களை வைக்கும் அறைகள் உள்ளன. அந்த வரிசையில் கிழக்குப் பகுதியில் ஆலய அலுவலகம், யாக சாலை, கல்யாண மண்டபம், வாகனக் கிடங்கு ஆகியவை உள்ளன. இப்பகுதியில் மகிழ மரம் ஒன்றுள்ளது.

## கடைகள் :

கிழக்கு மதில் சுவரின் வெளிப்புற வடக்குப் பகுதியில் கிணறு ஒன்றும் கடைகளும் உள்ளன. வடக்கு மதில் சுவரின் வெளிப்புறத்தில் இருபுறமும் கடைகளும் இடையில் ஆலய அலுவலகமும் உள்ளது. கிழக்கு மதில் சுவரின் வெளிப்புறத்தில் வடக்குப் பகுதியில் கடைகள் உள்ளன.

## தேரும் குளமும் :

சந்நிதித் தெருவும் கிழக்கு மாடவீதியும் சேரும் முனையில் வடக்குப் பக்கத்தில் கோயில் தேர், தகரக் கூரை வேயப்பட்ட இடத்தில் உள்ளது. திருக்குளம் கோயிலின் மேற்குப் புறத்தில் உள்ளது.

## மேலைக்கோபுரம் :

இக்கோபுரம் கபாலீசுவரர் சந்நிதிக்கு நேரெதிரில் 8 மீட்டர் நீளமும் 5 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் நான்கு தளங்களையும், ஏழு கலசங்களையும் கொண்டுள்ளது. இதன் உயரம் 30 மீட்டராகும்.

## இராஜகோபுரம் :

கோயிலின் கிழக்குப்பகுதியில் இராஜகோபுரம் உள்ளது. இது 20 மீட்டர் நீளமும் 15 மீட்டர் அகலமும் உடைய பரப்பில் ஏழு தளங்களும் ஒன்பது கலசங்களும் கொண்டுள்ளது. இதன் உயரம் 40 மீட்டராகும். இக்கோபுரம் ஏறத்தாழ கி.பி. 1902 ஆம் ஆண்டு வாக்கில் கட்டப்பட்டதென்று கூறுகின்றனர். இந்த இராஜகோபுரம் கபாலீசுவரர் கோயில் அறங்காவலர் அரசூர் பார்த்தசாரதி முதலியார் அவர்களால் 1947 ஆம் ஆண்டு சீர்திருத்தம் செய்யப்பெற்றது. 1948 ஆம் ஆண்டு கும்பாபிடேகம் நடந்தது. 1982 ஆம் ஆண்டில் கும்பாபிடேகம் நடைபெற்றபோது மீண்டும் இக்கோபுரம் சீர்திருத்தம் செய்யப்பெற்றது.

**மண்டபங்கள் :**

கிழக்கு கோபுரத்திற்கு நேர் கிழக்கில் 50 மீட்டர் தொலைவில் 13 மீட்டர் சதுரப்பரப்பில் 16 தூண்களைக் கொண்டுள்ள மண்டபம் 6 மீட்டர் உயரத்திலுள்ளது. இம்மண்டபத்தில் மேல்நிலையில் நான்கு மூலைகளிலும் இடப உருவங்கள் உள்ளன. இங்கு உலாத்திருமேனிகள் வெளியில் உலாச்செல்லுமுன் தங்குகின்றன.

கபாலீசுவரர் சந்நிதி முன்மண்டபம் 24 மீட்டர் நீளமும், 12 மீட்டர் அகலமும் கொண்டு 28 தூண்களுடன் 6 மீட்டர் உயரத்திலுள்ளது.

அலங்கார மண்டபம் சனீசுவரர் சந்நிதிக்குத் தெற்கில் 10 மீட்டர் நீளமும் 8 மீட்டர் அகலமும் கொண்டமைந்துள்ளது.

ஊஞ்சல் மண்டப்பம் நான்கு மீட்டர் சதுரப் பரப்பில் நான்கு தூண்களுடன் ஆறு மீட்டர் உயரத்திலுள்ளது. இங்கு கற்பகவல்லி ஊஞ்சல் காட்சி நடைபெறுகிறது.

தெற்கு பிரகாரத்தின் மேற்கு கோடியில் 10 மீட்டர் நீளமும் 8 மீட்டர் அகலமும் கொண்ட பரப்பில் 16 தூண்களுடன் 6

மீட்டர் உயரத்தில் மண்டபம் கட்டப்பட்டுள்ளது. இப்போது இம்மண்டபம் விரிவு படுத்தப்பட்டுள்ளது. நவராத்திரி விழா இங்கு கொண்டாடப்பெறுகிறது. சமயச் சொற்பொழிவுகளும் இங்கு நிகழ்த்தப்பெறுகின்றன. இதனை துவஜாரோஹண மண்டபம் என்றும், திருமுறை மண்டபம் என்றும் அழைப்பர். நவராத்திரி யில் கற்பகவல்லி கொலு வீற்றிருப்பாள். பிரதோஷ நாயகர் அமரும் நாலுகால் மண்டபம் பிரதோஷ மண்டபம் என்றழைக்கப்படும். இது கற்பகாம்பாள் சந்நிதிக்குநேர் எதிரில் உள்ளது.

## வாகனங்கள்

இக்கோயிலில் அதிகாரநந்தி, இடபம், யானை, பெருச்சாளி, சிங்கம், புலி, கிளி, அன்னம், பூதன், பூதகி, தாரகாசுரன், மயில், நாகம், காமதேனு, ஆடு ஆகிய வாகனங்களும் புருடாமிருகம், சூரிய சந்திர பிரபைகளும், சப்பரம், கற்பகவிருட்சம், பல்லக்குகள் ஆகியவையும் உள்ளன.

இவ்வாறு கோயிலின் முதலில் கூத்தாடும் பிள்ளையார் விளங்க, நடுப்பகுதியில் கபாலீசுவரரும், கற்பகவல்லியும் திகழ, சிங்காரவேலர் தெற்குப் பகுதியில் தனிச்சந்நிதியில் பொலிய, ஏனைய பரிவார தெய்வங்கள் பிரகாரத்தைச் சுற்றிலும் இருக்க, கபாலீசுவரர் கோயில் அமைந்துள்ளது.

## கூத்தாடும் விநாயகரைக் கைகூப்பி வணங்குவோம் :

திருமயிலைக் கபாலீசுவரத்தில் தொன்மைத் தெய்வங்களாகக் கூத்தாடும் பிள்ளையார், கபாலீசுவரர், கற்பகவல்லி, சிங்காரவேலர் ஆகியோரைக் குறிப்பிடுவர்.

இவர்களுள் கூத்தாடும் பிள்ளையார் தல விநாயகராவார். கிழக்குக் கோபுர வாயிலில் திருக்கோயில் கொண்டு கிழக்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். இவர் நர்த்தன விநாயகர், நிருத்த விநாயகர், நடன விநாயகர் என்று வடமொழியில் குறிக்கப்

பெறுகிறார். இங்குள்ள மூலவர் பிரதிட்டை செய்யப்பட்டவர் அல்லர். சுயம்பு என்று கூறுகின்றனர். ஆனால், இப்பிள்ளையார் நடனமாடுகின்ற நிலையில் படைப்புச் சிற்பமாக கருங்கல்லில் செதுக்கப்பட்டுள்ளார். கந்தவேள் சக்திவேல் பெற்று கபாலீசுவரர் கட்டளைப்படி வலக்காலை ஊன்றி நடனமாடும் நிலையில் காட்சி அளிக்கிறார்.

படைப்புயிர்கள் பெறும் ஆனந்தம் அளவிடற்கரியது. இங்கேயெனச் சொல்லுமாறு போல ஆனந்தக் கூத்தாடுவதால் மூத்தப்பிள்ளை கூத்தாடும் பிள்ளையார் எனப்பட்டார் என்று கோயில் விளக்கக் கையேடு கூறுகின்றது. இப்போது கபாலீசுவரர் கோயில் உள்ள இடத்தில் முற்காலத்தில் கூத்தாடும் பிள்ளையார் சந்நிதி மட்டுமே இருந்தது என்று கூறுகின்றனர். திருமயிலை சிற்றிலக்கியங்களில் பெரும்பாலனவற்றின் கடவுள் வணக்கச் செய்யுள்கள் கூத்தாடும் பிள்ளையாரைப் பற்றியவை. திருமயிலை தலபுராணங்களும் தல விநாயகர் துதிபாடுகின்றன. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களும் கூத்தாடும் விநாயகர் கூத்தாடுவதற்கான காரணத்தைக் கற்பனை நயம்பட பாடியுள்ளார். அன்பர்கள் தாங்கள் நேர்ந்துகொண்ட முறைப்படி, சிதறு தேங்காய்களை கூத்தாடும் பிள்ளையார் முன்புள்ள தொட்டியில் உடைப்பது குறிப்பிடத்தகுந்ததாகும்.

## கபாலியைக் கற்பகத்தைக் கண்ணாரக் காண்போம் :

### கபாலீசுவரர் :

இங்குள்ள இறைவன் சிவலிங்க வடிவில் காட்சியளிக்கிறார். இவரை புன்னைவனத்து ஈசன், வேத நகரினான், சுக்கிரபுரியான், கபாலீச்சரத்தினான் என்றும் அழைக்கின்றனர். கபாலீசுவரரை பூம்பாவை ஈசன், புன்னைவன மயூரநாதன், காபாலி மாநகரான் என்றும் போற்றுகின்றனர். இச்சிவலிங்கம் பிரதிட்டை செய்யப்பட்ட சிவலிங்கமாகும். இப்பெரிய சிவலிங்கத் திருமேனியோடு மேற்கே பார்த்தவாறு எழுந்தருளியிருக்கிறான் கபாலீசுவரன். கபாலீசுவரருக்கு உற்சவ மூர்த்தி உள்ளது.

இத்தலத்தில் இறைவன் மேற்கு நோக்கி எழுந்தருளியிருக்கிறான். சிவபெருமானுக்கு ஐந்து திருமுகங்கள் உண்டு. அவற்றுள் மேற்கு நோக்கிய திருவுருவம் சத்தியோஜாதம் எனப்படும். இம்மூர்த்தி வழிபடுவோருக்கு உடனே காட்சி தந்து அருள் வழங்கும் என்று கூறுகின்றனர். இவ்விறைவனை, `நற்றாமரைமலர்மேல் நான்முகனும் நாரணனும் உற்றாங் குணர்கிலா மூர்த்தி' என்று திருஞான சம்பந்தர் சிறப்பித்துப் பாடியுள்ளார். மயிலுருவான அம்மையார் வழிபட, மயில் உருவத்தை நீக்கி, அருளியது இச்சிவலிங்கமேயாகும். பிரமன், மறை, வெள்ளி, இராமர் முதலியோர் வழிபட்ட பெருமை உடையதாகும். பல்வேறு சிற்றிலக்கியங்கள் கபாலீசுவரர் மீது பாடப்பட்டுள்ளன.

## கற்பகவல்லி :

வேண்டுவோர்க்கு வேண்டுவனவெல்லாம் தரும் விண்ணுலகத்துக் கற்பகத்தருவைப் போல மண்ணுலகத்துக் கற்பகமாய்க் காட்சியளிக்கும் இறைவனுடைய சக்தியே `கற்பகவல்லி' என்றும் திருப்பெயரில் இங்கே விளங்குகிறாள். அருளை வழங்குகிறாள். கபாலீசுவரத்தில் கற்பகவல்லி தெற்கு நோக்கிக் கோயில் கொண்டிருக்கிறாள். அம்மை நின்ற நிலையில் காட்சி அளிக்கிறாள். அம்மையின் உலாத்திருமேனி உள்ளது. இவளைக் கற்பகாம்பிகை என்றும் அழைப்பர். வாயிலார் நாயனார் சிவபெருமான் நிழற்கீழ்ப்புக வாயிலாய் நின்றருள் செய்த அம்பிகை என்று போற்றப்படுகின்றார். கற்பகவல்லியின் பொற்பதம் புகழ்ந்து பலர் பாடியுள்ளனர். இக்காலத்தில் கபாலீசுவரர் கோயிலில் கற்பகவல்லியின் வழிபாடு மிகுந்துள்ளது. இது சக்தி வழிபாடு பெருகியுள்ளதைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

## அண்ணல் சரவணச் சிங்கார வேலன் அடி பணிவோம்:

கபாலீசுவரரை வழிபட்டுச் சக்திவேலைப் பெறுகிறான் முருகன். சிங்காரமான வேலைப் பெற்றதால் சிங்காரவேலன் ஆயினான்

என்று கூறுகிறார்கள். சிக்கல்சிங்கார வேலன் புகழ் கண்டு இங்குள்ள வேலனையும் சிங்காரவேலன் என்று அழைத்திருக்கக் கூடும். இப்பெயர் வழக்கு கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டில் இல்லையென்பது அருணகிரிநாதரின் திருப்புகழால் தெரிய வருகின்றது. அருணகிரிநாதர் மயிலையிலுள்ள முருகனைப் புகழ்ந்து பாடியுள்ள பத்துப் பாடல்களில் ஒரு பாடலில் கூடச் சிங்காரவேலன் என்று குறிப்பிடவில்லை. அக்காலத்தில் சிங்காரவேலன் என்னும் பெயர் வழக்கில் இருந்திருந்தால், அருணகிரிநாதர் அப்பெயரைப் பயன்படுத்தியிருப்பார். ஆகவே, சிங்காரவேலன் என்னும் பெயர் வழக்கு, புதிய கபாலீசுவரர் கோயில் கட்டப்பட்ட காலத்திலே ஏற்பட்ட ஒன்று என்று கொள்ளுதலே பொருத்தமுடையதாகும்.

சிங்காரவேலர் மூல விக்கிரகம் மிக அழகிய திருவுருவம். ஆறுமுகங்கள் பன்னிரு கைகளுடன் மயில் மீது அமர்ந்த கோலம். மேற்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். வள்ளியம்மையும், தெய்வயானையும் யானை மீது அமர்ந்த கோலத்தில் முருகனின் இருபுறமும் உள்ளனர். இது இத்தலத்தின் தனிச்சிறப்பாகும். சிங்காரவேலருக்குத் தனிக்கொடி மரமும் உள்ளது. சிங்காரவேலருக்கு இரண்டு உற்சவ சிலைகள் உள்ளன. வழிபாடுகள் முறையாக நடக்கின்றன. சிங்காரவேலர் பெயரில் பல நூல்கள் எழுந்துள்ளன. திரு மயிலைச் சிங்கார வேலர் திருப்புகழ்ச் சபை 1970 முதல் இயங்கி வருகிறது.

## அழகிய மாடவீதிகள்:

**வைத்தீசுவரன் கோயில் விளக்கழகு**
**மாயூரம் கோபுர அழகு**
**திருவாரூர் தேர் அழகு**
**மயிலாப்பூரில் மாடவீதிகள் பேரழகு**

என்று மயிலை மாடவீதிகள் சிறப்பித்துப் பேசப்படுகின்றன. திருநாவுக்கரசர், 'மங்குல் மதி தவழும் மாட வீதி மயிலாப்பில்' என்று பாடியுள்ளார் 'நீளும் மணி மாட வீதிகள்' 'வானளக்கும் பொன் மாடவீதி' என்னும் தொடர்களில் திருமயிலை உலா, மயிலை மாட வீதிகளைச் சிறப்பித்துப் பேசுகிறது.

## வரலாற்றுச் சிறப்பு:

கி.பி. 1672-ல் பிரெஞ்சுக்காரர்களுக்கும் மூர்துருக்கருக்கும் நடந்த போரில் பிரெஞ்சுப் படையின் ஒரு பகுதி இப்போதுள்ள கோயிலில் பதுங்கியிருந்த செய்தியால் வரலாற்றுச் சிறப்புப் பெறுகிறது.

## சமுதாய நிலையம்:

தேவாரப் பாடசாலை, கருணை இல்லம், வழிப்போக்கர் தங்கும் விடுதி, திருமண மண்டபம், நூல் நிலையம் முதலியவை உள்ளதாலும், கலை நிகழ்ச்சிகள் நடப்பதாலும் கபாலீசுவரர் கோயில் ஒரு சமுதாய நிலையமாக விளங்குகிறது.

## வழிபாடு:

இக் கோயிலில் காலைச் சந்திப் பூசை, உச்சிகால பூசை, பிரதோஷ கால பூசை, இரவுக்கால பூசை என்னும் நான்கு பூசைகள் நாள் தோறும் நடத்தப் பெறுகின்றன. இரு கோத்திரங்களைச் சேர்ந்த குருக்கள்களால் பரம்பரை உரிமையாகப் பூசைகள் செய்யப்பட்டு வருகின்றன.

## கோயிற் சிறப்புகள்:

உமையம்மையார் மயிலுருக் கொண்டு கபாலீசுவரரைப் பூசித்தது, முருகப் பெருமான் மயிலை நாதனை வழிபட்டு சக்திவேல் பெற்றது; நான்முகன் பூசை செய்து தனது பாவத்தைப் போக்கிக் கொண்டது ஆகிய சிறப்புகளையுடையது கபாலீசுவரம். மேலும், கண்ணிழந்த சுக்கிரன் கபாலீசுவரரை வழிபட்டு மீண்டும் கண்பார்வை பெற்ற பெருமையுடையது. இராமபிரான் தங்கி வணங்கித் திருவிழா நடத்திய சிறப்புப் பெற்றது. வாயிலார் நாயானார் வழிபாடு செய்த இடம். சம்பந்தர், அப்பருடைய தேவாரப் பாடல்கள் பெற்ற திருக்கோயில், அங்கம் பூம்பாவையான அற்புதச் செயல் நிகழ்ந்த இடம் என்னும் சிறப்புகளையும் உடையது கபாலீசுவரமாகும்.

# 4. தாமரைத் தடாகத்தில் சீதப் புனலாடுவோம்

கபாலீசுவரர் கோயிலுக்கு மேற்குப் பக்கத்தில் நீராழி மண்டபத்தோடு கூடிய பெரிய திருக்குளம் ஒன்று இருக்கிறது. இது கபாலி தீர்த்தம் என்று அழைக்கப்படுகிறது. இதனை மயிலை நாட்டு முத்தையப்ப முதலியார் கட்டினார் என்பர். திருமயிலை உலாவிலும்,

*'பொன் கோவிலும் மதிலும் புண்டரிகப் பூந்தடமும்*
*நேசமுடனே அமைத்து நித்தம் நித்தம் - பேசும்*
*அன்பின் போற்றி செய்யும் முத்தியப்பன்'*

என்று திருக்குளத்தைத் தோண்டுவித்தவன் முத்தியப்பன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூலில் இக்குளம் புண்டரிகப் பூந்தடம்-தாமரைத் தடாகம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. முன்பு இக்குளத்தில் தாமரைக் கொடிகள் நிறைந்து இருந்தது. இக்குளம் பதினாறாம் நூற்றாண்டில் தோண்டப்பட்டிருக்க வேண்டும். இக் குளத்துக்குப் படிக்கட்டுகள் அமைக்கும் பணி 1910-ம் ஆண்டு தொடங்கி 1925-ம் ஆண்டு நிறைவடைந்தது. இத் திருக்குளம் கபாலீசுவரர் கோயிலைவிடப் பழமையானது போல் காட்சி அளிக்கிறது என்று எஸ். கல்யாணசுந்தரம் கூறுகிறார். 1798-ல் எழுதப்பட்ட சென்னை நகரப் படத்தில் (Map of Madras) மயிலைத் திருக்குளம் காட்டப்பட்டிருக்கிறது. இது 629 அடி நீளமும், 475 அடி அகலமும் உள்ளது.

அண்மைக் காலத்தில் சரிவர மழை பெய்யாமையினால் குளம் வறண்டு போயிருந்தது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெயலலிதா அவர்களின் ஆணைப்படி திருக்குளத் திருப்பணி 1992-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் நடைபெற்றது. 1993-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் இப்பணி நிறைவடைந்தது. பிப்ரவரி மாதம் 6, 7, 8 தேதி தைப் பூசத்தையொட்டி, மூன்று நாள் தெப்போற்சவம் நடைபெற்றது. இத்திருப்பணிக்கு ரூ. 35 லட்சம் ஒதுக்கப்பட்டது. இப்போது திருக்குளத்தில் தண்ணீர் உள்ளது.

இதற்குச் சத்தி கங்கை, முத்தி தீர்த்தம் என்னும் வேறு பெயர்களுமுண்டு. கலிங்க தேசத்து அரசன் தருமன் என்பவன் மகன் சாம்பவன் பஞ்சமா பாதகங்களைச் செய்து கடைசியாகப் பங்குனி உத்திரத்தில் இத் தீர்த்தத்தில் மூழ்கி உள்ளம் கசிந்து தான் செய்த பாவங்களுக்காக மூழ்கி வருந்தி மெய்யன்போடு கபாலீசுவரைக் கண்டு தொழுதான்; பிறகு முக்தி அடைந்தான் என்று தலபுராணம் கூறுகிறது. பௌர்ணமியன்றும், விதிபாத யோகத்தினன்றும், ஆதிவாரத்திலும், ஐப்பசித் திங்களில் வரும் திருவோண நட்சத்திரத்திலும் மன உருக்கத்தோடு இத் தீர்த்தத்தில் நீராடித் தொழுகின்றவர்கள் முத்தி அடைவார்கள் என்று கூறப்படுகின்றது.

இக்குளத்தின் மேற்குக் கரையில் எட்டுக்கால் மண்டபம், 10 மீட்டர் நீளம், 4 மீட்டர் அகல அளவில் உள்ளது. இதன் அருகில் ஜ்யேஷ்டா தேவியின் உருவச் சிலை உள்ளது. இதனை மூதேவி என்று குறிப்பிடுவர். இச்சிலை பழைய கபாலீச்சரத்தைச் சேர்ந்தது என்று கூறலாம் என்றும், இச்சிலை கி.பி. ஏழாம் நூற்றாண்டில் செய்யப்பட்டதென்றும் மா. இராசமாணிக்கனார் கருதுகிறார். குளத்தின் வடமேற்கு மூலையில் மூன்று கால் மண்டபம் ஒன்று உள்ளது. அம் மண்டபம் இசுலாமியருக்கு உரியது போல் தோன்றுகிறது. தெற்குக் கரையில் உள்ளது ஞானப் பால் மண்டபம் என்று அழைக்கப்படுகிறது. மேற்குக் கரையிலுள்ள இரு சிறு மண்டபங்களில் அறுபத்து மூவர் அன்று சம்பந்தருக்கும் சிவநேசச் செட்டியாருக்கும் அபிடேகம் நடைபெறும். வடக்கில் உள்ளது சிவலிங்க மண்டபமாகும். கிழக்கில் உள்ளது மாட்டுப் பொங்கல் அன்று அம்மன் நீராடும் இடமாகும்.

இக் காலத்தில் குளத்தின் கிழக்குக் கரை வெளிப் பகுதியில் புரோகிதம் செய்யும் அந்தணர்கள் குழுமி நிற்பர். மேற்குக் கரையில் பேருந்துகளும், தெற்குக் கரையில் காய்கறி கடைகளும், வடக்குக் கரையில் சிறுவர் விளையாட்டுப் பொருட்கள் விற்கும் கடைகளும் நிறைந்துள்ளன.

எஸ். கல்யாணசுந்தரம் திருக்குளம் பற்றிப் பின்வருமாறு கூறுவார்: இக்குளம் இருக்கும் இடம் முகமதிய பக்கீர்களுக்கு

உரியது. அவர்கள் வெளியூருக்குச் சென்றிருந்த நேரத்தில், அக்காலத்தில் நவாப்பிடம் அமைச்சராக இருந்த அந்தணர் ஒருவரின் கட்டளையால் பெரிய குளம் தோண்டப்பட்டது. ஊருக்குத் திரும்பிய பக்கீர்கள் இதைக் கண்டு பெரிதும் கோபமடைந்தனர். இதை அறிந்த அமைச்சர், நவாப்பிடம் சென்று இக்குளம் கோயிலுக்காகத் தோண்டப்பட்டதன்று, நம்பிக்கையுடையவர்கள் பயன்படுத்துவதற்காகத் தோண்டப் பட்டது. இக்குளத்தை முகமதியர்களும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கூறி நவாப் மற்றும் முகம்மதிய பக்கீர்களுடைய கோபத்தைத் தணித்தார். ஆனால், நாளடைவில் மொகரம் திருவிழாவின் போது ஆண்டில் ஒரு நாள் மட்டும் பயன்படுத்தும் உரிமை முகமதியர்களுக்குத் தரப்பட்டது.

'சுமார் 300 ஆண்டுகளுக்கு முன் தற்காலக் 'கலச மஹால்' என்னும் இடத்தில் இருந்து அக்காலம் ஆண்டு கொண்டிருந்த நவாப் ஒருவரிடம் மயிலை நாட்டாராகிய முதலியார் ஒருவர் துபாஷி (துவிபாஷி)யாக இருந்தார். அவர் தற்காலக் கோயிலைக் கட்டினாராம். பிறகு அதற்குக் குளம் வேண்டியிருந்தபடியால் இக் கோயிலின் மேற்குப் புறத்தில் முகம்மதியர்களுடைய சமாதிகளாக இருந்த ஸ்தலம் பாழடைந்திருப்பதைக் கண்டு நவாபிடம் இரகசியமாக உத்திரவு பெற்று இரண்டு மூன்று நாட்கள் இரவில் அநேக ஆட்களைக் கொண்டு சமாதிகளை எல்லாம் எடுத்துவிட்டுக் குளமாக வெட்டிவிட்டார். இதைக் கண்ட திருவல்லிக்கேணியில் வசித்திருந்த முகம்மதியர்கள் நவாப்பிடம் போய் முறையிட, நவாப், 'ஆனது ஆய்விட்டது. இப்போது என்ன செய்வது?' ஆயினும் முகம்மதியர்களாகிய நம்முடைய உரிமை போகாதபடி வருடந்தோறும் மொகரம் பண்டிகையில் 10வது நாள் அல்லாப் பீலிகளை அக்குளத்தில் தோய்க்கும்படியான பாத்யதை உண்டு, என்று உத்திரவு செய்து அவர்களைச் சமாதானப்படுத்தினாராம்.

இதற்குச் சான்றாக தற்காலமும் முகம்மதியர் பண்டிகையாகிய மொகரம் பண்டிகை 10வது நாள் அக்கம் பக்கத்திலுள்ள எல்லாப் பீலிகளையும் மயிலாப்பூர் கோயில் பெரிய குளத்தில தோய்க்கும்

வழக்கம் நடந்து வருகிறது. அன்றியும் மயிலாப்பூரில் சாதாரணமாக வருடந்தோறும் நடக்கும் கபாலீசுவரர் கோயில் பிரம்மோற்சவம், வருடந்தோறும் மாறி மாறி வரும் மொகரம் பண்டிகை காலத்தில் சேர்ந்து வந்தால் கபாலீசுவரர் பிரம்மோற்சவம் மறு மாதத்திற்குத் தள்ளி வைக்கப்பட வேண்டும் என்னும் நிர்ணயமும் இருக்கிறது என்று பம்மல் சம்பந்த முதலியார் குளம் வெட்டப்பட்ட கதையைக் கூறியுள்ளார்.

சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பு ஆற்காடு நவாப்பிடம் துபாஷாக இருந்த முதலியார் ஒருவர் இக் கோயிலுக்குத் தக்க குளம் ஒன்றைக் கட்ட முயன்று வந்தார். இந்த இடம் முகம்மதியர்களின் புதைகாடாக உபயோகிக்கப்பட்டு வந்தது. முதலியார் நவாபிடம் இந்த இடத்தைக் குளம் வெட்ட உதவ வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். நவாபும் ஒரு நிபந்தனையோடு இதற்கு இணங்கினார்.

பல்லாவரத்தில் ஒரு முஸ்லீம் பண்டிகை (உருஸ்) மூன்று நாட்கள் நடத்தப் போவதாகவும், சென்னையிலிருக்கும் ஒவ்வொரு முஸ்லீம் குடும்பமும் இங்குச் செல்ல வேண்டும் என்றும் அவர்களுக்கு இலவச உணவு அளிக்கப்படும் என்றும் நவாப் தண்டோரா மூலம் அறிவித்தார். முதலியாரை இரகசியமாக அழைத்து ஆட்களைச் சித்தமாக வைத்துக் கொண்டு அந்த மூன்று நாட்களுக்குள்ளேயே குளத்தை வெட்டி முடிக்க வேண்டும் என்றும், பிறகு ஒரு வருட காலத்திற்கு முதலியார் நவாபின் அரண்மனையிலேயே தலைமறைவாக ஒளிந்து இருக்க வேண்டும் என்றும் எச்சரித்தார். அவ்வாறே யாவும் நடந்தன.

அக்காலத்தில் வாகன வசதிகள் அதிகம் இல்லாமையினால் பல்லாவரம் சென்றவர்கள் நிதானமாகவே வந்தார்கள். திரும்பி வந்து பார்த்த போது தமது முன்னோர்களின் சமாதிகள் அகற்றப்பட்டு, அவ்விடத்தில் ஒரு குளம் உருவாகி இருப்பதைக் கண்டார்கள். அவர்கள் உடனே நவாபிடம் போய் முறையிட்டனர். நவாப் கோபத்தில் சீறி எழுபவர் போல் பாசாங்கு செய்து, இத் துணிகரமான காரியத்தைச் செய்த

துபாஷி முதலியாரை ஒரு வருடத்திற்குள் பிடித்துத் தருபவருக்கு நிறைய வெகுமதி அளிப்பதாகவும், பிடிபட்டால் முதலியாரை உடனே சிரச்சேதம் செய்வதாகவும் கூறியனுப்பினார்.

ஓர் ஆண்டு காலம் கழித்து முதலியாரை வெளியில் கண்டவர்கள் நவாபிடம் சொல்ல, அவர் தாம் வைத்த தவணைக்காலம் தீர்ந்துவிட்டது என்று சொல்லிவிட்டார். ஆயினும், முகமதியரைத் திருப்தி செய்ய, குளம் இந்துக்களுடையது ஆயினும், நிலம் முகமதியர்களுடையதாக இருந்த காரணத்தால், வருடந்தோறும் முகரம் பண்டிகையில் கடைசி நாள் முகமதியர் தம் 'பர்சாக்களை' இக்குளத்தில் தோய்க்கலாம் என்றும், பிறகு குளத்தைச் சாஸ்திரப்படி சுத்தம் செய்யலாம் என்றும் அன்று கபாலீசுவரர் ஆலயக் கதவுகள் மூடியிருக்க வேண்டும் என்றும், சில ஆண்டுகளுக்கு ஒரு முறை கோயில் பிரம்மோற்சவமும் முகரம் பண்டிகையும் ஒரே காலத்தில் வருமாயின் இந்துக்கள் பிரம்மோற்சவத்தை அடுத்த மாதம் ஒத்தி வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் தீர்ப்புச் செய்து, இரு கட்சிகளையும் சமாதானப்படுத்தினார். இவ் வழக்கம் இப்போதும் அனுசரித்து வரப்படுகிறது என்று எஸ். நடராஜன், மயிலை கற்பகம் என்னும் நூலில் கூறுகிறார்.

இந்தக் குளம் தொடர்பாக நவாபு அளித்த தீர்ப்பு அடங்கிய செப்புப் பட்டயங்கள் இருப்பதாகப் பம்மல் சம்பந்த முதலியார் தன்னிடம் கூறியதாக அவருடைய மகன் வரதராஜ முதலியார் கூறுகிறார். சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பின்படி, முகரமும் பிரம்மோற்சமும் சேர்ந்து வந்தால், முகரத்திற்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது என்று கூறுகின்றனர்.

## திருக்குளத்தில் நடைபெறும் திருவிழாக்கள்:

தைத் திங்களில் பூசத்தில் தெப்போற்சவம் நடைபெறுகின்றது. பங்குனித் திங்களில் பிரம்மோற்சவம் நடைபெறும்போது மேற்குக் கரையில் திருஞான சம்பந்தர் அங்கம் பூம்பாவையாக்கிய அற்புதச் செயலும், பத்தாம் நாள் காலையில் கபாலீசுவரர் பஞ்ச மூர்த்திகளுடன் தீர்த்தவாரி உற்சவமும் நடைபெறுகின்றது.

கிரஹணகாலங்களில் தீர்த்தவாரி கிழக்கே உள்ள மண்டபத்தில் நடைபெறுகின்றது. திரு ஆடிப்பூரம், தை மாதம் 2-ந் தேதி கனு உத்ஸவத்தன்று இங்கே கற்பகாம்பாள் உத்ஸவ விக்கிரகத்திற்கு சிறப்பு அபிஷேகம்-உத்ஸவம் நடைபெறுகின்றது.



427/1--2c.

## 5. மாமயிலையில் மலிவிழாக் காண்போம்

திருவிழாக்கள் மக்களுக்கு மகிழ்ச்சியைத் தருவனவாகும். தமிழ்நாட்டில் விழாக்கள் வீடுகளிலும் கோயில்களிலும் சிறப்பாக நடைபெறுகின்றன. கோயில்களில் நடைபெறும் விழாக்களைத் திருவிழாக்கள் என்பர். நாள்தோறும் சிறப்பாகச் செய்யக்கூடிய வழிபாடுகளைத் திருவிழா என்பர். திங்கள் விழா, ஆண்டு விழா, பல ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் விழா என்று திருக்கோயில் விழாக்கள் மூவகைப்படும்.

### விழா:

விழா என்னும் சொல்லுக்கு மகிழ்ச்சியைத் தருவது என்பதே பொருளாகும். விழா என்னும் சொல்லுக்கு அடிச்சொல் விழை என்பதாகும். இதற்கு விரும்பு, அன்பு செலுத்து என்பவையே பொருள்களாகும். விழாவைக் கொண்டாட்டம் என்றும் கூறுகின்றனர். திருவிழாக்களில் சடங்குகள் மட்டுமே உள்ளன என்று எண்ணக் கூடாது. தத்துவ விளக்கங்களும் அடங்கியுள்ளன.

### திருவிழாவில் இறைவன் திருவீதி உலா:

கோயில் திருவிழாக்களில் இறைவன் கோயிலைச் சுற்றியுள்ள மாட வீதிகளில் உலா வருதல் குறிப்பிடத்தகுந்த சடங்காகும். உலா வரும் நிகழ்ச்சி சமுதாயத்தில் உள்ளோர் அனைவருக்கும் இறைவன் பொதுவானவன் என்பதை உணர்த்துகிறது. தொலை தூரங்களிலிருந்து வருவோரும், கோயிலுக்கு வர முடியாத நிலையில் உள்ளவர்களும், இறைக் காட்சியைக் காண்பதற்காக ஏற்பட்ட சடங்கே திருவீதி உலாவாகும். இத்திருவிழாக்களினால் சமுதாயத்திலுள்ள எல்லாப் பிரிவினரும், குறிப்பாகக் கலை வல்லுநர்கள், தொழிலாளர்கள், ஏழைகள் பயன்பெறுகின்றனர். தேர்த் திருவிழா சமுதாய ஒற்றுமையை உணர்த்தும் வகையில் உள்ளது. வாணிகம் வளர்ச்சி அடைகிறது. கோயில் உள்ள ஊர் பொருளாதார நிலையில் உயர்நிலை அடைகிறது.



மயிலைத் திருத்தேர்



வைகாசி பௌர்ணமியில் இலட்சதீபம்

## கபாலீசுவரர் கோயில் வழிபாடுகளும் திருவிழாக்களும்:

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் திருமயிலையில் திங்கள்தோறும் கபாலீசுவரர் கோயிலில் நடந்து வந்த திருவிழாக்களைப் பூம்பாவைப் பதிகத்தின் பத்துப் பாடல்களில் திருஞான சம்பந்தர் குறிப்பிட்டுள்ளார். அக் காலத்திலேயே விழாக்கள் நிறைந்த நகரமாகத் திருமயிலை விளங்கியிருக்கிறது.

இறைவனை நம்முடைய நலம் கருதி வழிபடுகிறோம். கோயில் களில் நாள் வழிபாடுகளை அர்ச்சகர்கள் செய்கின்றனர். அப்பொழுது மக்கள் பார்வையாளராக மட்டுமே இருக்க முடிகின்றது. ஆனால், திருவிழாக்கள் நடைபெறும்போது மக்கள் அனைவரும் இறைவனுடைய திருத்தொண்டில் நேரடியாகக் கலந்துகொள்ள முடிகின்றது.

முதலில் திருஞானசம்பந்தர் கூறும் கபாலீசுவரர் கோயில் விழாக்கள், அதைத்தொடர்ந்து நாள் வழிபாடு, வார விழா, நாயன்மார்களின் திரு நட்சத்திரத்திருவிழா, நாயன்மார்களின் அற்புதச் செயல்களைப் போற்றும் திருவிழாக்கள், திங்கள் திருவிழாக்கள், பிரதோஷம், தைப்பூசம், மாசி மகம், நவராத்திரி கொலு, பிரம்மோற்சவம், கும்பாபிஷேகம் முதலாய செய்திகள் குறித்துக் கூறப்பெறும்.

## திருஞானசம்பந்தர் கூறும் விழாக்களும் விரதங்களும்:

பெருஞ்சோற்று விழா, ஐப்பசித் திங்களில் ஓண நட்சத்திரத்தில் நடைபெறும் விழா, கார்த்திகைத் திங்கள் கார்த்திகை நட்சத்திரத்தில் தொன்று தொட்டுக் கொண்டாடும் விளக்கீட்டு விழா, மார்கழித் திங்கள் ஆதிரை நாளில் நடைபெறும் திருவிழா, தைத் திங்கள் பூச நாளில் கொண்டாடப்படும் திருவிழா, மாசித் திங்கள் மக நாளில் நடத்தப்படும் கடலாட்டு விழா, பங்குனி உத்திரத் திருவிழா, அட்டமி நாள் விழா, பொற்றாப்பு விழா,

பெருஞ்சாந்தி ஆகிய விழாக்கள் கபாலீசுவரர் கோயிலில் கொண்டாடப்பட்ட செய்தியினைத் திருஞான சம்பந்தர், பூம்பாவைப் பதிகத்தில் பத்துப் பாடல்களில் கூறுகிறார். இவற்றுள் முதற் பாடலில் சிவ பக்தர்களுக்கு உணவிடும் விழாவைக் கூறுகிறார். அடுத்த பாடலில், ஐப்பசித் திங்களில் நடைபெறும் ஓணவிழா கூறப் பெறுவதால் இதுவும் ஐப்பசித் திங்களில் நடைபெற்றிருக்கக் கூடும்.

ஐப்பசி ஓண விழாவிலும் சிவ பக்தர்கள் உண்டு களித்தல் கூறப்படுகின்றது. ஐப்பசி விழா ஸ்ரீராமனால் கொண்டாடப்பட்ட செய்தியினை வடமொழிப் புராணம் கூறுகிறது. ஐப்பசி ஓணத்தில் கொடியேற்றிக் கிருத்திகையில் தீர்த்தம் என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. தமிழ்ப் புராணத்தில் ஐப்பசி ஓணத்தைப் பத்தாவது நாள் தீர்த்தமாகக் கொண்டு விழா ஸ்ரீராமரால் நடத்தப்பட்ட செய்தி கூறப்படுகிறது என்று ம. பாலசுப்பிரமணிய முதலியார் குறிப்பிட்டுள்ளார். கார்த்திகை விளக்கீடு, ஆதிரை நாள், தைப் பூசம், மாசிக் கடலாட்டு, பங்குனி உத்திரம் ஆகிய ஐந்தும் இன்றும் தமிழ் நாடெங்கிலும் கொண்டாடப்படுகின்றன. அட்டமி நாள் என்பது சிவ விரதங்கள் எட்டினுள் ஒன்று; வைகாசித் திங்கள் சுக்கில பட்சம் அட்டமி நாளையே 'பதினெண்கணங்கள் தம் அட்டமி நாள்' என்று சம்பந்தர் குறிப்பதாகக் கொள்வதே சிறந்ததாகும்.

பொற்றாப்பு என்பது, மார்கழித் திங்களில் சிவன் கோயில்களில் மூன்று, ஏழு, அல்லது பத்து நாட்கள் நடைபெறும் ஊஞ்சல் உற்சவத்தைக் குறிக்கும் எனபர்.

பெருஞ்சாந்தி என்பது ஆவணி அவிட்டம் ஈறாக மூன்று, ஐந்து அல்லது ஏழு நாட்களில் சிவயாகம் முதலிய சிறப்புடன் நடக்கும். 'பவித்ரோத்ஸ்வமாகிய ஸம்வத்ஸர பிராயச்சித்தம்' என்பர். குடமுழுக்கு என்றும் சிலர் இதைக் கருதுவதுண்டு. இவையே திருஞானசம்பந்தர் கூறும் திருவிழாக்களாகும்.

## நாள் விழா:

நாள்தோறும் கபாலீசுவரர் கோயிலில் காலைச் சந்திப்பூசை, உச்சிக்கால பூசை, சாயங்கால பூசை, அர்த்தசாம பூசை என்னும் நான்கு பூசைகள் நடத்தப்படுகின்றன. இவற்றுள் சாயங்கால பூசை குறிப்பிடத்தக்கதாகும். முதலில் அபிஷேகம், பிறகு நைவேத்தியம் நடக்கும். தீபாராதனை சுவாமிக்கு மாலை 5.30-க்குத் தொடங்கும். வேதபாராயணம் தேவாரப் பதிகம் பாடுதல், நாதசுரம் ஆகியவையோடு ஒவ்வொரு சுவாமி சந்நிதியிலும் தீபாராதனைகள் நடைபெறும். அர்த்தசாம பூசை பள்ளியறை உற்சவமாகும்.

## வாரவிழா:

வியாழக்கிழமை தோறும் தட்சிணாமூர்த்தி கடவுளுக்குச் சிறப்பாக அபிடேக ஆராதனைகள் நடக்கும். வெள்ளிக்கிழமை தோறும் கற்பகவல்லிக்கு வெள்ளித் தொட்டிலில் பிரகார உற்சவம் நடைபெறும். உள் பிராகாரத்தில் அம்மனை அலங்கரித்து விமானத்தில் வைத்து வேத பாராயணம், தேவார ஓதுவார் மற்றும் மேளங்களுடன் மூன்று முறை சுற்றுவார்கள். ஒவ்வொரு திங்களின் இறுதி வெள்ளிக்கிழமையிலும் கற்பகவல்லியின் கோயில் பிரகார உற்சவத்துடன் ஊஞ்சல் உற்சவமும் சிறப்பாக நடைபெறும்.

## திங்கள் விழாக்கள்:

தமிழ்த் திங்கள் தோறும் முதல் நாளில் கோயில் முழுவதும் உள்ள தெய்வத் திருவுருவங்களுக்கு எண்ணெய்க் காப்பு சாத்தப்படுகிறது. இலிங்க சுத்தியும், அம்மனுக்கு அபிடேகமும் நடைபெறுகின்றன. திங்கள் தோறும் திரயோதசி திதியில் சுக்கில பட்சம், கிருட்டிணபட்சத்தில் பிரதோஷ உற்சவம் நடைபெறும். பிரதோஷ நாளின் சிறப்பு பின்னர் விரிவாகக் கூறப்பெறும். மூலவருக்குப் பௌர்ணமி தோறும் பூசை நடப்பதுண்டு. ஒவ்வொரு பௌர்ணமியிலும் சந்திரசேகர சுவாமி திருவீதி உற்சவம் நடைபெறும். சித்திரா பௌர்ணமி, கார்த்திகைப் பௌர்ணமி

தீபம், மார்கழிப் பௌர்ணமி அரைக்கட்டு, பங்குனி உத்திரம் திருக்கல்யாணம் ஆகிய நான்கு பௌர்ணமி நாட்களில் சோமாஸ்கந்தர் பஞ்சமூர்த்திகளுடன் வீதி உற்சவம் நடைபெறும். அமாவாசைகளில் மூலவர் சோமாஸ்கந்தருக்கு அபிடேகம் நடைபெறும். பன்னிரண்டு கிருத்திகைகளிலும் சிங்காரவேலர், திருவீதி உற்சவமும், ஆடிக் கிருத்திகையில் மயில்வாகனத் திருவீதி உற்சவமும் நடைபெறும். ஒவ்வொரு திங்களிலும் இந்நாளில் சிங்காரவேலர், மூலவர், உற்சவர், சண்முகர் ஆகியோருக்கு அபிடேக ஆராதனைகள் நடைபெறும். வைகாசி மாதத்தில் விசாகத்தில் சண்முகர் திருவீதி உற்சவம் நடைபெறும். திங்கள் தோறும் ரேவதி நாளில் வாயிலார் நாயனாருக்குக் கோயில் பிரகார உற்சவம் நடைபெறும். மார்கழி ரேவதியில் வாயிலாரின் உற்சவம் நடைபெறும். மார்கழி ரேவதியில் வாயிலாரின் ஆண்டு நட்சத்திர நாளில் பூப்பல்லக்கில் திருவீதி உற்சவம் நடைபெறும். கபாலீசுவரருடைய திருநட்சத்திரம் திருவாதிரையாகும். திங்கள்தோறும் திருவாதிரையில் சோமாஸ்கந்தருக்கு அபிடேகம் நடைபெறும். மாசித் திங்கள் திருவாதிரையில் அபிடேகம் சிறப்பாக நடத்துவர். நூற்றெட்டுக் கலசங்களுடன் மண்டபத்தில் அபிடேகமும், கோயில் பிரகார உற்சவமும் நடைபெறும். சூரிய சந்திர கிரஹண புண்ணிய காலங்களில் தீர்த்த வாரி அபிடேக ஆராதனைகள் நடைபெறும்.

## நாயன்மார்களின் திருநட்சத்திரத் திருவிழா:

திருத்தொண்டத்தொகையில் அறுபத்து மூன்று சைவ நாயன்மார்களைச் சுந்தரர் குறிப்பிட்டுப் பாடியுள்ளார். இவர்களுடைய வரலாற்றைச் சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் என்னும் பெயரில் விரிவாக எழுதினார். கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் இப்புராணம் எழுதப்பட்ட பிறகு, சோழர் காலத்தில் சிவன் கோயில்களில் அறுபத்து மூன்று நாயன்மார்களுக்கும் ஒன்பது தொகை அடியார்களுக்கும் கருங்கல்லிலும் பஞ்சலோகத்திலும் சிலைகள் வடிக்கப்பட்டு நாள்தோறும் பூசை செய்யும் மரபு ஏற்பட்டது. இந்த நாயன்மார்கள் கி.பி. ஏழாம்

நூற்றாண்டிலிருந்து சுந்தரர் காலம் வரையில் தோன்றியவர்களாவர். இவர்கள் எல்லாரும் ஒரு நாட்டவர் அல்லர்; ஒரு காலத்தவர் அல்லர்; பற்பல நூற்றாண்டுகளில் பற்பல இடங்களில் வாழ்ந்தவர்கள். தாழ்நிலை வகுப்பினர், மேல்நிலை வகுப்பினர் என இப்போது சொல்லப்படும் வகுப்பினர்களும் இத்திருக் கூட்டத்தில் உள்ளார்கள். இல்லறம் நடத்தியவர்கள் பலர். துறவறம் பூண்டவர் சிலர். முதியோர் பலர்; இளையோர் சிலர்; மூவர் பெண்மணிகள்; முடியரசர் அறுவர். குறுநில மன்னர் ஐவர். குருவருளால் முக்தி பெற்றவர் அறுபத்து மூவர்களில் பன்னிரு சிவனடியார்களாவர். வழிபாட்டால் முக்தி பெற்றவர் பத்தொன்பது பேர். மற்ற முப்பத்திரண்டு பேர்கள் சிவலிங்க பூசை செய்து முக்தி பெற்றவர்கள். அறுபத்து மூவர்களில் எழுவர் திருமுறைப் பாடல்களைப் பாடியவர்கள்.

இவர்கள் எல்லோரும் சிவபெருமானிடத்து இடையறா அன்பு பூண்டொழுகினர். சைவ சமயத்தின் கோட்பாடுகளையும், சைவ சித்தாந்தத்தின் நுட்பங்களையும் ஒன்று சேர்த்து விளக்கம் காணத்தக்க வகையில் அவர்களுடைய வாழ்க்கையும் வழிபாடும் அமைந்துள்ளன.

இந்த நாயன்மார்களின் திருவுருவச் சிலைகள், சிவன் கோயில்களில் சிவலிங்கம் பிரதிட்டை செய்யப்பட்டிருக்கும் இடத்தைச் சுற்றியுள்ள பிரகாரத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. நாயன்மார்களுக்குரிய திருநட்சத்திர நாள்களைக் குறித்து வழிபடும் வழக்கம் இருந்து வருகிறது.

இந்த வழக்கம் கபாலீசுவரர் கோயிலிலும் பின்பற்றப்படுகிறது. பிரம்மோற்சவத்தின் எட்டாம் நாள் அறுபத்து மூவர் விழாவாகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

கபாலீசுவரர் கோயிலில் அறுபத்து மூன்று நாயன்மார்களின் திருநட்சத்திர நாட்களில் அபிடேக ஆராதனைகள் அந்தந்த நாயன்மார்களுக்குச் சிறப்பாக நடத்தப் பெறுகின்றன.

## நாயன்மார்களின் அற்புதச் செயல்களைப் போற்றும் திருவிழாக்கள் :

### திருநாவுக்கரசருக்குக் கட்டமுது உற்சவம்:

சித்திரைத் திங்கள் சதய நட்சத்திரத்தில் அப்பருக்குக் காலையில் கட்டமுது உற்சவம் நடைபெறுகிறது. மாலையில் பூப்பல்லக்கில் திருவீதி உற்சவம் நடைபெறுகிறது. இரவில் ஜோதியில் கலத்தல் என்னும் ஐதீகம் நடைபெறுகிறது.

திருநாவுக்கரசர் திருவானைக்காவல் விட்டுத் திருப்பைஞ்ஞீலியை நோக்கிவர, பசியினாலும் தாகத்தினாலும் வருந்தி இளைத்தார். சிவபெருமான் அதைக் கண்டு வழியில் சோலையில் குளமும் உண்டாக்கி ஒரு பிராமண வடிவம் கொண்டு பாதையில் கட்டமுது வைத்துக் கொண்டிருந்தார். அப்பர் அங்கு நெருங்க அக்கட்டமுதை அவருக்குக் கொடுத்தார். அவ்வமுது உண்டு இளைப்பாறித் திருப்பைஞ்ஞீலிக்குப் புறப்பட அப்பிராமணரும் கூடச் சென்றார். அக் கோயில் செல்லுமுன் சிவபெருமான் மறைந்தார். அப்பர் இது ஓர் அற்புதம் என்று எண்ணிக் கோயிலுக்குள் சென்று பதிகம் பாடினார். இச் செயலை நினைவு கூறும் வகையில் இத் திருவிழா நடத்தப் படுகின்றது.

### திருஞானசம்பந்தர் திருவிழா:

ஆண்டு தோறும் வைகாசித் திங்களில் பத்து நாட்களுக்குத் திருஞான்சம்பந்தருக்குத் திருவிழா நடைபெறுகிறது. அந் நாட்களில் திருஞானசம்பந்தரின் பிறப்பு, வளர்ப்பு, அற்புதச் செயல்கள், ஜோதியில் கலத்தல் ஆகிய ஐதீகங்கள் நடைபெறுகின்றன. முதல் ஒன்பது நாட்களுக்கு இரவில் திருஞானசம்பந்தரின் கோயில் பிரகார உற்சவமும் பத்தாம் நாள் காலையில் பல்லக்கில் மணக் கோலத்தில் வீதிவலம் வருதல், இரவில் பூப்பல்லக்கில் வீதிவலம் வருதல் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

முதல் நாளில் தாலாட்டு உற்சவமும், இரண்டாம் நாளில் வளர்பருவ ஐதீகமும், மூன்றாம் நாளில் ஞானப்பால் உண்ணுதல், பொற்றாளம் பெறுதல் ஆகிய ஐதீகங்களும் நான்காம் நாளில் முத்துச் சிவிகை பெறுதல், முயலகன் என்னும் நோய் தீர்த்தல் ஆகிய ஐதீகங்களும், ஐந்தாம் நாளில் அடியார் சுரப்பிணி தீர்த்தல், முத்துப் பந்தல் பெறுதல் ஆகிய ஐதீகங்களும், ஆறாம் நாளில் அரவந் தீண்டப்பெற்ற வணிகனை உயிர்ப்பித்தல், திருவீழி மிழலையில் படிக்காசு பெறுதல் ஆகிய ஐதீகங்களும், ஏழாம் நாளில் பாண்டியன் சுரந் தீரத்தல், வைகையில் ஏடெதிர் செல்லல், அனல்வாதம் ஆகிய ஐதீகங்களும், எட்டாம் நாளில் ஓடம் விடுதல், ஆண் பனையைப் பெண் பனை ஆக்குதல் ஆகிய ஐதீகங்களும், ஒன்பதாம் நாளில் திருமயிலையில் அங்கம் பூம்பாவையாக்கிய ஐதீகமும், பத்தாம் நாளில் திருமணக் கோலம், திருமணம், திருக்கல்யாண ஜோதியில் கலத்தல் ஆகிய ஐதீகங்களும் நடைபெறுகின்றன. திருஞானசம்பந்தரின் வாழ்க்கை வரலாற்றையும் அவர் செய்த அற்புதச் செயல்களையும் ஒருங்கே நினைவு கூரும் வகையில் இவ்விழா நடைபெறுகிறது. திருஞானசம்பந்தர் மயிலைத் தலத்தின் மீது பதிகம் பாடியதாலும், அங்கம் பூம்பாவையாக்கிய அற்புதச் செயலைச் செய்ததாலும், அவரைப் போற்றும் வகையில் பத்து நாட்கள் இவ்விழா நடைபெறுகின்றது.

## சுந்தரர் திருநட்சத்திர உற்சவம்:

ஆண்டுதோறும் ஆடித் திங்களில் சுவாதி நட்சத்திரத்தில் சுந்தரருக்கு உற்சவம் நடைபெறுகின்றது. மாலையில் பூப்பல்லக்கில் சேரமான் பெருமாள் நாயனார் ஆகிய கழறிற்றறிவாருடன் திருவீதி உற்சவம் நடைபெறும். சுந்தரர் யானை வாகனத்தின்மீதும் சேரமான் பெருமாள் நாயனார் குதிரை வாகனத்தின்மீதும் அமர்ந்து திருவீதி உலா வருவர்.

## ஆண்டு முழுவதும் நிகழும் விழாக்கள்:

விழாக்கள் மலிந்த திருக்கோயில் கபாலீசுவரமாகும். இங்குத் திங்கள்தோறும் நடைபெறும் விழாக்கள் இப்பகுதியில் கூறப்பெறுகின்றன.

### சித்திரை:

சித்திரைத் திங்கள் முதல் நாள் ஆண்டுப் பிறப்புச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. கோயில் முழுவதும் எல்லா மூர்த்திகளுக்கும் அபிடேகம் நடைபெறும். கபாலீசுவரருடைய மூலவருக்குச் சிறப்பு அபிடேகம் நடைபெறும். அன்று மாலையில் சோமாஸ்கந்தர் மண்டபத்தில் பஞ்சாங்கம் படிக்கும் நிகழ்ச்சி நடைபெறும். கபாலீசுவரர் வசந்த விழாவின் இறுதி நாட்கள் இத் திங்களின் முதற் பகுதியில் நடக்கும். திருவோண நட்சத்திரத்தில் நடராஜப் பெருமானுக்கு உச்சிக் காலத்தில் மகா அபிடேகம் நடைபெறும். சிங்காரவேலனுக்கு வசந்த விழா பதினேழு நாட்கள் நடைபெறும். சித்திரைத் திங்கள் இறுதியில் கபாலீசுவரருக்குக் கத்திரி உற்சவம் தொடங்கி வைகாசித் திங்களின் முற்பகுதியில் முடியும்.

### வைகாசி:

இத்திங்களில் திருஞானசம்பந்தருக்குப் பத்து நாட்கள் சிறப்பாக விழா நடத்துதல் பற்றி முன்னர் கூறப்பட்டது. புனர்பூச நட்சத்திரத்தில் சேக்கிழார் சுவாமிகளை யானை வாகனத்தில் நிறுத்தி திருவீதி விழா நடத்தப்பெறுகின்றது. நடராஜர் சந்நிதியில் ஐக்கியம் ஆகும் ஐதீகமும் நடைபெறுகின்றது.

### ஆனி :

மாணிக்கவாசகருடைய திருநட்சத்திரம் மகமாகும். அன்று இரவில் பூப்பல்லக்கில் திருவீதி உற்சவம் நடைபெறுகின்றது. நடராஜரிடம் ஐக்கியம் ஆகும் ஐதீகமும் நடைபெறுகின்றது.

உத்திர நட்சத்திரத்தில் ஆனித் திருமஞ்சனம், நடராஜர் பிரதோஷ கால அபிடேகம் ஆகியவை நடைபெறுகின்றது. ஆனிச் சதயத்தில் சங்காபிடேகம் நடைபெறுகின்றது.

## ஆடி:

ஆடி வெள்ளிக்கிழமைகளில் கற்பகவல்லிக்குச் சிறப்பாக பூசைகள் நடத்தப்படுகின்றன. ஆடிப் பூரத்தில் கற்பகாம்பாளுக்குச் சந்தனக் காப்பு சாத்தப்படுகிறது. இரவில் அம்பிகை கந்தர்வி வாகனத்தின் மீதமர்ந்து திருவீதி உலா வருதல் நடைபெறுகின்றது. பன்னிரு திருமுறை விழா இத் திங்களின் இறுதியில் தொடங்கி ஆவணித் திங்களின் தொடக்கத்தில் முடியும் வகையில் பதின்மூன்று நாட்கள் நடைபெறுகின்றது. பன்னிரு திருமுறைகளைக் கோயில் பிராகாரத்தில் உலா வரச் செய்து நடராஜர் சந்நிதியில் எழுந்தருளச் செய்தல், திருமுறைகளை அலங்காரங்களுடன் திருமுறை விமானத்தில் யானை மீது வைத்துத் திருவீதி உற்சவம் நடத்துதல் ஆகியவை நடைபெறுகின்றன. இத் திங்களில் பவித்ரோற்சவமும் நடைபெறுகின்றது.

## ஆவணி:

### விநாயகர் சதுர்த்தி:

விநாயகர் சதுர்த்தியன்று மாலையில் கூத்தாடும் பிள்ளையாருக்குச் சிறப்பு அபிடேக அலங்கார ஆராதனைகள் நடைபெறும். இரவில் மூஷிகவாகனத்தில் திருவீதி உற்சவம் நடைபெறும்.

### ஆவணி மூலம் பிட்டுத் திருவிழா:

மதுரையில் மாணிக்கவாசகருக்காக வைகை ஆற்று வெள்ளத்தைத் தடுக்க வந்திக் கிழவியின் பாகத்தை அடைக்கச் சொக்கலிங்கப் பெருமான் கூலி ஆளாக வந்து வந்திக் கிழவியிடம்

பிட்டு வாங்கித் தின்ற ஐதீக உற்சவம் ஆவணி மூல நட்சத்திரத்தன்று நடைபெறுகின்றது. சந்திரசேகர சுவாமி இடப வாகனத்திலும் அவர் எதிரில் மாணிக்கவாசக சுவாமிகளும் எழுந்தருளத் திருவீதி உலா வரும் நிகழ்ச்சியும் நடைபெறுகின்றது.

## ஆவணி சதுர்த்தசி:

நடராஜப் பெருமானுக்கு இந்நாளில் அபிடேகம் மாலை நேரத்தில் கோயிலுக்குள்ளே நடைபெறும். பன்னிரு திருமுறை விழா பன்னிரண்டு நாட்கள் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

## புரட்டாசி:

சதுர்த்தசி அன்று நடராஜருக்கு அபிடேகம் அர்த்தசாம வேளையில் நடைபெறுகின்றது.

## நவராத்திரி கொலு:

இவ் விழா அமாவாசையன்று தொடங்கி ஒன்பது நாட்கள் நடைபெறும். கொலு மண்டபத்தில் கற்பகாம்பிகை சிறப்பு அலங்காரத்துடன் கொலு வீற்றிருப்பாள். பத்தாம் நாள் சந்திரசேகர ஸ்வாமி குதிரை வாகனத்தில் பரிவேட்டை போதல், மேலண்டை வீதியில் அம்பு போடுதல், பரிவேட்டை மண்டபத்தில் ஆராதனை ஆகியவை நடைபெறும். பௌர்ணமி அன்று நிறைமணிக் காட்சியும் நடைபெறுகிறது. மகா மண்டபம் அலங்கரிக்கப்பட்டிருக்கும். எல்லா விதத் தானியங்களும், காய்கனிகளும் கிழங்குகளும் சேகரித்து மண்டபம் அலங்கரிக்கப் பட்டிருக்கும். சந்திரசேகர சுவாமியின் திருவீதி உற்சவமும் நடைபெறும்.

## ஐப்பசி:

தீபாவளி அன்று அதிகாலை நரக சதுர்த்தசி நீராடல், சிறப்பு அபிடேகம் ஆகியவை நடைபெறும். எல்லாத் தெய்வங்களுக்கும் எண்ணெய்க் காப்பு அபிடேகம் நடைபெறும். சிங்காரவேலர் கந்தசஷ்டி விழா ஆறு நாட்கள் கொண்டாடப்படுகிறது. முதல் நாள் கொடி ஏற்று உற்சவம் நடைபெறும். ஆறு நாட்களும்

காலை மாலை யாகசாலை பூசை நடைபெறும். திருவீதி உற்சமும் நடைபெறும். ஆறாம் நாள் சிங்காரவேலர் தேரில் எழுந்தருளுவார். மாலையில் சூரசம்ஹாரம் வடக்கு மாட வீதியில் நடைபெறும். யானை, சிம்மம், புலி, ஆடு தலைகளை வெட்டிய பிறகு சூரன் மா மரமாகித் தடுக்க, அதைப் பிளந்த பின்பு கோழியாகவும், மயிலாகவும் வடிவம் கொண்டு வேலனை வலம் வருதல், முருகர் மயில் வாகனத்தில் ஏறுதல், தேரிலிருந்து முருகர் இறங்கி மயில் மீதமர்ந்து மற்ற வீதி வலம் வருதல் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறும். கோயிலுக்குள் வந்த பிறகு பிராயச்சித்தம் அபிடேகம் நடந்து, சுவாமி மறுபடியும் மாடவீதி வலம் வந்து திருவிழா நிறைவடையும். மறுநாள் திருக்கல்யாணம் நடைபெறும். உற்சவ யானை வாகனத்தில் திருவீதி மகா உற்சவம் நடைபெறும். மறுநாள் முதல் ஆறு நாள் விடாய் ஆற்றி உற்சவம் நடைபெறும். இந்த ஆறு நாட்களும் மண்டபத்தில் அபிடேகமும் ஆராதனைகளும் நடைபெறும். பௌர்ணமி அன்று அன்ன அபிடேகம் நடைபெறும். சந்திரசேகர சுவாமி திருவீதி உற்சவமும் நடைபெறும்.

### கார்த்திகை:

நான்கு அல்லது ஐந்து சோம வாரங்கள் (திங்கட்கிழமை) சிறப்பாகப் பூசைகள் நடைபெறும். நான்காம் சோம வாரத்தில் சிறப்பு அபிடேக அலங்கார ஆராதனைகள் நடைபெறும். கார்த்திகைக் கிருத்திகையில் அண்ணாமலையார் அபிடேக ஆராதனை, சொக்கப்பனை, சிங்காரவேலர் திருவீதி உற்சவம் ஆகியவை நடைபெறும். கபாலீசுவரருக்கு நான்கு சோமவாரங் களிலும் நூற்றெட்டுச் சங்கு அபிடேகம் நடைபெறும்.

### மார்கழி:

இத்திங்களில் முப்பது நாளும் உற்சவ கால பூசை நடைபெறும். அதாவது காலை 4.30 மணிக்கு மேல் ஆறு மணிக்குள் தனுர்மாதம் உற்சவ கால பூசையாகும். கார்த்திகை ஐந்தாம் சோமவாரம் கபாலீசுவரருக்கு ஆயிரத்தெட்டுச் சங்காபிடேகம் நடைபெறும்.

மாணிக்கவாசகர் திருவெம்பாவை விழா பத்து நாள் நடைபெறும். முதல் நாள் முதல் பத்தாம் நாள் வரையில் காலை வேளை மாணிக்கவாசகர் புறப்பாடு, கொடி மரம் முதல் மாடவீதி நவ சந்திகள் வரை திருவெம்பாவை ஓதுதல், ஒரு சந்திக்கு இரண்டு இரண்டு திருவெம்பாவை பாட்டுப் பாடுதல் ஆகியவை நடைபெறும். மாணிக்கவாசகர் உற்சவத்தின் எட்டாம் நாள் மாலையில் கற்பகாம்பாள் கபாலீசுவரர் ஊஞ்சல் உற்சவம் நடைபெறும். இந்த ஊஞ்சல் உற்சவம் மூன்று நாள் நடைபெறும். மூன்றாம் நாள் மாணிக்கவாசகர் முன்னிலையில் ஊஞ்சல் விழா நடைபெறும். பொன்னூஞ்சலும் திருவெம்பாவையும் ஓதிய பின்பு பஞ்ச மூர்த்திகள் திருவீதி ஊர்வலம் வருதல் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறும்.

திருவாதிரை உற்சவத்தன்று அதிகாலையில் நடராஜப் பெருமானுக்கு அலங்கார தீபாராதனை, சாந்து சேர்வை, சுவாமி புறப்பட்டுத் தேரடி போய்த் திரும்புதல், கோயிலுக்குள் தெற்கு நோக்கி வெள்ளை மல் துணியினால் சுவாமியைப் போர்த்துதல், உடனே சுவாமி பதினாறு கால் மண்டபம் எழுந்தருளி, பத்தி உலாவுதல் ஆகியவை நடைபெறும். இதற்குச் சப்தபதி உற்சவம் என்று பெயர்; சுவாமி பதினாறு கால் மண்டபத்தை ஏழு தடவை சுற்றி வருவார். இதில் ஒவ்வொரு சுற்றுக்கும் தனித்தனி இசைக்கருவிகள் வாசிக்கப்படும். சுவாமி மறுபடியும், கோயிலுக்குள் எழுந்தருளுவார். பிறகு காலை ஒன்பது மணிக்கு ஆருத்திரா காட்சியும், திருவீதி உற்சவமும் நடைபெறும். வாயிலார் நாயனார் ஆண்டுத் திருநட்சத்திர உற்சவம் மார்கழி ரேவதி நட்சத்திரத்தில் நடைபெறும். பூப்பல்லக்கில் வாயிலார் திருவீதி ஊர்வலம் வருவார்.

**தை:**

தைத் திங்கள் முதல் நாள் மகர சங்கராந்தி உத்தராயண புண்ணியகாலத்தில் சந்திரசேகர சுவாமி திருவீதி உற்சவம் நடைபெறும். இரண்டாம் நாள் மாட்டுப் பொங்கலன்று கற்பகாம்பாள் கன்னி உற்சவமும், காலையில் அம்மனுக்குக் குளக்கரையில் அபிடேக அலங்காரமும் ஆராதனையும் திருவீதி உற்சவமும் நடைபெறும். மாலையில் சந்திரசேகர சுவாமி சங்கராந்தி பரிவேட்டை, திருவீதி உற்சவம் நடைபெறும்.

இரத சப்தமி அன்று சந்திரசேகர சுவாமி இரதத்தில் எழுந்தருளி மேலண்டைக் குள்க்கரையில் தீர்த்தவாரி நடைபெறும். திருவீதி உற்சவமும் நடைபெறும். தைத் திங்களில் நான்கு வெள்ளிக்கிழமைகளிலும் கற்பகாம்பாள் கோயிலுக்குள் பிரகார விழா நடைபெறும்.

### மாசி:

மகா சிவராத்திரி விழாவன்று கபாலீசுவரரின் மூலவருக்கு நான்கு காலம் சிறப்பு அபிடேகம் நடைபெறும். அன்று பிரதோஷ விழாவும் சிறப்பாக நடைபெறும். திங்கள்தோறும் திருவாதிரையில் சோமாஸ்கந்தர் மூர்த்திக்கு நடந்தேறிய அபிடேகத்தின் சாந்தியாக நூற்றெட்டுக் கலச பூசை யாகங்களுடன் மூன்று வேளை நடைபெற்றுச் சுவாமிக்கு மகா மண்டபத்தில் மகா அபிடேகம் நடைபெற்றுக் கோயில் பிரகார உற்சவம் நடைபெறும். பங்குனிப் பெருவிழா லக்கினப் பத்திரிகை வாசித்தல் நடைபெறும்.

மாசி மகம் மிகச் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. மாசி மகம் பௌர்ணமி அன்று சந்திரசேகர சுவாமி அஸ்திர தேவருடன் கடற்கரைக்கு எழுந்தருளி தீர்த்தம் கொடுத்துத் திரும்புதல் நடைபெறும்.

சிங்காரவேலர் அடையாறு அரங்கசாமி முதலியார் வனபோஜனத் தோட்டத்தில் சுவாமி எழுந்தருளி விசேட அபிடேகம், ஆராதனை, சமாராதனை நடைபெற்று மாலையில் சிறப்பான அலங்காரத்தோடு வீதிவலம் வந்து கோயிலுக்குத் திரும்புவார். இவ்வாறு வனபோஜன விழா நடைபெறும்.

### பங்குனி:

பிரம்மோற்சவம் பதினோரு நாள் நடைபெறும். அதைத் தொடர்ந்து பத்து நாள் விடாய் ஆற்றி உற்சவம் நடைபெறும்.

இவையே திங்கள் தோறும் கபாலீசுவரர் கோயிலில் நடைபெறும் திருவிழாக்களாகும். அவற்றுள் சிறப்பு மிகுந்த திருவிழாக்கள் சில விளக்கமாகக் கூறப்பெறும்.

## பிரதோஷ வழிபாடு :

திங்கள் இருமுறை திரயோதசி திதியில் சுக்கிலபட்சம் கிருட்டிணபட்சம் பிரதோஷ உற்சவம் நடைபெறும். சனிப் பிரதோஷம் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. சிவன் கோயில்களில் தேய்பிறையின்போது பதின்மூன்றாம் நாள் திரயோதசி திதியின் போது சிறப்பாகச் செய்யப்படும் வழிபாடு 'பிரதோஷ வழிபாடு' என்று கூறப்படுகிறது. சூரியன் மறைவதற்கு முன்பு ஒன்றரை மணி நேரமும், சூரியன் மறைந்த பிறகு ஒன்றரை மணி நேரமும் ஆக மூன்று மணி நேரம் பிரதோஷ காலம் எனப்படும். சூரியன் மறைவதற்கு முன் உள்ள நேரம் சிறப்பானதாகக் கருதப்படுகிறது. பிரதோஷத்திற்கும் ஏகாதசி, துவாதசி ஆகிய இரு விரதங்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அது புராண வரலாறாகும்.

துர்வாச முனிவர் சிவ பூசை செய்து கிடைத்த மலரை இந்திரனிடம் கொடுத்தார். அவன் அதை அலட்சியமாக ஐராவதத்தின் தலையில் வைத்தான். அந்த யானை அதைத் துதிக்கையால் எடுத்துக் கீழே எறிந்தது. துர்வாசர், 'எல்லாச் செல்வங்களும் உன்னை விட்டு நீங்குக' என்று சபித்தார். தேவர்கள் செல்வம் அனைத்தையும் இழந்தனர். தேவர்கள் திருமாலின் அறிவுரையின்படி அசுரர்களுடன் சேர்ந்து பாற்கடலைக் கடைந்தனர். ஆலகால நஞ்சு தோன்றியது. சிவனிடம் தேவர் அடைக்கலம் புகுந்தனர். சிவபிரான் நஞ்சை உண்டார். அது அவருடைய கண்டத்தில் தங்கியது. அவர் கண்டம் நீலநிறம் பொருந்தியதாக மாறியது. அன்றைய நாள் தேவர்கள் உண்ணா நோன்பு இருந்தனர். அதுவே ஏகாதசியாகும். உண்ணா நோன்பு முடிந்த நாள் துவாதசி திதியாகும். அதற்கு மறுநாள் மாலை ஏழரை நாழி நேரம் சிவபெருமான் ஆனந்ததாண்டவம் செய்தருளினார். அவ்வேளையே பிரதோஷம் எனப்படுகிறது.

பிரதோஷத்தன்று மாலையில் மூலலிங்க மூர்த்திக்கும் நந்திக்கும் சிறப்பு அபிடேக ஆராதனைகள் நடத்தி, பிரதோஷ நாயகரை இடப வாகனத்தில் ஏற்றிக் கோயில் பிரகாரத்தில் எழுந்தருளச் செய்வர்.

கபாலீசுவரர் கோயிலில் பிரதோஷ வழிபாடு சிறப்பாகச் செய்யப்படுகின்றது. இடப வாகனத்தில் பிரதோஷ நாயகர்

எழுந்தருளிக் கோயில் பிரகாரத்தில் மும்முறை வலம் வந்து அம்பாள் எதிரிலுள்ள மண்டபத்தில் தீபாராதனை செய்யப்படுகிறது. வேத பாராயண தேவாரக் கூட்டங்கள் உற்சவ மூர்த்தியோடு வலம் வருதல் உண்டு. சனிப்பிரதோஷம் மிக முக்கியமானதால் அன்று மக்கள் கூட்டம் அதிகமாக இருக்கும்.

## நவராத்திரி கொலு:

நவராத்திரி என்பதற்கு ஒன்பது இரவுகள் என்பது பொருள். புரட்டாசித் திங்களில் அமாவாசைக்குப் பிறகு வரும் ஒன்பது நாட்கள் இரவில் பராசக்தியைப் பல வடிவமாகப் பூசித்து விழா நடத்தி வருகின்றனர். முதல் மூன்று நாட்களில் பார்வதியையும், அடுத்த மூன்று நாட்களில் திருமகளையும், இறுதி மூன்று நாட்களில் கலைமகளையும் பூசித்து, பத்தாம் நாள் விஜயதசமி விழாவைச் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர். தசராத்திரி அல்லது பத்து இரவுகள் விழா நடந்து வருவதால் இதனைத் தசரா எனச் சிலர் கூறுகின்றனர். அம்மை, அமைச்சர், படைவீரர் மற்றும் பலரோடு அரச மண்டபத்தில் கொலு வீற்றிருக்கும் நிகழ்ச்சியையே கொலு என்று கூறுகின்றனர். இல்லங்களில் அழகிய பொம்மைகளை வைத்து நடுவில் பராசக்தியைக் கொலு வீற்றிருக்கச் செய்து பார்த்து மகிழ்வர். இந்தக் கொலு கோயில்களிலும் மேற்கொள்ளப்படுகிறது. கபாலீசுவரர் கோயிலில் நவராத்திரி கொலு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. நவராத்திரி ஒன்பது நாளும் காலை மாலையாக இரு வேளைகளிலும் கற்பகாம்பாளுக்குப் பூசை நடைபெறும். கொலு மண்டபத்தில் சிறப்பான அலங்காரத்துடன் கற்பகாம்பாள் ஒன்பது நாட்களும் கொலு வீற்றிருப்பாள்.

முதல் நாள் கற்பகாம்பாள் அன்ன வாகனத்தில் கொலு மண்டபத்திற்கு எழுந்தருளுவாள். இரண்டாம் நாள் காமதேனு வாகனத்தில் கௌரி அலங்காரத்தோடும், மூன்றாம் நாள் சரசுவதி அலங்காரத்தோடும், நான்காம் நாள் நாக வாகனத்தில் பத்மாசினி அலங்காரத்தோடும் ஐந்தாம் நாள் இடப வாகனத்தில் மகேசுவரி அலங்காரத்தோடும், ஆறாம் நாள் இராஜராஜேஸ்வரி அலங்காரத்தோடும், ஏழாம் நாள் குதிரை வாகனத்தில் மீனாட்சி அலங்காரத்தோடும், எட்டாம் நாள் மகிஷாசுரமர்த்தினி அலங்காரத்தோடும், ஒன்பதாம் நாள் கம்பாநதி தீரத்தில் காமாட்சி சிவபூசை அலங்காரத்தோடும் கற்பகாம்பாள்கோயில் பிரகாரம்

சுற்றி வந்து யதாஸ்தானத்திற்கு எழுந்தருளுவாள். இந்த ஒன்பது நாள் கொலுவிலும் மேளக்கச்சேரி, பாட்டுக் கச்சேரி, இலக்கியச் சொற்பொழிவுகள், வேத பாராயணம், தேவார பாராயணங்கள் நடைபெறும்.

**தைப்பூசம்:**

தைத் திங்கள் பௌர்ணமியில் வரும் பூச நட்சத்திரம் சிறப்பு மிகுந்ததாகும். தேவ குருவான பிரகஸ்பதி இந் நட்சத்திரத்திற்கு உரியவராவார். அறிவுக் கடவுள் என்று அவர் போற்றப் படுகின்றார். புண்ணிய தீர்த்தங்களில் இந்நாளில் நீராடினால் அறிவு வளரும் என்று எண்ணுகின்றனர். இத் திருநாள் திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி கோயிலில் மிகச் சிறப்பாக கொண்டாடப்படுகின்றது. திருஞானசம்பந்தரும், தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய்' என்று பாடியுள்ளதால் கி.பி. ஏழாம் நூற்றாண்டிலேயே திருமயிலையில் தைப்பூச உற்சவம் சிறப்பாக நடைபெற்று வந்ததை அறியலாம். இந் நாளில் முருகனுக்கும் சிறப்பாக விழா எடுக்கின்றனர். இராமலிங்க வள்ளலாரும் தைப்பூச நாளிலே மறைந்தார். சோதி வழிபாட்டுக்குரிய நாளாக இந் நாள் இக்காலத்தில் கருதப்படுகிறது.

கபாலீசுவரர் கோயில் திருக்குளத்தில் தைப்பூசப் பௌர்ணமி யன்று முதல் நாள் சந்திரசேகர சுவாமி தெப்போற்சவமும், இரண்டாவது மூன்றாவது நாட்கள் சிங்காரவேலர் தெப்போற்சவமும் நடைபெறும். இத் தெப்பம் முதல் நாள் ஐந்து தரம், இரண்டாம்நாள் ஏழு தரம், மூன்றாம் நாள் ஒன்பது தரம் என்று மூன்று நாளைக்குக் குளத்தில் நீராழி மண்டபத்தைச் சுற்றி வரும். மூன்று நாட்களிலும் மக்கள் பெருந் திரளாக வந்து இறைவனை வணங்குவர். வெற்றிலைகளில் கற்பூரத்தைக் கொளுத்தி நீரில் மிதக்க விடுவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். சுவாமி இம் மூன்று நாளும் மாலை சுமார் ஐந்து மணிக்கு கோயிலை விட்டு மற்ற வீதி வலம் வந்து மேலண்டைப் பந்தலில் இருந்து தெப்பத்தில் சேர்ந்து சுற்றி வருவார். தெப்போற்சவம் முடிந்த பின் சுவாமி மிகுதியாயுள்ள வீதி வலம் வந்து கோயிலைச் சேருவார்.

## மாசி மகம்:

மாசித் திங்கள் பௌர்ணமியன்று மக நட்சத்திரத்தில் இவ் விழாக்கொண்டாடப்படும். சில இடங்களில் இறைவன் சமுத்திரக் கரைக்குச் சென்று வருவதுண்டு. இந்த நாளில் எல்லோரும் கடலில் முழ்கி எழுவர். அருகிலுள்ள கோயில்களிலிருந்து உற்சவ மூர்த்திகளும் கடற்கரைக்கு எழுந்தருளுவர்.

கபாலீசுவரர் கோயிலிலிருந்து சந்திரசேகர சுவாமி அஸ்திர தேவருடன் கடற்கரைக்கு எருந்தருளித் தீர்த்தம் கொடுத்து திரும்புவார். திருமயிலையில் நடந்த இவ் விழாவினைத் திருஞானசம்பந்தர்,

**மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்**
**கடலாட்டுக் கண்டான் கபாலீச் சரம் அமர்ந்தான்**
**அடலானே றூரும் அடிகள்**

என்று பாடியுள்ளார்.

## பிரம்மோற்சவம்:

இத் திருவிழா பத்து நாட்கள் கொண்டாடப்படுகிறது. இறுதி நாள் பங்குனி உத்திரமாக அமையும். பிரம்மோற்சவ நாட்களில் உற்சவச் சிலைகள் மாட வீதிகளில் திருவீதி உலாச் சென்று வரும். இந்த உலா ஒளி விளக்குகளோடும், நாதசுரத்தோடும், வேத முழக்கம், தேவாரப் பாடல்களோடும் நடைபெறும்.

ஆண்டுதோறும் பங்குனித் திங்களில் கிருத்திகை நட்சத்திரத்தில் திருவிழாவிற்கான முன் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. பிரம்மோற்சவம் தொடங்குவதற்கு முதல் நாள் கோயில் முழுவதும் மகா அபிடேகமும், மண விருந்தும் நடைபெறும்.

இரு கிராம தேவதைகளுக்கும் தேருக்கும் வேண்டிய பூசை செய்து அதற்குரிய பலியும் நடத்துவதுண்டு. அன்று விநாயகர் பூசை ஆரம்பித்து அங்குரார்ப்பணத்தை முன்னிட்டுச் சண்டேசுவரர் அங்காரகத் தேவருடன் நிருதி மூலைக்கு

(பி.எஸ். மேல் நிலைப்பள்ளி உள்ள இடம்) எழுந்தருளி, மிருத் சங்கிரகணம் நடத்திக் கொண்டு (புற்று மண் எடுத்துக் கொண்டு) மாட வீதி வலம் வரும். கூத்தாடும் பிள்ளையார் இரவில் மூஷிக வாகனத்தில் உலா வருவார்.

## முதல் நாள் திருவிழா:

காலையில் கபாலீசுவரர் பஞ்சமூர்த்தியுடன் துவஜாரோகண மண்டபத்தில் எழுந்தருளி, கொடியேற்றம் நடந்தவுடன், பஞ்சமூர்த்தி அஸ்திர தேவர்களுடன் நவசக்தி பந்தனம் செய்து கொண்டு உற்சவம் கொண்டருளி மண்டபத்தில் எழுந்தருளுவார்கள். இரவில் இறைவன் புன்னைமரத்தடியில் உமையம்மை மயில் உருவத்தோடு பூசிக்கும் அலங்காரத்துடன் இருக்கையில் புன்னை மரத்தில் எழுந்தருளுவார். முதல் பத்து நாட்களில் காலை மாலையில் யாக சாலைக்கு இறைவன் எழுந்தருளும்போது தீபாராதன்ன நடைபெறும்.

## இரண்டாம் நாள் திருவிழா:

காலையில் இறைவன் சூரிய விருத்தத்திலும், அம்பாளும் முருகரும் விமானங்களிலும் எழுந்தருளி, ஈசானிய மூலையில் மண்டகப்படி பெற்றுக் கொண்டு கோயில் திரும்புவர். இரவில் இறைவன் சந்திர விருத்தத்திலும், அம்பாள் கிளி வாகனத்திலும் முருகர் அன்ன வாகனத்திலும் எழுந்தருளுவர்.

## மூன்றாம் நாள் திருவிழா:

காலை ஆறு மணிக்கு இறைவன் வெள்ளி அதிகாரநந்தியின் மீதும், அம்பாள் கந்தர்வி வாகனத்திலும், முருகர் புருஷ கந்தர்வ வாகனத்திலும், விநாயகர் சண்டிகேசுவரர் முறையே வெள்ளி மூஷிக, வெள்ளி இடப வாகனங்களில் எழுந்தருளுவர். இந்த உற்சவத்தின் போது தெற்கு மாட வீதிக் குளக்கரையில் திருஞானசம்பந்தருக்கு திருமுலைப்பால் தந்தருளிய ஐதீகம் நடைபெறும். மேற்கு மாட வீதிப் பரிவேட்டை அலங்கார

மண்டபத்தில் மண்டகப் படிக்கு எழுந்தருளி ஆராதனை நடைபெற்றவுடன் மாடவீதி வலம் வரும். முருகர் தாரகாசுர வாகனத்திலும், அம்பாள் பூதகி வாகனத்திலும் எழுந்தருளுவர்.

## நான்காம் நாள் திருவிழா:

காலையில் கபாலீசுவரர் புருஷாமிருக வாகனத்திலும், அம்பாள் சிம்ம வாகனத்திலும், முருகர் யாளி வாகனத்திலும் எழுந்தருளுவர். இரவில் கபாலீசுவரர் நாக வாகனத்தில் திருவதி உலா வருவார். அம்பாள் காமதேனு வாகனத்திலும், முருகர் ஆட்டுக் கிடாவின் மீதும் வீதி வலம் வருவர்.

## ஐந்தாம் நாள் திருவிழா:

காலையில் கபாலீசுவரர், கற்பகாம்பிகை, சிங்காரவேலர் விமானங்களில் எழுந்தருளி, மாட வீதி வலம் வந்து கிழக்குக் கோபுரத்திற்கு எதிரேயுள்ள வணிக வைசிய மண்டபத்தில் மண்டகப்படிக்கு எழுந்தருளி உச்சிக் காலமானபின் கோயில் சேருவர். இரவில் கபாலீசுவரர் வெள்ளி இடப வாகனத்திலும், அம்பாள் தங்க இடப வாகனத்திலும், முருகர் தங்க மயிலிலும், வெள்ளி விநாயகர் சண்டிகேசுவரர், வெள்ளி மூஷிக, வெள்ளி இடப வாகனங்களிலும் எழுந்தருளுவது கண்கொள்ளாக் காட்சியாகும். ஆயிரக் கணக்கில் மக்கள் கூடுவர். நாதசுர முழக்கம், வேத பாராயணம், தேவார இன்னிசை இரவு முழுவதும் கேட்கும்.

## ஆறாம் நாள் திருவிழா:

காலையில் ஐந்து பல்லக்குகளில் பஞ்சமூர்த்திகள் எழுந்தருளுவர். மாலையில் கபாலீசுவரர், கற்பகாம்பாள் யானை வாகனங்களிலும், சிங்காரவேலர் பச்சை மயில் வாகனத்திலும் எழுந்தருளுவர்.

## ஏழாம் நாள் திருவிழா:

காலையில் ஐந்து தேர்களில் பஞ்ச மூர்த்திகள் எழுந்தருளுவர். மாலையில் கபாலீசுவரர் தேரடியிலிருந்து சிறப்பான மலர்

அலங்காரங்களுடனும் உயர்ந்த மேளக் கச்சேரியுடனும் கோயிலுக்கு எழுந்தருளுவர். இரவில் பஞ்சமூர்த்திகள் தங்கத் தொட்டிலில் திருவீதி உலா வருவர்.

## எட்டாம் நாள் திருவிழா:

சிவநேசருடன் திருஞானசம்பந்தர் மேற்கு மாட வீதிக் குளக்கரைக்கு எதிரில் திருமஞ்சனத்திற்கு எழுந்தருளுவார். பகலில் சிவநேசருக்கும் சம்பந்தருக்கும் மகா அபிடேகம் நடைபெறும். பிற்பகல் இரண்டு மணிக்குச் சிவநேசர் சம்பந்தருடன் கோயிலுக்கு எழுந்தருளி இறைவனிடம் உத்தரவு பெற்று மறுபடியும் குளக்கரைக்கு அங்கம் பூம்பாவையின் எலும்பைக் குடத்துடன் எழுந்தருளச் செய்து, யாவரும் கண்டுகளிக்க, திருஞானசம்பந்தரின் 'மட்டிட்ட' என்று தொடங்கும் பதிகத்தையும் பாடி எலும்பைப் பெண்ணுருவாக்கி மண்டகப்படி நடத்துவர். பிறகு மாட வீதி வலம் வந்து பதினாறு கால் மண்டபம் சேருவர். அப்போது கபாலீசுவரர் பஞ்சமூர்த்திகளுடனும் அறுபத்து மூன்று நாயன்மார் களுடன் காட்சி கொடுத்தருளும் ஐதீகம் நடைபெறும். பின்பு வீதி வலம் வந்து பதினாறு கால் மண்டபத்தில் தீபாராதனையும் அறுபத்து மூன்று நாயன்மார் வலம் வரும் காட்சியும் நடைபெறும். இரவில் சந்திரசேகர சுவாமி குதிரை வாகனத்தின் மீது பரிவேட்டை உற்சவம், பரிவேட்டை மண்டபத்தில் மண்டகப்படி முடிந்து இரவு பன்னிரண்டு மணிக்கு மேல் கபாலீசுவரர் பஞ்ச மூர்த்திகளுடன் திருவீதி உற்சவம் நடைபெறும்.

## ஒன்பதாம் நாள் திருவிழா:

காலையில் பஞ்சமூர்த்திகளின் தங்கத் தொட்டில் உற்சவம் நடைபெறும். மாலை ஆறு மணிக்குப் பிச்சாண்டி நாதர் முனி பத்தினிகள் சூழ்ந்த சௌடால் விமானத்தில் புறப்படுவார். மேற்கு மாட வீதியில் மோகினியுடன் சந்திக்கும் காட்சி நடைபெறும். இரவில் பஞ்சமூர்த்திகள் திருவீதி உலா நடைபெறும்.

## பத்தாம் நாள் திருவிழா:

காலை ஐந்து மணிக்கு நடராஜப்பெருமானுக்குச் சாந்து சேர்வை, வெள்ளை சாத்தல், சப்தபதி உற்சவம் ஆகியவை நடைபெறும். பிறகு தீர்த்த வாரி நடக்கும்; பின் திருவீதி உற்சவம்

நடைபெறும். பஞ்சமூர்த்திகளுக்கு குளக்கரையில் தீர்த்தவாரி நடக்கும். பிறகு திருவீதி உற்சவமும் நடைபெறும். மாலையில் கபாலீசுவரர் கோயிலுக்குள் புன்னைவனநாதர் சந்நிதியில் கற்பகாம்பாள் மயிலுருவாக இருந்த சாபம் நீங்க, இறைவனைப் பூசித்து, கபாலீசுவரர் காட்சி பெற்றுத் தன் சுய உருவடைந்து திருக்கல்யாண மண்டபமடைந்து திருக்கல்யாணம் நடைபெறும். பின்னர் கபாலீசுவரரும் கற்பகாம்பிகையும் துவஜாரோகண மண்டபத்திற்கு எழுந்தருளி, மலர் ஊஞ்சலில் ஆடி, இராவணேஸ்வர வாகனத்தில் எழுந்தருளி இன்னிசைக்குழு இல்லாமல் மௌன ஊர்வலமாகப் புல்லாங்குழல் இசையுடன் வீதிவலம் வருவர். அப்போது அஸ்திர தேவருடன் நவசக்தி திக்பந்தன விசர்ஜனம் செய்து கொண்டு கோயிலை அடைந்து துவஜாரோகண மண்டபம் எழுந்தருளி துவஜாஅவரோகணம் (கொடி இறக்குதல்) நடைபெற்று இறைவன் கற்பகாம்பாளோடு கல்யாண மண்டபம் சேர்வார். சண்டேசுவரர் திருவீதி உற்சவம் நடைபெறும்.

## பதினோராம் நாள் திருவிழா:

காலையில் கல்யாண மண்டபத்தில் உமா மகேசுவரர் காட்சி, இறைவனின் திருவனந்தல் காட்சியாகும். அன்று காலையில் இறைவன் இருக்கும் அறையைத் திறக்கும்போது யானை, இடபம், நடன மங்கையர், சாமரம், கண்ணாடி, தீபம் முதலிய மங்கலப் பொருள்களுடன் கதவைத் திறந்து பூசை செய்வர். மாலையில் பந்தம் பறி உற்சவம் நடைபெறும். பஞ்சமூர்த்திகளுடன் உற்சவம் கொண்டருளித் தேரடியில் இறைவன் வருவான். அப்போது அம்பாள் ஊடல் கொண்டு கோயிலுக்கு எழுந்தருளிக் கதவை மூடித் தாளிட்டுக் கொள்ளும் ஐதீகம் நடைபெறும். இறைவன் சுந்தரரை வரவழைத்து மும்முறை ஊடல் நடத்துவார். இறைவனுக்கும் இறைவிக்கும் இடையில் பட்டோலை வாசித்துச் சமாதானம் பெற்று அம்பாள் இறைவனை வலம் வந்து கோயிலுக்குள் எழுந்தருளும் காட்சி நிகழும். இவ்வாறாகக் கபாலீசுவரர் கோயிலில் பங்குனித் திங்களிலே பதினோரு நாட்கள் பிரம்மோற்சவம் மிகச் சிறப்பாக நடைபெறும்.

## பவித்ரோற்சவம்:

இத் திருவிழா எல்லாக் கோயில்களிலும் நடைபெறும். ஆண்டுதோறும் பூசை முதலிய வழிபாடுகளில் நிகழும் குறைகளைத்

தீர்க்கும் முறையில் செய்யப்படும் சடங்குகள் நிறைந்த விழாவே பவித்ரோற்சவம் எனப்படும். இதனைப் புண்ணியாவசனம் என்றும் கூறுவர். திருஞானசம்பந்தர் தன்னுடைய 'மட்டிட்ட புன்னையங்கானல்' பதிகத்தில் பெருந்சாந்தி விழா என்று குறிப்பிடுவது இதனைத்தான் குறிக்கிறது என்பர் மு. அருணாசலம். கபாலீசுவரர் கோயிலில் பவித்ரோற்சவம் ஆடித் திங்களில் நடைபெறுகிறது.

## கும்பாபிடேகப் பெருவிழா:

இவ்விழா ஏற்கனவே கட்டிய கோயில்களுக்குப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்த வேண்டும் என்னும் மரபு இருக்கிறது.

## கும்பாபிடேகம் – விளக்கம்:

கும்ப வஸ்த்ரம்-தோல்; மேல் பூசிய செம்மண்-இரத்தம், கும்பத்து மண்-மாமிசம்; உதகம் (தண்ணீர்) -மேதை; கூர்ச்சம் – எலும்பு; மேல் சுற்றிய நூல் நரம்பு; கும்பத்திலிடும் பொன், பூ முதலியன வீரியம். நியதிக்கப்பட்ட மந்திரம் - உயிர்; கீழிட்ட நெல் முதலிய தானியம் - ஆசனம்; கும்பத்தை முதலில் கோயிலிலுள்ள பிம்பத்தின் அருகில் வைத்துத் தர்ப்பை, மாவிலை முதலியன கொண்டு, மந்திரங்களைச் சொல்லி பிம்பத்தில் விளங்கும் மூர்த்தியைக் கும்பத்தில் ஆவாகனம் செய்வார்கள். ஆவாகனமாவது மந்திரங்களைச் சொல்லிக் கும்பத்தில் அபிமுகமாகச் செய்தலாகும். பிறகு அக் கும்பத்தை மங்கல முழக்குடன் யாக சாலைக்கு எழுந்தருளச் செய்வார்கள்.

யாக சாலையானது முப்பத்தாறு தத்துவ சொருபமானதும் சிவபெருமானது அட்டமூர்த்த வடிவானதும் ஆகும். யாக சாலையில் ஒன்பது குண்டங்களில் அக்கினி வளர்க்கப் பெறும். மந்திரம், கிரியை, பாவனை மூன்றினாலும் வளர்க்கப்படும். அக்கினியிலிருந்து எழும் புகையும், வேத ஒலி, சிவாகட ஒலி, தமிழ்மறை ஒலி இவற்றுடன் உத்தம மெய்யன்பர்களின் நல்லெண்ணங்களும், எங்கும் நிறைந்திருக்கின்ற இறைவனுடைய அருட்சக்தியைத் தூண்டிக் கும்பத்தில் பிரகாசிக்கச் செய்யும். அப்போது அக்கும்பம் தெய்வீக சக்தி, கலைகள் நிரம்பியதாகும்.

இவ்வாறு யாக சாலையில் நடைபெற வேண்டிய கிரியைகள் முற்றுப்பெற்றவுடன் மீண்டும் தெய்வீக சக்தி கோயிலிலுள்ள பிம்பத்தினிடமாக அமையவேண்டி, அச் சக்தியைச் செலுத்தும் சக்தி வாய்ந்த தருப்பைக் கயிற்றின் வழி அச்சக்தியைப் பிம்பத்தில் சேர்ப்பித்துக் கும்பத்திலுள்ள நீரினால் சிகரங்களிலும் பிம்பத்திலும் அபிடேகம் செய்வார்கள். இதுவே கும்பாபிடேகமாகும். கபாலீசுவரர் கோயிலின் கிழக்கு இராஜகோபுரம் ஏறத்தாழ 1902ஆம் ஆண்டில் கட்டப் பெற்றதாகக் கூறுகிறார்கள். அப்போது கும்பாபிடேகம் நடைபெற்றிருக்கிறது.

1946-ல் உள் கோபுரங்கள், மற்றும் இராஜ கோபுரம், விமானங்கள் எல்லாம் மகா கும்பாபிடேகம் நடத்தும் பொருட்டுச் சீர்திருத்தப் பெற்றன. இராஜகோபுரத்தின் மேல் நவகலசங்களும், கொடி மரமும் பொன்னால் செய்யப்பட்டு அமைக்கப்பட்டன. இவை யாவும் சுமார் ரூபாய் இரண்டு இலட்சம் செலவில் நிறைவேறின. மகா கும்பாபிடேகம் ஆனித் திங்கள் 10ஆம் நாள் 23-6-1948-ல் தொடங்கிப் பதினான்காம் நாள் 27-6-1948-ல் முடிவடைந்தது.

அண்மைக் காலத்தில் கபாலீசுவரர் கோயில் கும்பாபிடேகம் செய்ய வேண்டும் என்று எண்ணி 27-8-1980-ல் கோயிலில் திருப்பணி செய்யத் தொடங்கினர். கோயில் கோபுரங்கள், விமானங்கள், மண்டபங்கள், நீராழி மண்டபம் ஆகியவைகளின் திருப்பணி வேலைகள் செய்து வண்ணப் பூச்சுகளால் அலங்கரித்தனர். கபாலீசுவரர், கற்பகாம்பாள் மூலத்தான கருவறை முதல் அர்த்த மண்டபம் வரையிலும் சலவைக்கல் பதித்து மேற்படி மூலத்தான வாயிற் கதவுகளுக்கு வெள்ளி அணிவித்துத் திருப்பணி நடந்தேறியது. 8-7-1982 வியாழக்கிழமை காலையில் மகா கும்பாபிடேகம் நடைபெற்றது.

இவ்வாறு கபாலீசுவரர் கோயிலில் நாள் வழிபாடு முதல் கும்பாபிடேகம் வரை எல்லா வகையான திருவிழாக்களும் கொண்டாடப்படுகின்றன. ஆண்டில் எல்லாக் காலத்திலும் கபாலீசுவரர் கோயில் திருவிழாக்கோலம் பூண்டு விளங்குகிறது.

## 6. திருமயிலைத் தலபுராணம் புகலுவோம்

திருமயிலை மீது பாடப்பட்ட தல புராணங்கள் இரண்டு இப்போது கிடைக்கின்றன. அவற்றுள் முதலாவது தலபுராணம் திருவண்ணாமலை ஆதினத்தைச் சேர்ந்த அமிர்தலிங்கத் தம்பிரான் என்பவரால் இயற்றப்பட்டதாகும்.

இரண்டாவது தலபுராணம், மயிலை நாதமுனி முதலியார் என்பவரால் இயற்றப்பட்டதாகும். இந்த இரண்டு தலபுராணங்களும் இப்போது கிடைக்கப் பெறுகின்றன.

மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் மயிலையில் உள்ள மக்களின் வேண்டுகோளின்படி ஒரு புராணம் பாடினர் என்பர். அந்நூல் இப்போது கிடைக்கப் பெறவில்லை.

அமிர்தலிங்கத் தம்பிரான் இயற்றிய தலபுராணம் காஞ்சிபுரம் சபாபதி முதலியார் இயற்றிய பொழிப்புரையுடன் வெளி வந்துள்ளது. இதே நூலுக்கு வசனமொன்று திருமயிலைப் புராணவசனம் என்னும் பெயரில் மோசூர் முனுசாமி முதலியார் என்பவரால் எழுதப்பட்டுள்ளது.

இவற்றுள் அமிர்தலிங்கத் தம்பிரான் இயற்றிய தலபுராணம் எல்லா வகையிலும் சிறந்து விளங்குகிறது.

திருமயிலைத் தலபுராணம் என்னும் இந்நூல் ஸ்ரீ கைலாய பரம்பரைத் திருவண்ணாமலை ஆதினம் ஸ்ரீ அமிர்தலிங்கத் தம்பிரான் சுவாமிகளால் இயற்றப்பட்டதாகும். இந்நூலுக்கு உரையாசிரியர் மகா வித்வான் காஞ்சிபுரம் சபாபதி முதலியார் அவர்கள் பொழிப்புரை எழுதியுள்ளார். புரசை அஷ்டாவதானம் சபாபதி முதலியார் அவர்களால் பார்வையிடப்பட்டு, பையூர்க் கோட்டம் க. இராமசாமி முதலியாரவர்களால் 1892-ல் பதிப்பிக்கப்பட்டது.

இந்நூல் பாயிரச் சருக்கம், நாட்டுச் சருக்கம், நகரச் சருக்கம், பொதிய மாமலைச் சருக்கம், தல விசிட்டச் சருக்கம், பார்வதியார் சாபச் சருக்கம், பார்வதியார் அருச்சனைச் சருக்கம், வேதம்

பூசித்த சருக்கம், குமரவேள் பூசித்த சருக்கம், பிரமன் பூசித்த சருக்கம், சுக்கிரன் பூசித்த சருக்கம், தீர்த்தச் சருக்கம், திருவிழாச் சருக்கம் என்னும் பதின்மூன்று சருக்கங்களைக் கொண்டுள்ளது.

பாயிரச் சருக்கத்தில் முதற்பாடல் காப்புப் பாடலாக அமைந்துள்ளது. நல்ல கவிதை பாட விநாயகர் அருள் வேண்டி, வாழ்த்துதலாக அமைந்துள்ளது. அடுத்துக் கபாலீசர், கற்பகவல்லித் தாயார், கூத்தாடும் விநாயகர், சிங்கார வேலர், திருஞான சம்பந்தர் சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தர மூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள், நந்திதேவர், பைரவ மூர்த்தி, சரசுவதி, காரைக்கால் அம்மையார், கண்ணப்ப நாயனார், மங்கையர்க்கரசியார் மற்றுமுள்ள திருத் தொண்டர்கள், சண்டேசர், ஆதிசைவர் ஆகியோர் மீது பாடப் பெற்ற துதிப் பாடல்கள் மற்றும் அவையடக்கப் பாடல்கள் உள்ளன.

### அவையடக்கம் :

நூலுக்கு முன்னுரைபோல அமைந்துள்ளது. அகத்திய முனிவரிடத்தில் முனிவர்கள் ஆயிரத்தெட்டுச் சிவத்தலங்களில் உள்ள மூர்த்திச் சிறப்பு,. தலச் சிறப்பு, தீர்த்தச் சிறப்பு உள்ள தலத்தின் சிறப்பைச் சொல்லியருள வேண்டும் என்று கேட்க, கயிலை மலையில் சிவபிரான் பார்வதி தேவியாருக்கு அருளிச் செய்த முறைப்படி திருமயிலையென்னும் தலத்தின் பெருமை அவரால் சொல்லப்பட்டது என்று அமிர்தலிங்கத் தம்பிரான் கூறுகின்றார்.

### நூலில் சொல்லப்படும் கதை :

இத் தலத்தின் பெருமையை முற்காலத்தில் அருளிய முறையும், இந்தத் தலத்தினுடைய உண்மைத் தன்மையைக் கயிலாயத்தில் ஓரிடத்தில் பார்வதி வணங்கிக் கேட்கப் பரமசிவன் திருவாய் மலர்ந்தருளத் துணிந்த முறையும், ஆதிகாலத்தில் இந்தத் தலத்தினுடைய மேன்மை முழுவதையும் சொல்லிய முறையும், பிரமன், பார்வதி, செவ்வேள், வேதங்கள், சுக்கிரன், இராமர்,

முனிவர் ஆகியோர் தொழுது அருச்சித்த முறையும், கபாலி தீர்த்தம், மற்றுமுள்ள தீர்த்தங்களுடைய பெருமையைச் சொல்லிய முறையும் பெரியோர்கள் சிலர் சிவாலயங்கள் கட்டுவித்துப் பேறு பெற்ற முறையும் இந்நூலிற் கூறப்படுவதாகப் பாடியுள்ளார்.

பதினெண் புராணங்களுள் சிவனுக்குரிய பத்துப் புராணங்களுள் ஸ்ரீ சைவ புராணத்திலுள்ள கந்த புராணத்திலும் தனித்தனியே சொல்லப்படுகிற திருமயிலை என்னும் தலத்தின் சிறப்பினை சிவனருளால் வட மொழியினின்றும் மொழிப் பெயர்த்துப் பாடியுள்ளதாகக் குறிப்பிடுகின்றார்.

பாயிரத்துடன் பதிமூன்றுச் சருக்கங்களாக இப் புராணத்தைத் தொகுத்து 600 பாடல்களைப் பாடியதாகச் சொல்கிறார். அவர், நூலுக்கு 'மயிலை மூதூர்ப் புராணம்' என்னும் பெயரைச் சூட்டியுள்ளார். விருத்தப் பாவால் பாடியதாகவும் குறிப்பிடு கின்றார். இவ்வாறு அவையடக்கம் ஒரு நல்ல முன்னுரையாகவே அமைந்துள்ளது. திருமயிலைத் தலபுராணத்தில் பாயிரச் சருக்கம் தவிர்த்து மற்றச் சருக்கங்களில் தலப் பெருமை, மூர்த்திப் பெருமை, தீர்த்தப் பெருமை ஆகியவை சிறப்பித்துப்பேசப் படுகின்றன.

## தொண்டை நாட்டுப் பெருமை:

திருமயிலை, தொண்டை நாட்டிலுள்ள ஊர்களில் ஒன்றாகும். ஆகவே, நாட்டுச் சருக்கம் என்னும் பகுதியில் தொண்டை நாட்டின் பெருமைகளை 35 பாடல்களில் அமிர்தலிங்கத் தம்பிரான் விரித்துரைக்கின்றார்.

## திருத்தலங்கள்:

திருத்தலங்கள் நிறைந்த பெருமை தொண்டை நாட்டுக்கு உண்டு. பூமகளும் நாமகளும் பொருந்தி வாழும் இடமான திருவாலங்காடும், கண்ணப்பருக்கு முத்தி வழங்கிய தலமான திருக்காளத்தியும், கந்தவேள் திகழும் திருத்தணிகையும், திருவொற்றியூரும், திருமுல்லைவாயிலும் ஆகிய திருத்தலங்கள் நிறைந்த நாடு தொண்டை நாடாகும்.

## திருமயிலைத் திருத்தலம்:

நகரச் சருக்கத்து இருபத்தெட்டுப் பாடல்களில் திருமயிலைத் தலத்தின் பெருமைகளைத் தலபுராணம் கூறுகின்றது.

## உமை மயிலாகப் பூசித்த தலம்:

திருமயிலையின் பெயர்க் காரணத்தை அமிர்தலிங்கத் தம்பிரான்,

*புன்னாகவனத் தெழில்சேர் கயிலைமலை யுமை*
*மயிலாய்ப் பூசைசெய்யு*
*நன்னாமத்தான் மயிலையென விளங்கு மூதூர்*

என்று பாடுகின்றார். இத்தொடர், புன்னை வனங்கள் நிறைந்த இடத்தில் உமை மயில் வடிவில் வந்து சிவபெருமானைப் பூசை செய்த நிகழ்ச்சியைக் குறிப்பிடுகின்றது.

## மயிலையின் பெருமை:

திருமயிலையினைக் கண்டால், தேவேந்திரன், பிரமன், திருமால் ஆகியோர் அமராவதி, மனோவதி, வைகுந்தம் ஆகிய தத்தம் நகரங்களை விரும்ப மாட்டார்கள். மண்டபங்களும் கோபுரங்களும் உடைய பிரமன் முதலான தேவர்களால் கட்டப்பட்ட கோயில்கள் நிறைந்த ஊர் திருமயிலை. அந்த இடங்களில் மறையோசையும் தமிழோசையும் பரவியிருந்ததை, 'பண்டிகமு மறையொலிவு மூவர் தமிழ்ப் பாவொலியும் பரவுமெங்கும்' என்னும் தொடரால் தம்பிரான் குறிப்பிடுகின்றார்.

அடியவர்களுக்கு விருந்தோம்பும் அரும் பண்புடையவர்கள் மயிலை மக்கள் என்றும், அங்கு இல்லறம் நடத்துவோரில், ஆடவர் சங்கரன்தனைப் போற்றுபவராவர். மகளிர் அருந்ததி போன்ற கற்புடையவர். அவர்கள் பார்வதி பரமேசுவரர் போல் அந்நகரில் வாழ்கிறார்கள் என்றும் கூறுகிறார்.



427/1--3a.

## தலபுராணம் பாடக் காரணம்:

திருமயிலைக்கு முதலில் வடமொழியில் மட்டுமே புராணம் இருந்தது என்பதும், மயிலை மக்கள் கட்டளையிட்டதன் காரணமாகத் திருமயிலைத் தல புராணத்தைத் தமிழில் பாடியதாகவும், அமிர்தலிங்கத் தம்பிரான் குறிப்பிடுகின்றார்.

## திருமயிலைத் தலபுராணத் தோற்றுவாய்:

ஒரு சமயம் முனிவர்கள் எல்லாம் ஒன்று கூடி நான்முகனிடம் தாங்கள் தங்கித் தவம் இருக்க இடம் வேண்டினர். ஒரு சக்கரத்தை நான்முகன் உண்டாக்கி நிலத்தின் மீது உருட்டி அது சென்று தங்குமிடமே அவர்களுக்குரிய வனம் என்று கூறினான். அந்த இடத்தில் முனிவர்கள் சென்று தங்கித் தவமியற்றி வந்தனர். சக்கரம் தங்கியதன் காரணமாக அவ்விடம் நேமிவனம் எனப்பட்டது. அவ் வனத்திற்குச் சூத முனிவர் எப்பொழுதாவது வந்தால் முனிவர்கள் அவரை வரவேற்று யாதேனும் ஒரு புராணத்தைச் சொல்லுமாறு கேட்பர். இதுவே புராணம் சொல்லும் முறையாக வடநூலார் பின்பற்ற அதனையே அடியொற்றித் தமிழிலும் தோற்றுவாயாக அமைத்துக் கொண்டனர்.

ஆனால், இம் முறையிலிருந்து திருமயிலைத் தலபுராணம் மாறுபட்டுள்ளது. ‘பொதிய மா மலையில் அகத்தியர் வீற்றிருந்தார். பெருமை பொருந்திய முனிவர்கள் கூட்டமாய்க் கூடி அகத்தியர் வீற்றிருக்கும் ஆலயத்தை அடைந்து வணங்கினர். பிறகு அவருடைய பெருமைகளைச் சொல்லிப் புகழ்ந்தனர். சிவபிரான் திருக்கோயில் கொண்டு வீற்றிருக்கும் தலங்கள் அளவில்லாதவை களாயிருந்தாலும் இவைகளுக்குள், ஆன்மாக்களின் குற்றங்களை நீக்கி அருளாகிய முத்தியை எளிதில் வழங்கும் அற்புதத் தலம் எதுவென்று கூறுங்கள் என்று கேட்டனர். அவர்களிடத்தில் அகத்தியர், முற்காலத்தில் பார்வதியாருக்குச் சிவபெருமான் உபதேசித்தருளிய ஒரு தலம் பூலோகத்திலிருக்கிறது. அத் தலத்தைக் கண்டு போற்றினால் சிவகதியை அப்போதே அருளிச்

செய்யும் என்றார். அத் தலம் குறித்து ஆறுமுகக் கடவுள் எனக்கு உபதேசித்துள்ளார். அத் தலம் நிலைபெற்ற சிறந்த சிவத் தலங்கள் பதினாறினும், அதனினும் முக்கிய ஐந்து தலங்களிலும் முதன்மையாய் விளங்குகிறது. காஞ்சி, காசி, திருக் காளத்தி, சிதம்பரம், திருமயிலை ஆகிய இந்த ஐந்து தலங்களுக்குள் நன்மை பொருந்திய திருமயிலையானது முத்தியை எளிதாகக் கொடுக்கும்' என்றார்.

இதைக் கேட்டவுடன் முனிவர்கள் மகிழ்ச்சி அடைந்து அந்தத் தலத்தை இன்னதென்று வகுத்துச் சொல்ல வேண்டுமென்று வேண்டினர். அகத்தியரும் 'சிவபிரான் கூறிய பதினெட்டுப் புராணங்களுள் ஒன்றும், சிறந்ததுமான சைவ புராணத்தில், உயர்ந்த தலம் இன்னதென்று அதனுடைய சிறப்புகளைக் கோடி உருத்திரர்களுடைய அழகுள்ள பேர்கள் பொருந்திய சங்கிதை யானது விவரித்துச் சொல்லுகிறது. அதை உங்களுக்கு இப்போது நான் சொல்லுகிறேன்' என்று கூறத் தொடங்கினார். இவ்வாறு திருமயிலைத் தலபுராணத்தின் தோற்றுவாய் பொதிய மாமலைச் சருக்கத்திலும் தலவிசிட்டச் சருக்கத்திலும் காணப்படுகின்றது.

ஒவ்வொரு சருக்கத்தின் இறுதியிலும் அப்பகுதியில் கூறிய நிகழ்ச்சியும், இனிக் கூற வேண்டிய நிகழ்ச்சியும் பற்றி முனிவர்கள் வாயிலாக உணர்த்தப்பட, அதன்படி, அகத்திய முனிவர் கூறிச் செல்வதாக அமைந்துள்ள பாங்கு சேக்கிழாரின் பெரிய புராணத்தை, கம்பராமாயணத்தை, திருவிளையாடல் புராணத்தை அடியொற்றி அமைந்தது போல் உள்ளது.

## அகத்தியர் அருளிய திருமயிலைத் தலப்பெருமை:

அகத்தியர், மற்ற முனிவர்களுக்குத் திருமயிலைத் தல விசிட்டம் சொல்லுகிறார். பூமி தேவிக்குத் திலகம் என்று சொல்லத் தகுந்தது மயிலை. தேவர் முதல் இவ்வுலகு வாழ் சராசரம் ஈறாக ஒரு கணப் பொழுது மயிலையில் வாழ்ந்தால் பிறவிப் பிணி நீங்கிப் பிரம்மானந்த வெள்ளத்தில் அழுத்தும். கயிலாயத்தில் பார்வதி தேவியாருக்குச் சிவபெருமான் உபதேசித்தருளிய தலம், கற்பகவல்லியோடு கபாலீசுவரர் திருக்கோயில் கொண்டிருக்கும் தலம், சுக்கிரன் தன் மெய்ப் பிணி நீங்கத் திருமயிலையைத்



427/1--3b.

தொழுது அருள் பெற்றதால் தேவர்கள் சுக்கிரபுரி என்று வழங்கும் தலம் என்று தலப்பெருமை பேசப்படுகிறது.

## தீர்த்தப் பெருமை:

திருமயிலையில் ஏழு தீர்த்தங்கள் உள்ளன. அவற்றுள் சக்தி கங்கையில் மூழ்கி எழுவோர் முத்திக் கடலில் முழுகி எழுவர். மனிதர், முனிவர், தேவர், கடவுளர் பலரும் படியும் தீர்த்தம். அத்தீர்த்தத்தில் நீர் என்றும் வற்றாது; தவளைகள் பொருந்தாது; இம்மை, மறுமை முத்தி அளிக்கும் தன்மை உடையது என்று தீர்த்தப் பெருமையினை அகத்தியர் கூறுகிறார்.

## மூர்த்திப் பெருமை:

மயிலைத் தலத்தைப் பயிரவி என்னும் சக்தி வடதிசையில் காக்கிறாள். திருமயிலைக்கு வடதிசையில் பைரவமூர்த்தி வீற்றிருக்கிறார்.

திருமயிலையில் வீற்றிருக்கும் சிவலிங்கமூர்த்திகளில் ஒரு சிவலிங்க மூர்த்தியைத் துதி செய்தாலும் தங்கள் பிறவிக் கேதுவாய் வினைகளையறுத்துச் சிவனருளைப் பெறுவார்கள் என்றால் கபாலீசனை வணங்கினால் பேரின்ப வாழ்வை அடைவர் என்று அகத்தியர் தல விசிட்டச் சருக்கத்தில் கூறுவதாக அமைந்துள்ளது.

## பார்வதி மயில் உருவம் பெற்ற கதை:

பார்வதியார் சாபச் சருக்கத்தில், கயிலாய மலையில் சிவபெருமான் ஐந்தெழுத்தின் சிறப்பை கூறிக் கொண்டிருக்கும் போது, ஒரு மயில் தோகை விரித்தாடியது. பார்வதி சிவன் சொல்வதைக் கேட்காமல் மயிலை விருப்பமாய்ப் பார்த்தாள். பிறகு சிவபெருமானிடம் மீண்டும் உபதேசிக்கவேண்டும் என்று வேண்டினாள். சிவபெருமான் கோபங் கொண்டு 'வனமிசை தழைகண் தோகை மயிலென மேவுக' என்று சாபமிட்டார்.

பார்வதி அஞ்சிச் சாபம் நீங்கும்படி அருள் செய்ய வேண்டுமென்றாள். மயிலுருவம் நீங்கி இயல்புருவம் அடைவதற்கு உரிய தலம் மயிலை என்று சிவபெருமான் கூறி, மேலும் மயிலையின் சிறப்புகளையும் எடுத்துரைத்தார். அங்குச் சென்று தவம் செய்தால் சாபம் நீங்கும் என்றார். பார்வதியும் சிவனை நோக்கித் தான் மயிலை செல்லுமுன் சிவபெருமான் அங்கு எழுந்தருளவேண்டும் என்று வேண்டுகிற கதைப் பகுதி இச் சருக்கத்தில் கூறப்படுகின்றது.

## பார்வதி பரமசிவனைப் போற்றுதல்:

பார்வதி, சிவனை வணங்கிக் கயிலையை விட்டு நீங்கினார். வான் வழியாகச்சென்று பல தலங்களை வணங்கி மயிலைக்குச் சென்றார். கபாலி தீர்த்தத்தில் நீராடி எழுந்து, கபாலீசுவரர் கோயிலுக்குள் சென்று அபிடேக ஆராதனைகள் செய்து, இறைவனைப் போற்றிப் பாடினார். இவ்வாறு பல காலம் பூசை செய்த பிறகு சிவபெருமான் வெள்விடை மீது தோன்றிக் காட்சி கொடுத்தருளினார். பார்வதியின் சாபம் நீங்கியது. தன் பழைய உருவைப் பெற்றார். 'நான் மயிலாயிருந்து பூசை செய்தபடியினாலே இத்தலத்தைத் திருமயிலை என்று பெரியோர்கள் சொல்ல வேண்டும்; நம்மைத் தியானிப்பவர்கள் எல்லோரும் எல்லாப் பேறும் பெற்றுப் பின்பு முத்தி அடைய வேண்டும்' என்று சிவபெருமானை வேண்ட, அவரும் அவ்வாறே அருளினார் என்று பார்வதி அருச்சனைச் சருக்கத்தில் கூறப்படுகின்றது.

## வேதம் பூசித்த கதை:

வேதம் பூசித்த சருக்கத்தில், சோமுகன் என்னும் அசுரன், தேவர்களிடமிருந்து வேதங்களைக் கவர்ந்து கொண்டு வந்து பாற்கடலில் ஒளிந்து கொண்டது முதலான கதை நிகழ்ச்சிகள் கூறப்படுகின்றன. வேதங்களைப் பறி கொடுத்த தேவர்கள் சிவபெருமானிடம் வேண்ட, சிவபெருமான் திருமாலை அழைத்து, பெரிய மீனுருக் கொண்டு அசுரனைக் கொன்று வேதங்களைக்

கொண்டு வருக என்று கட்டளையிட்டார். திருமால் மகர மீன் வடிவம் கொண்டு சோமுகனுடன் போர் செய்து அவனைக் கொன்றார். விடுதலை அடைந்த வேதங்கள் சிவ பெருமானை வணங்கி நின்று அருள் வேண்டின. சிவபெருமான் வேதங்களைப் பார்த்து 'திருமயிலையில் வந்து என்னை வணங்குக' என்று கூறினார். சிவபெருமான் ஆணைப்படி வேதங்கள் மயிலையை அடைந்து தீர்த்தத்தில் மூழ்கிப் பின் கபாலீசுவரரை வணங்கி அபிடேக ஆராதனைகள் செய்தன. புதிதாக ஒரு சிவலிங்கத்தைக் கபாலீசுவரர் கோயிலுக்கு வடதிசையில் பிரதிட்டை செய்து அதற்குக் கிழக்குத் திசையில் ஒரு தீர்த்தத்தையும் ஏற்படுத்தி வழிபாடுகள் இயற்றின. வேதங்களின் துன்பம் நீங்க இறைவன் காட்சி கொடுத்தருளினான் என்று கூறப்படுகிறது.

### மீனேசுவரர்:

வேதங்கள் தாங்கள் பிரதிட்டை செய்த சிவலிங்கத்திற்கு மீனேசுவரர் என்று உலகோர் பேர் சொல்ல வேண்டுமென்று வேண்டின.

### வேதபுரி:

வேதங்கள், தாங்கள் உண்டாக்கிய தீர்த்தத்தில் நீராடுபவர் பிறவிப் பிணி நீங்க வேண்டும், மயிலைக்கு வேதபுரி என்னும் பெயர் வழங்கப்பட வேண்டும் என்றும் வேண்டின என்று வேதம் பூசித்த சருக்கம் கூறுகின்றது.

### கந்த புராணக் கதை:

ஆறுமுகக் கடவுளின் பிறப்பு, வளர்ப்பு, வீரச்செயல் ஆகியவை கந்தபுராணத்தில் கூறப்படுகின்றன. அதே கதை, திருமயிலைத் தல புராணத்தில் குமரவேள் அருச்சனைச் சருக்கத்தில் கூறப்படுகின்றது. சூரபன்மாவை அழிக்கப்புறப்படும் ஆறுமுகனுக்குச் சிவபெருமான், தேர், ஆயுதம், பூதகணம் ஆகியவற்றை அளித்ததோடு அல்லாமல் முருகனிடம், 'நீ மயிலைக்குச் சென்று அங்கு என்னை வழிபட்டால் ஒரு

வேலாயுதம் தருகிறேன்' என்று கூறுகிறார். அவ்வாறே ஆறுமுகக் கடவுள் மயிலை சென்று, தீர்த்தத்தில் நீராடியும் திருக்கோயில் சென்று வணங்கி அபிடேக ஆராதனைகள் செய்தார். கபாலீசுவரரும் கற்பகவல்லியும் வெள்ளெருதில் அமர்ந்து தோன்றி அருளினர். சிவபெருமான் ஆறுமுகக் கடவுளுக்கு வேல் கொடுக்க எண்ணியதும், அங்கே ஒரு வேல் தோன்றியது. அந்த வேல், சக்திவேல். அதனை ஆறுமுகன் கையில் கொடுத்து, 'சூரபன்மா முதலானோரைக் கொன்று, தேவர் துன்பம் நீக்கிப் பின்பு மயிலையில் வந்து தங்குக' என்று கூறினார். 'நீ இத் தலத்தில் சக்திவேல் பெற்றதால் வெற்றி பெற்ற சிங்காரவேலன் என்று பெயரும் புகழும் தந்தோம்' என்று மேலும் கூறியருளினார். பின்னர் ஆறுமுகக் கடவுள் சூரபன்மனுடன் போர் செய்து வேலாயுதத்தால் சூரபன்மனை இரண்டு துண்டாக்கும்படி செய்தார். அவை மயிலும் சேவலுமாய் வரக் கண்டு வாகனமும் கொடியுமாக்கித் தெய்வானையை மணம் புரிந்து கொண்டு கயிலையில் சில காலம் தங்கிப் பின்னர் வள்ளியை மணந்து கொண்டு திருமயிலை வந்து சேர்ந்தார். தெய்வயானை வள்ளியுடனும், பூதப் படைவீரர் இலட்சத்தொருவர் சூழ, மயிலைத் திருக்கோயிலில் சர்வ சதா காலமும் வாழ்ந்திருந்தார் என்று இச் சருக்கத்தில் கூறப்படுகின்றது.

**இத் தலத்தின் யிலகு சக்திவேற்**
**பெற்றை யாதலாற் பெயருனக்கு நாம்**
**வெற்றி பெற்ற சிங்கார வேலனென்**
**றுற்ற நாமமுயர்ச்சி தந்தனம்**

என்று அமிர்தலிங்கத் தம்பிரான் மயிலை முருகனுக்குச் சிங்காரவேலன் என்னும் பெயர் வந்ததற்கான காரணத்தைக் கூறுகிறார். இச் சருக்கத்தில் இது குறிப்பிடத்தகுந்த செய்தியாகும்.

## பிரம கபாலமூர்த்தி :

சிவபெருமானுக்குக் கபாலீசுவரர் என்னும் பெயர் ஏற்பட்டதற்கான காரணம் பிரமன் பூசித்த சருக்கத்தில் கூறப்படுகின்றது.

கயிலையிலுள்ள சிவபெருமான் தன் வலப் பாகத்திடமாகப் பிரமனைப் படைத்தான். உலகைப் படைத்த முறையைப் பிரம்மனுக்குச் சிவன் அருளுகின்ற நேரத்தில், உமை திருமஞ்சனமாடிச் சிவனுடன் வீற்றிருந்தாள். பிரமன் சிவ பெருமானைச் சிவன் என்று உணராமல் தன்னைப் போல் இவனும் ஒருவன் என்று எண்ணினான். பிரமன் தன்னுள்ளத்தில் நினைத்ததை அறிந்தோ, உமையம்மை தெளிவடையும் பொருட்டோ அவனுடைய ஐந்து தலைகளுள் ஆகாயத்தை நோக்கிய வண்ணமிருக்கும் நடுத்தலையை நக நுனியினால் கிள்ளித் தன் திருக்கரத்தில் ஏந்திக் கொண்டான். பிரமன் பயந்து பணிந்து, `நான் உங்கள் மகன். கோபிக்க வேண்டா' என்று வேண்டினான். திருமயிலைத் தலத்தில் தன்னைப் போற்றிப் பணிந்தால் வரந் தருவதாக அருளிச் செய்தார். பிரமன் அன்ன வாகனத்தில் ஏறிப் பறந்து சென்று திருமயிலையை அடைந்தான். கபாலீசுவரனைப் போற்றி வணங்கிப் பூசைகள் செய்தான். கபாலீசுவரர் வெள்ளேற்றின் மீது காட்சியருளிப் பிரமனை நோக்கி, 'உன்னுடைய விருப்பத்தைச் சொல்லுக' என்றார். பிரமன், 'உலகத்தைப் படைக்கும் தொழிலை எனக்கு அருள வேண்டும். இத் தலம் கபாலி நகர் எனவும், இறைவனுக்குக் கபாலீசுவரர் என்றும், சக்தி கங்கை தீர்த்தத்திற்குக் கபாலி தீர்த்தம் என்றும் பெயர் விளங்க வேண்டும்' என்று வேண்டினான்.

## வெள்ளிக்கு அருளிய கபாலீசுவரர்:

அசுரகுரு சுக்கிரன், மகாபலி சக்கரவர்த்தி, வாமனர் உருவில் வந்த திருமாலுக்கு மூன்றடி மண் தானம் கொடுக்க முனைந்த போது, வண்டு உருவெடுத்துக் கரகத்தின் துவாரத்தை அடைத்தான். வாமனர் தருப்பைப் புல் கொண்டு குத்த, சுக்கிரன் கண்ணிழந்தான். மீளவும் பார்வை பெற வேண்டி, திருமயிலை வந்தடைந்தான். கபாலீசுவரரை வணங்கினான். கபாலி தீர்த்தத்தின் அருகில் ஓர் இலிங்கம் தாபித்து ஆராதனை செய்தும், கபாலி தீர்த்தத்திற்கு அக்கினி மூலையில் ஒரு தீர்த்தம்

உண்டாக்கி, நாள் தோறும் கபாலீசுவரரைப் பூசை செய்தும் வந்தான். பல நாள் பூசைக்குப் பிறகு ஒரு நாள் கபாலீசுரவர் காட்சி அருளினார். சுக்கிரன் இத் தலத்திற்குச் சுக்கிரபுரி என்று பெயர் விளங்க வேண்டும்., மீண்டும் எனக்குக் கண்ணொளி கிடைக்க வேண்டும் என்று வேண்டினான். அவ்வாறே, சிவபெருமானும் அருளிச் செய்தார் என்று சுக்கிரன் அருச்சனைப் படலத்தில் கூறப்படுகின்றது.

## திருமயிலைத் தீர்த்தங்கள் :

கபாலீசுவரர் திருக்கோயிலுக்கு மேற்குத் திசையில் இருக்கும் உத்தம கபாலி தீர்த்தம், சக்தி கங்கை என்னும் பெயரையும் பெற்று விளங்குகிறது. இதுவே, மயிலையிலுள்ள தீர்த்தங்களில் முதன்மையான தீர்த்தம். திருமயிலைக் கடல், கடவுள் தீர்த்தம், என்றழைக்கப்படுகிறது. வேத தீர்த்தம், வாலி தீர்த்தம், கங்கை தீர்த்தம், வெள்ளி தீர்த்தம், இராம தீர்த்தம் என்னும் ஏழு தீர்த்தங்களையும் அவற்றில் நீராடினால் விளையும் பயன்களையும் தீர்த்தச் சருக்கம் கூறுகின்றது.

## இராமன் நடத்திய திருவிழா:

திருவிழாச் சருக்கத்தில் இராமாயணக் கதை முழுமையாகக் கூறப்படுகின்றது. மனைவியைத் தேடிச் செல்லும் இராமன் வழியில் திருமயிலையைக் கண்டு கபாலீசுவரரை வணங்கி வரம் பெற்று இலங்கை சென்று இராவணனைக் கொன்று, சீதையை மீட்டு, அயோத்தி சென்று ஆட்சி புரிந்து மீண்டும் திருமயிலை வந்து சேர்ந்தான். தீர்த்தம் ஒன்று ஏற்படுத்தி, ஐப்பசியில் கபாலீசுவரருக்குப் பிரம்மோற்சவம் நடத்தினான். கபாலீசுவரர் காட்சி அருளிய சிங்கார வேலருக்குத் தைத்திங்களில் திருவிழா நடத்துக என்று கூற அவ்வாறே திருவிழா நடத்தினான். பின்னர் அயோத்தி மாநகர் திரும்பிச் சென்றான் என்று திருவிழாச் சருக்கம் கூறுகிறது.

இவ்வாறு திருமயிலைத் தலபுராணம் மயிலையின் மூர்த்தி தீர்த்தத் தலப் பெருமைகளைக் கூறுகின்றது. நூல் படிப்பவர் பெறும் பயன், வாழ்த்துப் பாடல் ஆகியவற்றோடு நூல் நிறைவு பெறுகின்றது.

# 7. மட்டிட்ட புன்னைத் தமிழ் ஓதிடுவோம்

பல்லவர் காலத்துப் பக்தி இலக்கியங்களிலே தாம் முதன் முதலாகத் திருமயிலையைப் பற்றிய குறிப்புகள் காணப் பெறுகின்றன.

திருமயிலையில் கோயில் கொண்டுள்ள கூத்தாடும் விநாயகர், கபாலீசுவரர், கற்பகாம்பாள், சிங்காரவேலர் ஆகிய கடவுள்கள் மீது பாடல்கள் பாடப்பட்டுள்ளன. திருமயிலையிலுள்ள ஏழு சிவன் கோயில்கள், ஏழு தீர்த்தங்கள், தலவிசேடம், புராணக் கதைகள், பூம்பாவை வரலாறு, திருவள்ளுவர், திருமயிலையில் நடைபெறும் திருவிழாக்கள் முதலான செய்திகளைத் திருமயிலை இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் மயிலையைப் பற்றி எழுந்த இலக்கியங்கள் பெரும்பாலும் இசைப் பாடல்களாகவும், தத்துவப் பாடல் களாகவும் முன்னோர் சொன்ன கருத்துகளையே திரும்பச் சொல்வனவாகவும் அமைந்துள்ளன.

தொடக்க காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் கபாலீசுவரர் பெருமையைக் கூறுபவையாகவும், இடைக் காலத்தில் தோன்றிய புகழ் பெற்ற இலக்கியங்கள் சிங்காரவேலர் பெருமையைக் கூறுபவையாகவும் அதற்குப் பிற்பட்ட இலக்கியங்கள் கற்பகவல்லியின் பொற்பதம் பாடுபவையாகவும் அமைந்துள்ளன. இப்போது கற்பகாம்பிகையைப் பாடுவதே மரபாகக் காணப்படுகின்றது.

திருமயிலைத் திருத்தலத்தைக் குறிக்கும் வகையில் ஐயடிகள் காடவர் கோன், அப்பர், சுந்தரர், சேக்கிழார் முதலானோர் பாடியுள்ளனர். அருணகிரிநாதர் பத்துப் பாடல்களால் சிங்காரவேலனைப் புகழ்கிறார். உலா, கலம்பகம், பிள்ளைத் தமிழ், கோவை, அந்தாதி, மாலை, தலபுராணம், குறவஞ்சி முதலான சிற்றிலக்கிய வகைகளும் வெண்பாப் பாடல்களும், கீர்த்தனைகள் மற்றும் பல்வேறு பதிகங்களும் திருமயிலைத்

திருத்தலத்தையொட்டி எழுந்துள்ளன. திருமயிலைச் சிற்றிலக்கியங்கள் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் அடிப்படையில் அமைந்துள்ளன.

## சிவத்தளி வெண்பா:

ஐயடிகள் காடவர்கோன் என்னும் பல்லவ அரசர் 'சிவத்தளி வெண்பா' பாடினார் என்று பெரியபுராணம் குறிக்கிறது. இவர் காலம் கி.பி. *550-575* ஆகும். இவரே மூன்றாம் சிம்மவர்மன். சிவத்தளி வெண்பா சிதைந்த நிலையில் இன்று பதினோராம் திருமுறையில் இடம்பெற்றுள்ளது. இப்போதுள்ள பாடல்கள் இருபத்து நான்கு ஆகும். அவற்றுள் ஒன்று திருமயிலையைப் பற்றியதாகும்.

## திருஞானசம்பந்தரின் பூம்பாவைப் பதிகம்:

திருமயிலையைப் பற்றியும் கபாலீசுவரரைப் பற்றியும் எழுந்த முதல் இலக்கியம் திருஞானசம்பந்தர் பாடிய 'மட்டிட்ட புன்னையங் கானல்' என்று தொடங்கும் பதிகமேயாகும். இப் பதிகத்தைப் பூம்பாவைப் பதிகம் என்றும் கூறுவர். திருஞானசம்பந்தர் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் வாழ்ந்தவராவார். திருஞானசம்பந்தர் பாடிய பூம்பாவைப் பதிகத்தில் பதினோரு பாடல்கள் உள்ளன. முதல் பத்துப் பாடல்கள் பூம்பாவையை அழைக்கும் முறையில் அமைந்துள்ளன. பதினோராம் பாடல் பதிகத்தின் பயனைக் கூறுகிறது. இப் பதிகத்தில் மயிலைத் திருத்தலத்திலுள்ள மூர்த்தி பற்றியும், மயிலைத் தலம் பற்றியும், மயிலையில் நடைபெறும் விழாக்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளன.

## திருநாவுக்கரசரின் தேவாரம்:

சம்பந்தரின் சம காலத்தவரான திருநாவுக்கரசர் பாடிய தேவாரப் பாடல்கள் மூன்றில் திருமயிலையைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. மற்றொரு பாடலில், கபாலி என்னும் பெயர் வருவதால் அதுவும் மயிலையைக் குறிக்கும் பாடல் என்று கருதலாம். ஆறாம் திருமுறையில் புக்க திருத் தாண்டகத்தில்

முதற் பாடலில் சிவபெருமான் சிற்றம்பலத்தில் புகுந்ததைக் கூறும்போது அப்பர் மயிலையைக் குறிக்கிறார். 'மங்குல் மதி மவழும் மாட வீதி மயிலாப்பிலுள்ளார்' என்று அப்பர் குறிப்பிட்டுள்ளார்.

திருவதிகை வீரட்டானத்தைப் பாடும் காப்புத் திருத் தாண்டகத்தில் பன்னிரண்டாம் பாடலில், 'வருநீர் வளம் பெருகு மாநிருபமும் மயிலாப்பில் மன்னினார் மன்னியேத்தும்' என்று குறிப்பிடுகின்றார். திருவொற்றியூர்த் திருத் தாண்டகத்தில் ஆறாம் பாடலில்

***வடிவுடைய மங்கையுந் தாமும் எல்லாம்***
***வருவாரை எதிர் கண்டோம் மயிலாப்புள்ளே***

என்று அப்பர் பாடியுள்ளார்.

திருக்கழுக்குன்றத் திருத்தாண்டகத்தின் இரண்டாம் பாடலில்,

***கல்லாடை புனைந்தருளும் காபாலியைக்***
***கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே***

என்று முடிகின்றது. இதில் காபாலி என்று குறிப்பு வருவதால் இப்பாடல் மயிலையிலுள்ள கபாலீசுவரருக்கு உரியது என்று எண்ண இடமிருக்கிறது.

## சுந்தரர் தேவாரம் :

தேவாரம் பாடிய மூவரில் ஒருவரான சுந்தரர் காலம் கி.பி. எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியாகும். இவர் தாம் பாடியுள்ள திருத் தொண்டத் தொகையில், 'துறைக் கொண்ட செம்பவளம் இருளகற்றுச் சோதித் தொன் மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்' என்று வாயிலார் நாயனாரைக் குறிப்பிடுகின்றார்.

## திருத் தொண்டர் திருவந்தாதி :

நம்பியாண்டார் நம்பி கி.பி. 11-ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் பாடிய பாடல்கள் பதினோராம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்றான திருத்தொண்டர்

திருவந்தாதியில் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான வாயிலார் நாயனாரைக் குறிக்கும்போது திருமயிலையில் இருக்கும் வாயிலார் நாயனார் என்று குறிப்பிடுகின்றார்.

## திருதொண்டர் புராணம்:

சேக்கிழார் பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். பெரிய புராணம் என்று வழங்குகின்ற திருத்தொண்டர் புராணத்தை இவர் இயற்றினார். இந்நூலில் திருஞானசம்பந்த சுவாமிகளின் புராணத்தைச் சொல்லும்போது பூம்பாவை வரலாறு எண்பெத்தெட்டுப் பாடல்களில் சொல்லப்படுகிறது. மயிலையில் வாழ்ந்த வாயிலார் வரலாறு, வாயிலார் நாயனார் புராணம் என்னும் தலைப்பில் பத்துப் பாடல்களில் சொல்லப்படுகிறது. மயிலையைப் பற்றிய குறிப்புகள் இவற்றில் உள்ளன.

## திருப்புகழ்:

கி.பி. 15-ம் நூற்றாண்டில் சந்தப் பாடல்களால் முருகன் புகழைப் பாடியவர் அருணகிரிநாதர். சைவ சமயாசாரியார் தலயாத்திரை செய்தது போலத் தாமும் முருகனுக்குரிய தலங்களுக்குச் சென்று வணங்கும் நோக்கத்தோடு பயணம் தொடங்கினார். தொண்டை நாட்டிற்கு வந்தபோது கபாலீச்சரத்தமர்ந்த கந்தவேளாம் சிங்காரவேலனை வணங்கிப் போற்றிப் பத்துப் பாடல்கள் பாடியுள்ளார்.

## தொண்டை மண்டல சதகம்:

கி.பி. 17-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொண்டை நாட்டில் வாழ்ந்தவர் படிக்காசுப் புலவர். இவர் வரலாற்றுக் குறிப்புகளைத் தன்னகத்தே கொண்டிருக்கும் தொண்டை மண்டல சதகம் என்னும் நூலைப் பாடியிருக்கிறார். கபாலீசர், பூம்பாவை, வாயிலார் ஆகியோரைப் பற்றிப் பாடியுள்ளார்,

## வைசிய புராணம்:

சூடாமணிப் புலவர் அருளிச் செய்த வைசிய புராணத்தில் தொண்ணூற்றெட்டு நகரச் சருக்கத்தின் முதற் பாடலில் மயிலை



ஸ்ரீவள்ளி, தெய்வானையுடன் அருள்மிகு சிங்காரவேலர்



திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர்

நல்லூர் என்று குறிக்கப் பட்டிருக்கிறது. ஆயிரங் கோத்திரத் திருநாமச் சருக்கத்தின் 37-ம் பாடலில் 'மயிலை கிழான்' என்று குறிக்கப் பெறுகிறது. பூம்பாவை கயிலாச பதவி அடைந்த நிகழ்ச்சியும் குறிக்கப்பட்டுள்ளது.

## கபாலீசுவரரைப் போற்றும் இலக்கியங்கள்:

### திருமயிலை உலா:

கபாலீசுவரர் மீது பாடப் பெற்ற நூல்களுள் சிறப்பிடம் பெறத் தகுந்தது திருமயிலை உலா என்னும் நூலாகும். இதன் ஆசிரியர் பெயரும் காலமும் தெரியவில்லை. சோபகிருது ஆண்டில் புரசை அஷ்டாவதானம் சபாபதியவர்களின் மாணாக்கர், திருமயிலை வித்வான் சண்முகம் பிள்ளையவர்களால் பரிசோதிக்கப்பட்டு, மேற்படியூர் சு. சொக்கலிங்கம் பிள்ளையவர்களால் எம்பார் அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது என்று பழைய பதிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப் பதிப்பு வெளிவந்தது அறியாமல் அண்மையில் 1983-ல் விருத்தாச்சலம் ஸ்ரீகுமாரதேவர் வீரசைவ மடத்தைச் சார்ந்த ஸ்ரீலஸ்ரீ கல்யாண சுந்தர சிவப்பிரகாச தேசிக சுவாமிகளிடமிருந்து பெற்ற ஓலைச் சுவடியைக் கொண்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் திருமயிலை உலாவை வெளியிட்டுள்ளது. திரு. மு. கோ. ராமன் இதனைப் பதிப்பித்துள்ளார்.

உலா இலக்கணங்கள் முற்றும் அமைந்த இந்நூல் கலிவெண்பாவில் 605 கண்ணிகளைக் கொண்டு அமைந்ததாகும்.

### நூலாசிரியர்:

இவ்வுலா நூலாசிரியர் சிறந்த சிவ பக்தியும் சைவ நூற் புலமையும் தமிழறிவும் வரலாற்றுணர்வும் நிரம்பியவர் என்பது இந்நூலால் நன்கு புலனாகிறது.

திருமயிலைக் கபாலீசுவரர் கோயில் திருப்பணி செய்யப் பெற்றவுடன் இந்நூல் பாடப் பெற்றிருக்கிறது என்பதும்



427/1--4.

இந்நூலாசிரியரை ஆதரித்த வள்ளல் நயினியப்பன் புதல்வர் முத்தியப்பன் என்பதும், இவனே 300 ஆண்டுகளுக்கு முன் புதிதாக மயிலைக் கோயிலைக் கட்டினான் என்பதும் தெரிய வருகிறது. ஆகவே, நூலாசிரியர் காலம் 16-ம் நூற்றாண்டாகும்.

திருமயிலையைப் பற்றிய பழைய இலக்கியமாகக் கிடைப்பது திருமயிலை உலாவேயாகும். கபாலீசுவரர் பால் மட்டற்ற பக்தியும் ஈடுபாடும் கொண்டவர் இந்நூலாசிரியர் என்பதனைத் தன்மையில் பல இடங்களில் சுட்டிக் காட்டுகின்றார்.

## திருமயிலைக் கலம்பகம்:

திருமயிலை உலாவை அடுத்து இந்த நூல் தோன்றியிருக்கும். இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இதனைத் திருமயிலை வித்வான் சண்முகம் பிள்ளையவர்கள் 1903-ல் பதிப்பித்துள்ளார். நூறு பாடல்கள் அந்தாதி அமைப்பில் படைக்கப்பட்டுள்ளது.

இந்நூல் மயிலைக் கபாலீசுவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டது. இந்நூற் பாடல்கள் பலவும் கைக்கிளைத் துறைகளும், அன்பின் ஐந்திணையாகிய முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலைத் திணைகளின் துறைகள் கொண்ட அகப் பொருளனவாகவும் தேவபாணி, வெட்சி, கரந்தை, வாகை முதலிய திணைகளின் துறை கொண்ட பொருளனவாகவும் அமைந்து பாட்டுடைத் தலைவரை விளக்குவது பேரின்பம் ஊட்டுவதாக அமைந்துள்ளது.

## திருமயிலை யமக அந்தாதி:

கபாலீசுவரர்மீது தாண்டவராய கவிராயரால் கி.பி. 17-ம் நூற்றாண்டின் இறுதியில் எழுதப் பட்டதாகும். மயிலை பூம்பாவை வேலப்ப முதலியார் வேண்டுகோட்கு இணங்கிப் பாடிய நூலே திருமயிலை யமக அந்தாதியாகும். யமகம் என்பது வந்த எழுத்துக்களே பொருள் வேறுபடச் செய்யுளின் சீர் அல்லது அடிகளில் பின்னும் வருவதாகிய மடக்கணியாகும். இவ் யமக அந்தாதிப் பொருளை அறிவது அரிதாகும். ஆகையால் ஆசிரியரே இதற்கு உரையும் எழுதியுள்ளார். இந்நூல் காப்புச்

செய்யுள் ஒன்றும், வாழ்த்துச் செய்யுள் ஒன்றும் உட்பட நூற்றிரண்டு செய்யுட்களை உடையது.

இந்நூலாசிரியரே சிங்காரவேலர் பிள்ளைத் தமிழையும், சிங்கார வேலர் வெண்பாவையும் பூம்பாவை வேலப்ப முதலியார் ஆதரவினால் அரங்கேற்றினார் என்பது தெரியவருகிறது. இவற்றுள் சிங்காரவேலர் வெண்பா கிடைக்கவில்லை. திருமயிலைக் கோவை பாடிய அம்பலவாண கவிராயர் இவரைத் 'தாண்டவராய கவிராசர் என்று பாராட்டியுள்ளார். தாண்டவராய தமிழ்ச் சிங்கம்' என்று பிறரும் புகழ்ந்துள்ளனர். டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் இந்நூலைப் பதிப்பித்துள்ளார்.

## கபாலீசர் பதிகங்கள் :

ஆலந்தூர் முத்துசாமி முதலியார் என்பவர் 'திருமயிலைக் கபாலீசர் பதிகம், கற்பகவல்லியம்மை பதிகம்' என்னும் பெயரில் இரு பதிகங்களைப் பாடியுள்ளார். இந்நூல் 1855-ல் அமெரிக்கன் அச்சுக் கூடத்தில் பதிக்கப்பட்டது.

திருமயிலையில் வாழ்ந்த தாச்சி அருணாசல முதலியார், கபாலீசர் பதிகம், கற்பகவல்லியம்மை பதிகம், சிங்காரவேலர் மாலை ஆகியவற்றைப் பாடியுள்ளார். இப் பாடல் தொகுப்பு 1872-ல் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

தில்லையம்பூர் சந்திரசேகர கவிராஜ பண்டிதர் 'திருமயிலைக் கபாலீசர் பதிகம்' என்னும் பதிகத்தைப் பாடியுள்ளார். 1875-ல் இந்நூல் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் கபாலீசுவரர் மீது மூன்று பதிகங்கள் பாடியுள்ளார். இவற்றுள் ஒரு பதிகம் தவிர மற்றவை இரண்டும் முறையே 1878, 1880-ம் ஆண்டுகளில் அச்சிடப்பட்டுள்ளது.

## திருமயிலைக் கபாலீசர் இரட்டை மணிமாலை:

தேனாம்பேட்டை சுப்பராய முதலியார் திருமயிலைக் கபாலீசர் இரட்டை மணிமாலை என்னும் நூலைப் பாடியுள்ளார்.

கி.பி. 1883-ல் சென்னை கலாரத்நாகர அச்சுக் கூடத்தில் இந்நூல் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நூல் அந்தாதியில் உள்ளது. காப்புச் செய்யுள் நேரிசை வெண்பாவில் விநாயகர் மீது பாடப்பட்டுள்ளது. வெண்பா, கலித்துறை என்று மாறி மாறி 20 பாடல்கள் உள்ளன.

## திருமயிலைப் பதிற்றுப் பத்தந்தாதி:

இந்நூலை இயற்றியவர் காஞ்சிபுரம் பு. கனகசபை நாயகர். இந் நூல் கி.பி. 1883-ல் அச்சிடப்பட்டுள்ளது. கலித்துறையாப்பில் நூறு செய்யுட்கள் உள்ளன. அந்தாதித் தொடையில் இந்நூல் அமைந்துள்ளது. விநாயகர் மீது காப்புச் செய்யுள் பாடப் பட்டுள்ளது.

## திருமயிலாப்பூர்ப் பதிகங்கள்:

திருக்குருகூர் ஸ்ரீமத் ஞானசித்த சுவாமிகள் திரு மயிலாப்பூர்ப் பதிகம் என்னும் பெயரில் கபாலீசுவரர் மீது இரு பதிகங்கள் பாடியுள்ளார். இவை 'திருமயிலை, திருவான்மியூர், சாமளவல்லியார் பதிகங்கள்' என்னும் நூலில் •காணப் பெறுகின்றன. 1893-ல் இந்நூல் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

## கங்காதர நாவலர் இலக்கியங்கள்:

கங்காதர நாவலர் இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் சென்னை சேத்துப்பேடு (சேத்துப்பட்டு) என்ற பகுதியில் வாழ்ந்த பெரும் புலவராவார். இவர் அப் பகுதியில் ஸ்ரீ ஜெய விநாயக சிவப் பிரகாச மடத்தின் அருட்கவியாக விளங்கியுள்ளார்.

சைவத்தின் மேற் சமயமில்லை என்ற அடிப்படையில் தாம் சார்ந்த ஸ்ரீ ஜெய விநாயகரையும் மயிலைக் கபாலீசுவரரையும், வழிபடு கடவுளாகவும், முழுமுதற் பொருளாகவும் கொண்டு மற்றும் புறந்தொழா மாண்புடையவராக வாழ்ந்துள்ளார். இதுவரை கிடைத்துள்ள இவருடைய நூல்கள் 1. சிவஞானத்ரயம்

(1915), 2. சிவஞான ஸத்வாம்ருதம் (1919), 3. சிவஞான ரமணீயம் (1917), 4. சிவபரத் திருநெறி (1907), 5. சிவஞானப் பூரணம் (1911) 6. சிவஞானச் சிந்தாமணி (1912), 7. சிவஞானத் திவாகரம் (1913) 8. சிவஞான பாஸிய வியூகம் (1916), 9. சிவஞான பௌதிகம், 10. சிவஞான மகத்துவ சுகத்வம் (1927), 11. தோத்திர புஷணம் (1920), என்பனவாம். முதல் நூல் 1903-ல் வெளியிடப்பட்டுள்ளது. இறுதி நூல் 1927-ல் வெளியாகியுள்ளது.

## ஸ்ரீ கபாலீச்சரர் தோத்திரம்:

மோசூர் முனுசாமி முதலியார் பாடிய ஸ்ரீ கபாலீச்சரர் தோத்திரம் கலித்துறையில் 10 பாடல்கள், நேரிசை வெண்பாவில் 10 பாடல்கள், வாழி விருத்தம் ஒன்று, ஸ்ரீகபாலீச்சரர் மாலையில் அறுசீர் விருத்தத்தில் 10 பாடல்கள் ஆகிய இவை மேற்படி முனுசாமி முதலியார் எழுதி 1910-ல் வெளியான திருமயிலைப் புராண வசனம் என்னும் நூலின் இறுதியில் இணைப்பாக உள்ளன.

## சென்னைத் திருமயிலை ஸ்ரீகபாலீச்சரர் துதிப்பா மாலை:

பத்துப் பாடல்கள் அடங்கிய இந்நூலை வீ. முனுசாமிப் பிள்ளை என்பவர் பாடியுள்ளார். 1911-ல் அச்சிட்டு வெளியிட்டுள்ளார்.

சென்னை திருமயிலை ஸ்ரீ கபாலீசரர் அருள்வளர் மல்லிகைப் பா என்னும் நூலைப் புதுவை கு. ஆ. குமாரதேசிகர் இயற்றி 1911-ல் வெளியிட்டுள்ளார்.

சென்னைத் திருமயிலை ஸ்ரீகபாலீசுவரர் துதிப்பா மாலை என்னும் நூலை பாலகவி ந. முருகேசம் பிள்ளையவர்கள் எழுதி, 1913-ல் வெளியிட்டுள்ளார்.

## கபாலீசர் குறுங்கழி நெடில்:

இதனை அப்பாசாமி முதலியார் என்பவர் இயற்றியுள்ளார். இதில் பதினோரு பாடல்கள் உள்ளன. ஏட்டுச் சுவடியாக டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் நூலகத்தில் உள்ளது.

## திருமயிலை நான்மணிமாலை:

இந்நூலை மயிலை சீனி. கோவிந்தராசன் என்பவர் இயற்றியுள்ளார். இந்நூல் வெண்பா, கலித்துறை, விருத்தம், ஆசிரியப்பா என்னும் வரிசையில் நாற்பது பாடல்கள் உள்ளன. காப்புச் செய்யுள் தல விநாயகரான கூத்தாடும் விநாயகர் மீது பாடப்பட்டுள்ளது.

## பாபநாசம் சிவன் கீர்த்தனைகள்:

பாபநாசம் சிவன் அவர்களின் இயற்பெயர் இராமசாமி என்பதாகும். இவர் கபாலீசுவரர், கற்பகாம்பாள் பேரில் பல கீர்த்தனைகள் பாடியுள்ளார். மோகன ராகத்தில் ஆதி தாளத்தில் 'காபாலி கருணை நிலவு பொழி வதன மதியனொரு' என்னும் பல்லவியோடு கூடிய கீர்த்தனை, கபாலீசுவரரின் பெருமைகளைக் கூறுகிறது. 'காணக் கண்கோடி வேண்டும் கபாலியின் பவனி' என்று தொடங்கும் கீர்த்தனை புகழ் பெற்றதாகும். இக் கீர்த்தனை காம்போதி ராகத்தில் ஆதி தாளத்தில் அமைந்துள்ளது.

## திருமயிலைக் குறவஞ்சி:

'இம் மயிலைக்குப் பிரபந்த வகைகளுள் ஒன்றான குறவஞ்சி என்னும் பிரபந்தம் ஒன்று மட்டும் குறைவாயிருந்தது. அந்தக் குறையை நிறைவாக்குகிறார் அன்பர் ஸ்ரீ வீரமணி அவர்கள் தமது திருமயிலைக் குறவஞ்சி எனும் இப்பிரபந்தத்தால்' என்று இந்நூலின் அணிந்துரை புகழ் பாடுகின்றது.

இந்நூலை இயற்றியவர் யாழ்ப்பாணம் வீரமணி என்பவர். இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். அடையாறு கலாக்ஷேத்திரத்தில் இசை பயின்றவர்.

இந்நூல் திரு. கொத்தமங்கலம் சுப்பு அவர்கள் முன்னிலையில், திருமயிலைக் கபாலீச்சர விடாய் ஆற்றி விழாவில் 24-3-1957-ல் வெளியிடப் பெற்றது. நூலாசிரியர் இதனை இசை நாடகம் என்றே குறித்துள்ளார்.

## திருமயிலைக் கபாலீசன் மாலை:

இந்நூல் ஸ்ரீ பரம்பொருள் பிரபந்த மாலைத் தொடர் என்னும் தொகுப்பு நூலில் காணப்படுகிறது. இந்நூல் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் கையெழுத்துப்படியாக உள்ளது. ரா. கனகராஜையர் என்பவர் இந்நூலை 23-3-1970 அன்று எழுதி முடித்துள்ளார். இதில் 65 பாடல்கள் உள்ளன.

## திருமயிலை வெண்பா அந்தாதி:

மயிலை சே. கோவிந்தராசன் என்பவர் இயற்றியுள்ளார். இந்நூலில் நூறு பாடல்கள் உள்ளன.

## திருமயிலை ஸ்ரீ கபாலீசுவரர் துதி:

என். கோடீச்வர ஐயர் என்பவர் திருமயிலை ஸ்ரீகபாலீச்சுவரர் துதி என்னும் பெயரில் கீர்த்தனம் ஒன்று இயற்றியுள்ளார்.

## அருட்புகழ்:

அருட்கவி சேதுராமன் கபாலீசுவரர் திருமுன்னர் 18-6-62-ல் பதின்மூன்று பாடல்கள் கொண்ட பதிகம் ஒன்றைப் பாடியுள்ளார்.

இவ்வாறு பல்வகைச் சிற்றிலக்கிய நூல்கள் கபாலீசுவரர் மீது பாடப் பட்டுள்ளன. இவற்றால் திருமயிலைத் தலம் பற்றியும், கபாலீசுவரர் பெருமை பற்றியும் அன்பர்களின் பக்தி உணர்வு பற்றியும் அறிந்து கொள்ள முடிகின்றது.

## கற்பகவல்லி மீது பாடப்பட்ட இலக்கியங்கள்:

கி.பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்து கபாலீசுவரருக்கு முதன்மை கொடுத்து அவர் பெயரிலேயே இலக்கியம் படைக்கும் வழக்கம் இருந்து வந்தது. கற்பகவல்லி மீது தனியாக இலக்கியங்கள் படைக்கப்படவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டில் சக்தி வழிபாடு மிகுந்ததாலும், மகளிரே அதிக அளவு கோயிலுக்குச் செல்லும் பழக்கம் ஏற்பட்டதாலும் இந் நூற்றாண்டிலிருந்து கற்பகவல்லி மீது தனியாகப் பாடல்கள் புனையும் பழக்கம்

ஏற்பட்டது. இந் நூற்றாண்டில் கற்பகவல்லி மீதே அதிக அளவு இலக்கியங்கள் தோன்றியுள்ளன. பதிகங்களும் அந்தாதி நூல்களும் பிள்ளைத் தமிழும் கற்பகவல்லி மீது பாடப்பட்டன.

## கற்பகவல்லியம்மை பதிகம்:

ஆலந்தூர் முத்துசாமி முதலியார் என்பவர் கற்பகவல்லியம்மை பதிகம் என்று ஒரு பதிகம் பாடியுள்ளார். இப்பதிகத்தில் பத்து எழுசீர் விருத்தங்கள் உள்ளன. இது `திருமயிலைக் கபாலீசர் பதிகம், கற்பகவல்லியம்மை பதிகம்' என்னும் நூலில் காணப்படுகிறது. 1855-ம் ஆண்டு இந்நூல் பதிப்பிக்கப்பட்டது.

தாச்சி அருணாசல முதலியார் கற்பகவல்லியம்மை பதிகம் ஒன்று பாடியுள்ளார். இப்பதிகம் இவர் எழுதிய `கபாலீசர் பதிகம், கற்பகவல்லியம்மை பதிகம், சிங்காரவேலர் மாலை' என்னும் நூலில் காணப்படுகிறது. இந்நூல் 1872-ல் அச்சிடப்பட்டுள்ளது. இப்பதிகம் பன்னிருசீர் விருத்தப் பாக்கள் பத்தினால் ஆனதாகும்.

"திருமயிலைக் கற்பகவல்லி பதிகம்" என்னும் பதிகத்தைத் திருக்குருகூர் ஞானசித்த சுவாமிகள் பாடியுள்ளார். இப்பதிகம் `திருமயிலை, திருமணவூர், திருவான்மியூர், சாமளவல்லியார் பதிகங்கள்' என்னும் நூலில் காணப்படுகிறது. இப்பதிகத்தில் எண்சீர் விருத்தங்களிலான பத்துப் பாடல்கள் உள்ளன.

## திருமயிலைக் கற்பகவல்லி அஷ்டகம்:

இந்நூல் கடவுள் வாழ்த்து, நூற் பயன் நீங்கலாக எட்டுப் பாடல்களால் அமைக்கப்பட்டுள்ளது. கலி விருத்தத்தால் இந்நூல் இயற்றப்பட்டுள்ளது. இதனை இன்றைக்குச் சற்றேறக்குறைய தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன் தெய்வசிகாமணி நாயனார் என்பவர் இயற்றிப் புதுப்பித்துள்ளார். உரை தேவையின்றி மிக எளிமையாகப் புரிந்துகொள்ளத்தக்க சொற்களால் ஆக்கப் பட்டுள்ளது. இது ஒரு சிறந்த தோத்திர நூல்.

## கற்பகவல்லி மாலை:

இந்நூல் எண்சீர் விருத்தத்தாலான 105 செய்யுட்களைக் கொண்டுள்ளது. உரையோடு உள்ளது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் நூலகத்தில் இந்தச் சுவடி உள்ளது.

## கற்பகவல்லியார் பஞ்சரத்தினம்:

மதுரகவி மாணிக்க முதலியார் கற்பகவல்லியம்மையார் பஞ்சரத்தினம் என்னும் பெயரில் ஏழுசீர் விருத்தத்தில் ஐந்து பாடல்கள் பாடியுள்ளார். இப்பாடல்கள் 1905-ல் அறுபத்துமூவர் விழாவில் வெளியிடப்பட்ட நூலில் அடங்கியுள்ளன.

## ஸ்ரீகற்பகாம்பாள் பாடல்கள்:

இப்பாடல்கள் கையெழுத்துப் படியாக மயிலைக் கபாலீசுவரர் கோயில் நூலகத்தில் உள்ளது. இதில் பத்தொன்பது பாடல்கள் உள்ளன. 1964-ம் ஆண்டு அம்பிகையின் அருள் வாக்கினால் நெல்லையைச் சேர்ந்த யு. எஸ். நடராஜ சர்மா என்பவர் கற்பகவல்லியின் சந்நிதியில் இப்பாடல்களைப் பாடினார். இக்கீர்த்தனைகள் இராக தாளங்களோடு அமைந்துள்ளன.

## கற்பகாம்பிகை அந்தாதிப் பதிகம்:

சுவாமி சரவணபவானந்தர் என்பவர் கற்பகவல்லியின்மீது அறுசீர் விருத்தத்தில் பத்துப் பாடல்களைக் கொண்ட கற்பகாம்பிகை அந்தாதிப் பதிகத்தைப் பாடியுள்ளார்.

## அருட்புகழ்:

அருட்கவி சேதுராமன் கற்பகாம்பிகை திருமுன் 1962-ல் ஒரு பா ஒருபஃது கட்டளைக் கலித்துறையில் ஒரு பதிகம் பாடியுள்ளார்.

## கற்பகவல்லிமாலை:

இந்நூல் பராசக்தி பிரபந்தமாலை என்னும் தொகுப்பு நூலில் காணப்படுகிறது. இது கையெழுத்துப்படி வடிவில் உள்ளது. காப்புச் செய்யுள் நீங்கலாக நூற்றெட்டுப் பாடல்கள் உள்ளன.

இந்நூல் கலித்துறைச் செய்யுட்களால் அமைந்துள்ளது. இதனை இயற்றியவர் நா. கனகராஜையர். 1969-ல் இந்நூலாசிரியர் சென்னையில் இருக்கும்போது இப்பாடல்களைப் பாடினார்.

## ஸ்ரீ கற்பகாம்பாள் அந்தாதி:

சுத்த சத்வானந்தா என்னும் புனைபெயருடைய என்.எஸ். சிதம்பரம் இந்நூலைப் பாடியுள்ளார். அந்தாதி ஐந்து என்னும் தொகுப்பு நூலில் இந்த நூல் காணப்படுகிறது. விநாயகர் துதி, நூற்பயன் நீங்கலாக நூறு பாடல்கள் உள்ளன. இப்பாடல்கள் கலித்துறையில் அமைந்துள்ளன. இசைப்பாடல்களாக இவை அமைந்துள்ளன. இதையடுத்துக் கற்பகாம்பாள் மீது பாடியுள்ள ஐந்து கீர்த்தனங்கள் காணப்படுகின்றன.

## திருமயிலாபுரிக் கற்பகாம்பிகை மாலை:

இந்நூலை, கி. வா. ஜகந்நாதன் இயற்றியுள்ளார். கட்டளைக் கலித்துறையால் இயன்ற முப்பது செய்யுட்களை இந்நூல் கொண்டுள்ளது.

## திருமயிலை ஸ்ரீ கற்பகாம்பாள் அஷ்டகம்:

இந்நூல் பன்னிரு சீர் விருத்தத்தில் எட்டுப் பாடல்களைக் கொண்டுள்ளது. காமாட்சிதாசர் ஆர். சோமசுந்தரம் ஐயர் என்பவர் இதனை இயற்றியுள்ளார்.

## திருமயிலைக் கற்பகாம்பிகை பிள்ளைத் தமிழ்:

திருப்புகழ்க் கவிராயர் ஈ. வே. வேங்கடசுப்பிரமணியன் என்பவர் காப்புச் செய்யுள் இரண்டு நீங்கலாகப் பருவத்திற்கு ஒரு பாடல் வீதம் பத்துப் பாடல்களைப் பாடியுள்ளார்.

## திருமயிலைக் கற்பகவல்லி திருப்பதிகம்:

இந்திரபீடம் பாலகவி ரா. அருளானந்தம் என்பவர் பத்துப் பாடல்கள் கொண்ட இப்பதிகத்தைப் பாடியுள்ளார். இவை எழுசீர் விருத்தத்தில் அமைந்துள்ளது.

இப்பகுதியில் கூறப்பட்ட இலக்கியங்களினால் இக்காலத்தில் கற்பகவல்லி மீதே கவிஞர்கள் அதிகமாகப் பாடல் புனைகின்றனர் என்பதை அறியலாம்.

## சிங்காரவேலர்மீது பாடப்பட்ட இலக்கியங்கள்:

திருமயிலைக் கபாலீசுவரர் கோயிலில் குடிகொண்டிருக்கும் சிங்காரவேலனை அருணகிரியார் கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டில் புகழ்ந்து பாடிய பத்துப் பாடல்கள், திருப்புகழில் காணப்படுகின்றன. அவருக்கு முன்னர், சிங்காரவேலர்மீது பாடல் பாடிய புலவர் எவரும் இலர். அவருக்குப் பிறகு கி.பி. பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் சிங்காரவேலர்மீது சிற்றிலக்கியங்கள் பாடப்பெற்றன. அதைத் தொடர்ந்து புலவர் பலரும் பதிகங்கள் பாடியிருக்கின்றனர்.

## திருமயிலைச் சிங்காரவேலர் பிள்ளைத் தமிழ்:

பிள்ளைத் தமிழ் இலக்கணத்திற்குற்ற இலக்கியமாக மரபின் வழுவாமல் அமைந்தது திருமயிலைச் சிங்காரவேலர் பிள்ளைத் தமிழாகும். இந்நூலாசிரியர் தாண்டவராய கவிராயராவார். இவர் மயிலையிலுள்ள வைசிய வள்ளல்கள், சிங்காரவேலர் மேல் பிள்ளைத் தமிழ் பாடச்சொன்னதை முருகன் வாக்காகவே கொண்டு கட்டளையிட்டதாக எண்ணிப் பாடினார். கி.பி. 1756-ம் ஆண்டில் அரங்கேற்றினார். கடவுள் வாழ்த்துப்பாடல் உட்பட 101 பாடல்களைக் கொண்டது இந்நூல். ஆசிரியரின் தமிழ்ப்பற்றும் கற்பனைத் திறனும் சமயச் சார்பும் நூலெங்கும் ஊடும் பாவுமாக அமைந்துள்ளன. இந்நூல், அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தார் 1953-ல் வெளியிட்ட திருமயிலைப் பிரபந்தங்கள் என்னும் தொகுப்பில் முதல் நூலாக உள்ளது.

## திருமயிலைக் கோவை:

திருமயிலைக் கபாலீச்சரத்தின் கண் எழுந்தருளியுள்ள சிங்காரவேலராகிய முருகப்பெருமானைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு திருமயிலைக் கோவை, அம்பலவாணக்

கவிராயரால் பாடப்பெற்றது. இவர் சிறந்த தமிழ்ப் புலவர். தருமபுர மடத்து ஆதின வித்வானாக இருந்தவர். இந்நூலிலுள்ள மொத்தப் பாடல்கள் 463 ஆகும். கோவை நானூறும், அறுபத்து மூவர் நினைவாக மேற்கொண்டு அறுபத்து மூன்றும் இணைத்துப் பாடினாரோ என்று எண்ணும்படி தோன்றுகிறது. இந்நூலும் திருமயிலைப் பிரபந்தங்கள் என்னும் தொகுப்பு நூலில் உள்ளது.

### சிங்காரவேலர் மாலை:

இந்நூல் காப்புச் செய்யுள் கூத்தாடும் விநாயகர்மீது நேரிசை வெண்பாவில் பாடப்பட்டுள்ளது. முப்பது பாடல்கள் கொச்சகக் கலிப்பாவில் அமைந்துள்ளன. இப்பாடல்களைத் தாச்சி அருணாசல முதலியார் பாடியுள்ளார்.

### திருமயிலைக் குகன் பதிகங்கள்:

கி.பி. 1878-ல் வெளியான தண்டபாணி சுவாமிகளின் பதிகத் தொகுப்பில், இரண்டு பதிகங்கள் திருமயிலைச் சிங்காரவேலர்மீது பாடப்பட்டவையாகும்.

### மயிலைச் சண்முகப் பஞ்சரத்தின மாலை:

இந்நூலாசிரியர் என். கோடீஸ்வரய்யர் என்பவராவார். இந்நூல் 1915-ல் வெளியிடப்பட்டது. இவர் பாடல்கள் 'தோத்திரத் திரட்டு' என்னும் பெயரில் வெளியிடப்பட்டுள்ளது. மயிலைச் சண்முகப் பஞ்சரத்தினமாலை என்பது 50 பாடல்களாக உள்ளது. இவை பதினான்கு சீர் விருத்தங்களாக உள்ளன. இவை துதிப் பாடல்களாக அமைந்துள்ளன.

### அருட்புகழ்:

அருட்கவி சேதுராமன் 1962-ம் ஆண்டு, கபாலீசுவரர் கோயிலில், சிங்காரவேலர் சந்நிதி முன்னிலையில் ஆறு சந்தப் பாடல்கள் பாடியுள்ளார். இப்பாடல்களுக்கு இராக தாளங்கள் குறிக்கப்பட்டுள்ளன.

## மயிலைச் சிங்காரவேலன் இரட்டை மணிமாலை:

கி.வா. ஜகந்நாதன் சிங்காரவேலர்மீது காப்புச் செய்யுள் நீங்கலாக இருபது பாடல்கள் பாடியுள்ளார். முதலில் நேரிசை வெண்பா, அடுத்துக் கலித்துறை என்று அந்தாதி முறையில் பாடப்பட்டுள்ளது. இந்நூல் 1966-ல் வெளியிடப்பட்டுள்ளது.

## திருமயிலைச் சிங்காரவேலர் பதிகம்:

கி.வா. ஜகந்நாதன் சிங்காரவேலர்மீது அறுசீர் ஆசிரிய விருத்தத்தால் இயன்ற பத்துப் பாடல்களைப் பாடியுள்ளார். நூல் முதலில் விநாயகர்மீது பாடப்பட்ட காப்புச் செய்யுள் ஒன்றுள்ளது. இந்நூலும் 1966-ல் வெளியிடப்பட்டதாகும்.

## பூம்பாவை தலச் சிறப்பு மாலை:

இந்நூலை நா. கனகராஜய்யர் எழுதியுள்ளார். இந்நூல் கையெழுத்துப்படியாக அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் உள்ளது. காப்புச் செய்யுள், வாழ்த்துச் செய்யுள் நீங்கலாக இந்நூல் கலித்துறையிலான நூறு செய்யுட்களைக் கொண்டுள்ளது. பூம்பாவை வரலாறும் தலச்சிறப்பும் இப்பாடல்களில் விளக்கப்படுகிறது.

## திருமயிலை அறுபத்துமூவர் வழிநடைச் சிந்து:

இப்பாடல் தமிழ்நாடு என்னும் தொகுப்பு நூலில் காணப் படுகிறது. இதனை இயற்றியவர் பெயர் தெரியவில்லை. அறுபத்துமூவரையும், அங்கம் பூம்பாவையும், கபாலீசர் வருகிற காட்சியையும் காணலாம் என்று இப்பாடல் கூறுகின்றது.

## திருமயிலை உவமை வெண்பாவும் திருமயிலை வெண்பாவும்:

இந்நூல்கள் கபாலீசுவரரைத் தலைவராகக் கொண்டு பாடல் எண்கள் முறையே நூற்று முப்பதுவும், நூறும் நேரிசை வெண்பாவாக விளங்குகின்றன. உவமை வெண்பா, திருநெல்வேலி

நடலிங்கக் கவிராயர் பாடியது. மயிலை வெண்பாவின் ஆசிரியர் பெயரும் ஊரும் அறிய இயலவில்லை. இந்நூல்கள் கருத்தமைந்ததியிலும் சொல்லோட்டத்திலும் சிறப்பாக அமைந்துள்ளன. முன்னதில் ஊர்ப்பெயர்களும் இறைவன், இறைவி, ஓரிரு அடியார் பெயரும் கொண்டிலங்குவது; பின்னது இறைவர்-இறைவியுடன் இறையடியார் பலர் பெயர்களையும் இணைத்துக்கட்டி இன்பூட்டுவது.

## மயிலை நாதமுனி முதலியார் இயற்றிய திருமயிலைத் தலபுராணம்:

மயிலை தணிகாசல முதலியார் மாணவராகிய புராண ரத்னாகரம்-மயிலை நாதமுனி முதலியார் அவர்களால் பாடப்பெற்று, கோமளேசுவரன் பேட்டை வித்வான் ம. இராஜகோபால் பிள்ளையவர்களால் பார்வையிடப்பட்டு 1924-ம் ஆண்டில் பதிப்பிக்கப்பட்டது. இந்நூல் 806 திருவிருத்தங்கள் கொண்டதாக அமைந்துள்ளது.

## திருமயிலாப்பூர் தலமகிமைக் கீர்த்தனம்:

இக்கீர்த்தனை 65 ஆண்டுகளுக்கு முன்பு, எட்டையபுர சமஸ்தானவித்வான் வியாசர்பாடி சுந்தர முதலியார் அவர்களால் பாடப்பட்டன. இக்கீர்த்தனை சங்கராபரண இராகத்தில் ஆதிதாளத்தில் அமைந்துள்ளது.

## கிடைக்கப்பெறாத நூல்கள்:

திருமயிலையைக் குறித்து எழுந்த நூல்களுள் தாண்டவராய கவிராயர் இயற்றிய சிங்காரவேலர் வெண்பா, கருவம்பாக்கம் ஆறுமுக முதலியார் என்பவர் இயற்றிய பூம்பாவையார் விலாசம், திருமயிலைக் கபாலீச்சரர் கவி விண்ணப்ப மாலை, திருமயிலை சிங்காரவேலர் கும்மி, தொட்டிக்கலை நாராயணசாமி முதலியார் பாடிய திருமயிலை வெண்பா மாலை, திரிசிரபுரம் ஆ. பெருமாள் பிள்ளை இயற்றிய சென்னை திருமயிலை கபாலீசர் சிவராச சங்கீர்த்தனம், கோவிந்தசாமி உபாத்தியார் பாடிய சிங்காரவேலர் கீர்த்தனம், தா. நெல்லையப்ப பிள்ளை பாடிய திருமயிலை

சுப்பிரமணியர் தோத்திரம், அஷ்டாவதனம் சபாபதி முதலியார் இயற்றிய மயிலை வெண்பா மாலை, திருமயிலை சண்முகம் பிள்ளை பாடிய கபாலீசர் பஞ்சரத்தினம், கற்பகவல்லி மாலை, பண்டித மனோன்மணியம்மையார் பாடிய திருமயிலைக் கற்பகவல்லி அந்தாதி, கருப்பையா பாவலர் பாடிய திருமயிலை கற்பகாம்பிகை மாலை, மயிலைச் செந்தில்வேல் முதலியார் பாடிய ஐந்திணைக் கோவை ஆகிய நூல்கள் இப்போது கிடைக்கப்பெறவில்லை.

திருமயிலை தொடக்க காலத்திலிருந்து சமயத்தோடு தொடர்புடையதாக இருந்து வந்திருக்கிறது. சைவ சமயத்தின் சிறப்புமிகு மையமாக மயிலாப்பூர் சிறப்புற்று விளங்குகிறது. இதனால் சைவ சமயத் தொடர்பான இலக்கியங்கள் எண்ணற்றவை இயற்றப்பட்டன; இயற்றப்படுகின்றன; இனியும் இயற்றப்படும்.

திருஞானசம்பந்தர் பரவிப் போற்றிப் பாடிய திருமயிலைக் கபாலீச்சரத்து அமுதை நிலத்திடை வீழ்ந்து இரு கை கூப்பி வணங்கித் துதிப்போம்.

பின்னிணைப்பு

# திருக்குளச் சீரமைப்புப்பணி மற்றும் தெப்பத் திருவிழா பற்றிய சிறுகுறிப்பு

சென்னை, திருமயிலை அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலின் தெப்பக்குளம் மொத்தப் பரப்பளவு வெளிப்பக்கம் 630 அடி நீளமும், 475 அடி அகலமும், 18½ அடி ஆழமும் கொண்டதாகும். இதன் நடுவில் 76 அடிக்கு 76 அடி நீராழி மண்டபம் அமைந்துள்ளது. தைப்பூசத் தெப்போற்சவம் இந்த ஆண்டு பௌர்ணமி தினத்தன்று 6-2-1993 தொடங்கி அன்று முதல் மூன்று நாட்கள் மிகச் சிறப்பாக நடைப்பெற்றது. போதுமான ஆழத்திற்குத் தண்ணீர் இல்லாததினால் நிலைத்தெப்பமாக அமைக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பெருமுயற்சியினாலும் உதவியினாலும், கடந்த ஐந்தாண்டுகளாக நடைபெறாத தெப்போற்சவம் இந்த ஆண்டு சிறப்பாக நடைபெற்றது. இதற்குமுன் 1987 ஆம் ஆண்டு தை மாதத்தில் பௌர்ணமி நாளன்று தொடங்கி மூன்று நாட்களுக்கு நடத்தப் பட்டது. 1988 ஆம் ஆண்டு முதல் 1992 ஆண்டு வரை சரிவர மழையில்லாத காரணத்தாலும், குளத்தைச் சுற்றி மழைநீர் வரும் குழாய்களில் அடைப்பு ஏற்பட்டு நீர் வராமையினாலும், சிறிதளவே வந்த மழைநீர் மணல் பரப்பினால் ஓரிரு நாட்களில் உறிஞ்சப்பட்டுக் காய்ந்துவிட்டமையினாலும் தெப்பம் நடத்த இயலவில்லை. தெப்பக்குளத்தில் படுகை மணல் பாங்கானதாக இருந்ததால் நீர்வரத்து இருந்தாலும், படுகையில் நீர் மிகக் குறுகிய காலத்திலேயே படுகையில் தேங்காமல், மணல் படுகையினால் இழுத்துக்கொள்ளப்பட்டது. இந்த நிலையில் கடந்த ஐந்து வருடங்களில் குளத்தில் நீரில்லாமல் மணற் பாங்காகவே இருந்ததினால் தெப்போற்சவம் நடத்த இயலவில்லை.

தமிழ்ப்புத்தாண்டுச் சித்திரைத் திங்கள் முதல் நாள் 13-4-1992 அன்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் திருக்குளத்திற்கு வருகைதந்து திருக்குளச் சீரமைப்புப்பணிக் கல்வெட்டினைத் திறந்து வைத்துக் குத்துவிளக்கு ஏற்றித் தொடங்கி வைத்தார்கள்.

திருக்குளச் சீரமைப்புப் பணிக்கு ஆகும் மொத்தச் செலவுத் தொகை மதிப்பீடு ஒரு கோடி ரூபாய் என்று தமிழக அரசு

திட்டமதிப்பீடு செய்தது. முதற் கட்டப்பணிக்கு ரூபாய் 35 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைப்புப்பணிகள் தொடங்கப்பட்டன. திருக்குளச் சீரமைப்புப்பணிக்கு அரசு மான்யமாக ரூபாய் 12.50 இலட்சமும், மாண்புமிகு முதலமைச்சரின் திருக்கோயில் பராமரிப்பு நிதியிலிருந்து ரூ. 12.50 இலட்சமும் அளிக்கப்பட்டுச் சீரமைக்கும் பணி விரைவில் செய்யப்பட்டு முடிக்கும் நிலையில் உள்ளது.

திருக்குளம் சீரமைக்கும் பணியின் ஓர் அங்கமாக குளத்தின் படுகையில் நான்கு சுற்றுப்புறங்களிலும் இரண்டடி உயரத்திற்குச் செங்கற்களால் தடுப்புச் சுவர் கட்டப்பட்டுத் திருக்குளத்தில் 2 அடி உயரத்திற்குக் களிமண் கடப்பாக்கம் பொதுப்பணித்துறை ஏரியிலிருந்து செங்கை எம்.ஜி.ஆர். மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதிப்பெற்று லாரிகள் மூலம் கொண்டுவரப்பட்டுப் படுகையில் நிரப்பிச் சமன் செய்யப்பட்டுக் களிமண் நிரப்பும் பணி முடிக்கப்பட்டது. சவுடு மண் களிமண் தரைக்குமேல் கொஞ்சம் போடப்பட்டது. தெப்பக்குளத்தைச் சுற்றியுள்ள பழைய கிராதி வேலிகளை அகற்றிப் பழுதுப்பார்த்துச் சுற்றிலும் 2½ அடி உயரத்திற்கு மதில் சுவர் கட்டி அதன்மேல் சீர்திருத்தப்பட்ட இரும்புக் கிராதிகளைப் பொருத்தும் பணி ரூ. 3.75 இலட்சத்தில் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

1992 நவம்பர் மாதத்தில் பெய்த மழையின் காரணமாகக் குளத்தில் 20-11-1992இல் 5 அடி உயரத்திற்கு நீர் நிரம்பியிருந்தது. பிறகு நீர் ஆவியாகும் தன்மையினாலும் மற்றும் ஓரளவு படுகைமூலம் உறிஞ்சும் தன்மையினாலும் நாள்தோறும் இரண்டு அங்குலம் குறைந்து வந்தது. 19-1-1993 ஆம் தேதியில் நீர் மட்டம் 2 அடியாகக் குறைந்தது. இந்நிலையில் தெப்பக்குளத்தில் தெப்போற்சவம் நடத்த 5 அடி ஆழத்திற்குத் தெப்ப நாளன்று நீர் இருப்பது அவசியமாகின்றது. போதுமான ஆழம் தண்ணீரில்லாததினால் இந்த ஆண்டு தெப்போற்சவம் தைமாதம் பௌர்ணமி நாள் 6-2-1993 அன்று தொடங்கி மூன்று நாட்கள் நிலைத்தெப்பமாக அமைக்கப்பட்டுச் சீரும் சிறப்புமாகக் கொண்டாடப்பட்டது.

# திருக்கோயில் நிருவாகம்

| | | |
|---|---|---|
| 1. | இருப்பிடம் | சென்னை-4. மயிலாப்பூர், சர்வே எண்.3141இல் சுமார் 33 கிரவுண்டு 2234 சதுரஅடி நிலப்பரப்பில் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் அமைந்துள்ளது. |
| 2. | பூஜை காலங்கள் | 5 காலபூஜை.<br>(1) காலை 5.00 மணி திருவனந்தல்.<br>(2) காலை 8.00 மணி காலசந்தி<br>(3) பகல் 12.00 மணி உச்சிகாலம்<br>(4) மாலை 5.00 மணி சாயரட்சை<br>(5) இரவு 9.00 மணி அர்த்தஜாமம். |
| | பக்தர்கள் வசதிக்காக கோயில் திறந்துஇருக்கும் நேரம் | காலை 5 மணி முதல் பகல் 12.00<br>மாலை 4 மணி முதல் இரவு 9.00 |
| 3. | அபிஷேகம் செய்யப்படும் நேரம் | காலை 8. 00 மணி கால சந்தி<br>பகல் 12.00 மணி உச்சிகாலம் |

4. திருவிழாக் குறித்து முழுவிவரம்

| | |
|---|---|
| சித்திரை : | சித்திரை பௌர்ணமி<br>வசந்த உற்சவம் |
| வைகாசி : | லட்ச தீபம், விசாகம்<br>ஞானசம்பந்தர் விழா<br>10ஆம் நாள் விழா |
| ஆனி : | 1008 சங்காபிஷேகம்<br>(கும்பாபிஷேக திருநட்சத்திரம்)<br>பவித்ரோச்சவம்<br>ஆனி திருமஞ்சனம் |
| ஆடி : | ஆடி வெள்ளி 5 வாரம்<br>பன்னிரு திருமுறை 12 நாள் |
| ஆவணி : | விநாயகர் சதுர்த்தி<br>லட்சார்ச்சனை |
| புரட்டாசி: | நவராத்திரி விழா, நிறைமணிக் காட்சி |

| | | |
|---|---|---|
| ஐப்பசி | : | கந்தர்சஷ்டி விழா 6 நாள் சிங்காரவேலர் லட்சார்ச்சனை |
| கார்த்திகை | : | கார்த்திகை சோமவாரம் சங்காபிஷேகம்: 5 வாரம் கார்த்திகை தீபம் சுவாமி லட்சார்ச்சனை. |
| மார்கழி | : | உஷத்கால பூஜை திருவெம்பாவை விழா 10 நாள், ஆருத்திரா தரிசனம். |
| தை | : | அம்பாள் லட்சார்ச்சனை தெப்பத்திருவிழா மூன்று நாள் |
| மாசி | : | மகா சிவராத்திரி கடலாட்டு விழா (மாசிமகம்) கோலவிழி அம்மன் 1008 பால்குட விழா. |
| பங்குனி | : | பிரம்மோற்சவம் 10 நாள் விடாயாற்றி விழா 10 நாள் |

5. நிர்வாகம் : நடைபெறும் விவரம்

1959ஆம் ஆண்டு சட்டப்படி நிர்வாக திட்டம் உள்ளது. அதன்படி நிர்வாகம் நடைபெறுகிறது. துணை ஆணையர் ஓ.மு. 125/68 நாள், 8-5-1970 மற்றும் டபிள்யூ.பி.893/80 நாள் , 14-2-1982 அறங்காவலர்கள் நியமனம் ஐந்து நபர்கள்.

1) பூந்தமல்லி உயர் துளுவவேளாளர் வகுப்பு:1
2) அரிசன சமூகம்:1
3) இதர மூன்று நபர்கள் சட்டவிதி களின்படி நியமனம் செய்யப்பட வேண்டும். இத்திருக்கோயிலில் 1991ஆம் ஆண்டு துணை ஆணையர் அந்தஸ் திற்கு உயர்த்தப்பட்டு துணை ஆணை யர் செயல் அலுவலராக தக்காராக செயல்பட்டு வருகிறார்.

6. சொத்துக்கள் விவரம்

(1) புழல் கிராமத்தில் சர்வே எண்.145/2ல் 3 ஏக்கர் புஞ்சை நிலம் உள்ளது.

| | |
|---|---|
| | *(2) மனைகள் எண்ணிக்கை:* |
| | விஸ்தீர்ணம் 112 மனை 1823 சதுரஅடி வாடகைதாரர் எண்ணிக்கை : 121 |
| | ஆண்டு வருமானம் : ரூ. 63,546.00 |
| | *(3) அ) நீண்டகால குத்தகை (மனை வாடகை)* |
| | விஸ்தீர்ணம் 275 மனை 52 சதுர அடி |
| | ஆண்டு வருமானம் : ரூ.25,349.97 |
| | (4) கட்டிட எண்ணிக்கை : 190 |
| | விஸ்தீர்ணம் 522 மனைகள் 1846 சதுர அடி |
| | குடியிருப்பு: 144 |
| | வியாபாரஸ்தலம்: 43 |
| | அன்பு இல்லம் : 1 |
| | கல்யாண மண்டபம் 1 |
| | சைதாப்பேட்டை வீடு 1 |
| | 190 |
| | ஆண்டு வருமானம் : ரூ. 14,47,825.00 |
| 7. திருக்கோயிலுக்குச் சொந்தமான நகைகள் | பொன் இனங்கள் எண்ணிக்கை : 134 (1,457 கிராம் 550 மி. கிராம்) |
| | வெள்ளி இனங்கள் எண்ணிக்கை : 16 (1,721 கிராம் 500 மி. கிராம்.) |
| | ஜெய்ப்பூர் சிறிய கற்கள் எண்ணிக்கைகள் 21 |
| | நவரத்தின கற்கள் : எண்ணிக்கைகள் 9 |
| | செப்புமேல் வெள்ளி முலாம் பூசிய இனங்கள் எண்ணிக்கைகள் 3 |
| | வரத, அபயஅஸ்தம் எண்ணிக்கைகள் 2 |
| | (பிற்சேர்க்கை மதிப்பீடு செய்த நாள் 12-4-1991 மற்றும் 30-4-1991) பசலி 1401-ல் |

பிற்சேர்க்கை மதிப்பீடுசெய்யப் படாமல் உள்ள இனங்கள்:
(அ) வெள்ளி (26 இனங்கள்) :
(4கிலோ 300 கிராம் 800 மில்லி கிராம்)

ஆ) தங்கம் (36 இனங்கள்)
485 கிராம் 722 மில்லி கிராம்

| | | |
|---|---|---|
| 8. | முதலீடுகள் விவரம் | : மொத்த முதலீடுகள் |
| | ஆலயம் | : ரூ. 94,87,830.86 |
| | தங்கரதம் | : ரூ. 21,28,065.44 |
| | முதலீடுகள் மூலம் வட்டி | : ரூ. 8,83,663.41 |
| 9. | உபகோயில்கள் விவரம் : | அருள்மிகு கோலவிழியம்மன் ஆலயம், ஜி.என். செட்டிதெரு, மயிலாப்பூர், சென்னை-4 |
| 10. | பக்தர்கள் வசதிக்காக செய்யப்பட்ட விவரம் : | இத்திருக்கோயிலில் பக்தர்கள் வசதிக்காக குளிர்காற்று வசதி, குளிர் நீர் வசதி செய்யப் பட்டுள்ளது. பக்தர்கள் தங்கிச் செல்ல நவராத்திரி மண்டபம் வசதியாக உள்ளது.. பக்தர்களுக்கு வசதியாக பிரகாரத்தில் சுற்றுப் புறம் சோடியம் விளக்கு அமைத்து நல்ல ஒளியுடன் இருக்க செய்யப்பட்டுள்ளது. மேலும் மிதியடி பாதுகாப்பு வசதி, நூல் நிலையம், திருமண மண்டபம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. திருக் கோயில் மூலம் பக்தர்கள் வசதியை முன்னிட்டு குறைந்தவிலையில் பிரசாதம் விற்பனையும் செய்யப்படுகிறது. மேலும் திருக்குறள் வகுப்பு, அன்பு இல்லம் மற்றும் சமய நூல்கள் விற்பனை செய்யும் |

| | | | |
|---|---|---|---|
| | | | நிலையமும் அமைத்து கொடுக்கப் பட்டுள்ளது. இயற்கை எழில் மிக்க பூங்கா அமைக்கப் பட்டுள்ளது. ஊர்திகளில் வரும் சுற்றுலா பயணிகளுக்கு மேலக் கோபுரத்திற்கு வெளியே மாநக ராட்சிக்கு இடம் கொடுத்து மாநகராட்சி கழிப்பிடம் கட்டி குறைந்த கட்டணத்தில் பக்தர்கள் உபயோகப்படுத்த வசதி செய்துகொடுக்கப் பட்டுள்ளது. |
| *11.* | நடத்தப்படும் கல்வி, சமூகநிலையம், மருத்துவமனை திருமண மண்டபம், அன்பு இல்லம், நூல் நிலையம், தகவல் நிலையம், ஆகமபாட சாலை விவரம். | : | இத்திருக்கோயில் மூலம் திருமண மண்டபம், அன்பு இல்லம், நூல் நிலையம் நடத்தப்பட்டு வருகிறது. |
| *12.* | பொது மற்றும் ஏனைய விவரம் | : | கீரின்வேஸ் சாலையில் உள்ள காலி இடத்தில் ஒரு வர்த்தக வளாகம் ரூ. 90 லட்சத்திற்கும் ஒரு அதிநவீன திருமண மண்டபம் ரூ. 55/- லட்சத்திற்கும் கட்டுவதற்கு மதிப்பீடு அங்கீகாரம் அளிக்கப் பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் அரசு 23-1-1991ல் பெறப்பட்டு அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. வர்த்தக வளாகம் கட்டுதல் தொடர்பாக ஆணையரது ந.க. 2729/90/ஒய்1நாள் 28-6-1991ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தற்சமயம் வர்த்தக வளாகம் கட்டும் பணிதுவங்கப்பட்டு, மேல்தளம் வரைகட்டிடம் எழுப்பப்பட்டு ஜல்லி போடப்பட்டுள்ளது. சன்ஷேடுகளுக்கு காங்கிரீட் போடப்பட்டுள்ளது. கல்யாண மண்டபம் கட்ட திருக்கோயில் |

நிதிநிலை போதுமானதாக இல்லாமையால் ஆணையரது நே.மு.க.9111/91/ஒய்1நாள் 24-1-1992-ல் திருமண மண்டபம் கட்டும் நடவடிக்கை கைவிடப்பட்டது. திருக்கோயில் திருக்குளத்தை சீர் அமைக்கும் பொருட்டு திருக் குளத்தில் களிமண் மற்றும் வண்டல்மண் பரப்பும் பணிகள் முடிக்கப்பெற்று திருக்குளத்தைச் சுற்றிவேலி அமைக்க மதில்சுவர் கட்டும்பணி துரிதமாக நடைபெற்று வருகிறது. 6-2-1993 அன்று நிலைத் தெப்ப உற்சவம் நடத்தப்பட்டது. மேலும் தங்கரத திருப்பணி வேலை ஆணையர் உத்திரவுப்படி தமிழ்நாடு கை வினைப்பொருள் கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்டு தங்கரதம் செய்ய மரம் வாங்க முன் பணமாக ரூ. 3,13,750.00 முன் தவணையாக கொடுக்கப்பட்டுள்ளது. திருக் கோயிலை சுற்றி ஒளி பிழம்பான மின் விளக்குகள் உபயமாகபெறப் பட்டு அமைக்கப்பட்டு சேவார்த்தி கள் வசதியுடன் தரிசனம் செய்து செல்ல வழிவகை செய்யப் பட்டுள்ளது. மேலும் திருக் கோயிலின் ஐந்து முக்கிய இடங்களில் அலங்கார வளைவுகள் வைத்து பூஞ்செடிகள் வைக்கப் பட்டுள்ளது. கோயிலின் தெற்குப்பிரகாரத்திலும், மேல் கோபுரம் வெளியேயும் கோயிலை ஒட்டினாற போல் பூஞ்செடிகள் வைத்து பராமரிக்கப்பட்டு வருகின்றன.

# அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் கட்டணங்கள்

## அர்ச்சனைக் கட்டண விவரம்:

| | | |
|---|---|---|
| அஷ்டோத்திரம் | 108 போற்றிகள் | ரூ. 1 (ரூபாய் ஒன்று மட்டும்) |
| திரிசதி | 308 போற்றிகள் | ரூ. 1.50 (ரூபாய் ஒன்று, காசுகள் ஐம்பது மட்டும்) |
| சகஸ்ரநாமம் | 1008 போற்றிகள் | ரூ.3 (ரூபாய் மூன்று மட்டும்) |

## அபிஷேகங்கள் கட்டண விவரம்:

| | |
|---|---|
| அருள்மிகு கபாலீசுவரர் சுவாமி | ரூ. 101.00 |
| அருள்மிகு கற்பகாம்பாள் | ரூ. 101.00 |
| அருள்மிகு சிங்கார வேலர் | ரூ. 101.00 |
| அருள்மிகு நந்தீஸ்வரர் | ரூ. 101.00 |
| அருள்மிகு அண்ணாமலையார் | ரூ. 101.00 |
| அருள்மிகு துர்கா, லட்சுமி, சரஸ்வதி | ரூ. 101.00 |
| அருள்மிகு நவகிரகம் | ரூ. 101.00 |
| அருள்மிகு பஞ்சமூர்த்திகள் | ரூ. 405.00 |
| அருள்மிகு விநாயகர் | ரூ. 51.00 |
| அருள்மிகு துர்க்கை | ரூ. 51.00 |
| அருள்மிகு உண்ணாமுலையம்மன் | ரூ. 51.00 |
| அருள்மிகு சனீசுவரர் | ரூ. 51.00 |
| மற்றும் பரிவார மூர்த்திகள் (மூர்த்தி ஒருவருக்கு) | ரூ. 51.00 |

## அபிஷேக காலங்கள்:

| | |
|---|---|
| முதல் அபிஷேகம் : | மூலவர் சுவாமிக்கு காலை 8.00 மணி முதல் 9.00 மணி வரை. பரிவார சுவாமிக்கு காலை 10.00 மணி முதல் 11.00 மணி வரை. |
| இரண்டாவது அபிஷேகம் : | சுவாமிக்கு பகல் 11.00 மணி முதல் 12.00 மணி வரை. இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே முழுத்தொகையையும் செலுத்திப் பதிவு செய்து கொள்ள வேண்டும். |

# அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் வெளியீடுகள்

## புத்தகங்கள் விவரம்:

| | | | |
|---|---|---|---|
| 1. | 64 சிவ மூர்த்தங்கள் | ரூ. | 7.00 |
| 2. | கற்பகாம்பாள் தேவி தரிசனம் | ரூ. | 4.00 |
| 3. | பிள்ளைத் தமிழ் | ரூ. | 3.00 |
| 4. | அபிராமி அந்தாதி | ரூ. | 2.00 |
| 5. | பன்னிருமுறை திரட்டு | ரூ. | 9.00 |
| 6. | கும்பாபிஷேக மலர் | ரூ. | 5.00 |
| 7. | கந்தர் அனுபூதி | ரூ. | 2.00 |

## படங்கள்:

| | | | |
|---|---|---|---|
| 1. | சுவாமி அம்பாள் பெரியது | ரூ. | 2.00 |
| 2. | சுவாமி படம் சிறியது | ரூ. | 1.00 |

## இதர முக்கிய விவரங்கள்

1. ஒவ்வொரு வெள்ளிக்கிழமை மாலை அருள்மிகு கற்பகாம்பாளுக்குத் தங்கக் காசு மாலை அணிவிக்கப்படுகிறது.

2. பிரதோஷ கால பூஜையைக்காண ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகின்றனர்; தரிசனம் செய்கின்றனர்.

3. சுவாமி, அம்பாள் சந்நிதிகளில் பக்தர்கள் நிம்மதியாகத் தரிசனம் செய்ய ஏர்கூலர் வசதி செய்யப் பட்டுள்ளது.

4. பக்தர்கள் பருகக் குளிர்ந்த நீர் வழங்க வசதி செய்யப் பட்டுள்ளது.

5. உச்சிகாலத்தில் பக்தர்களுக்குத் தயிர்ச்சாதம் வழங்கப்பட்டு வருகிறது.

## அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில்,
## மயிலாப்பூர், சென்னை-4.

---

### முக்கிய திருவிழாக்கள் பற்றிய விவரம்.

| | |
|---|---|
| 1. சித்திரை மாதம் | 1. வருஷப்பிறப்பு<br>2. வசந்த விழா 18 நாட்கள்<br>3. திருஞான சம்பந்தர் விழா 10 நாட்கள் |
| 2. வைகாசி | 1. லட்ச தீபம்<br>2. வைகாசி விசாகம் |
| 3. ஆனி | 1. 1008 சங்காபிஷேகம் (கும்பாபிஷேக நட்சத்திரம்)<br>2. பவித்திரோற்சவம்<br>3. ஆனித் திருமஞ்சனம் |
| 4. ஆடி | 1. ஆடிப்பூரம்<br>2. பன்னிருதிருமுறை விழா 12 நாட்கள்<br>3. லட்சார்ச்சனை விழா |
| 5. ஆவணி | 1. விநாயகர் சதுர்த்தி<br>2. ஆவணி மூலம் மாணிக்கவாசகர் திருவிழா |
| 6. புரட்டாசி | 1. நவராத்திரி விழா 9 நாட்கள்<br>2. நிறைமணி காட்சி (பௌர்ணமி) |
| 7. ஐப்பசி | 1. அன்னாபிஷேகம்<br>2. தீபாவளி<br>3. கந்தர்சஷ்டி விழா 6 நாட்கள்<br>4. அருள்மிகு சிங்காரவேலர் லட்சார்ச்சனை |

| | |
|---|---|
| 8. கார்த்திகை | 1. சோமவாரம் 108 சங்காபிஷேகம் 4 வாரம் |
| | 2. 1008 சங்காபிஷேகம் 5வது வாரம் மட்டும் |
| | 3. அருள்மிகு கபாலீஸ்வரர் லட்சார்ச்சனை |
| 9. மார்கழி | 1. திருவெம்பாவை விழா 7 நாட்கள் |
| | 2. பொன்னூஞ்சல் விழா 3 நாட்கள் |
| | 3. ஆருத்ரா தரிசனம் 1 நாள் |
| 10. தை மாதம் | 1. தெப்பத் திருவிழா 3 நாட்கள் |
| | 2. தை வெள்ளி 4 வாரம் |
| | 3. கனு உற்சவம் |
| | 4. வனபோஜனம் |
| | 5. அருள்மிகு கற்பகாம்பாள் லட்சார்ச்சனை |
| 11. மாசி மாதம் | 1. கடலாட்டு விழா |
| | 2. மஹாசிவராத்திரி விழா |
| | 3. கோலவிழியம்மன் 1008 பால்குட விழா |
| 12. பங்குனி மாதம் | பங்குனிப் பெருவிழா 10 நாட்கள் |
| | 1. அதிகார நந்தி |
| | 2. ரிஷப வாகனம் |
| | 3. தேர்த்திருவிழா |
| | 4. அறுபத்துமூவர் திருவிழா |
| | 5. பிட்சாடனர் விழா |
| | 6. திருக்கல்யாணம் |
| | விடையாற்றி விழா 10 நாட்கள் |

பின்குறிப்பு:

1. *ஒவ்வொரு மாதமும் வளர்பிறை, தேய்பிறை திரியோதசி திதிகளில் மாலை 4 மணி முதல் 6.30 மணி வரை பிரதோஷ விழா சிறப்பாக நடைபெற்று வருகிறது.*

2. *63 நாயன்மார்களின் திருநட்சத்திரங்களில் நாயன்மார்கள் விழா சிறப்பாக நடைபெறுகிறது.*

## சைவ நாயன்மார்

### (சரிதக் குறிப்புகள்)

(திரு. ந. ரா. முருகவேள், M.A., M.O.L.)

சைவ சமயம் பழமையும் பெருமையும் வாய்ந்தது. பரந்து விரிந்த சிறந்த கொள்கைகளை உடையது. `இது ஆகும் இது ஆகாது என்னும் பிணக்கு இன்றி' எல்லா சமய உண்மைகளையும் ஏற்ற பெற்றி தழுவிப் போற்றிக் கொள்ளுவது. அன்பு நெறியினையே அடிப்படையாகக் கொண்டது. இத்தகைய சைவ சமயத்தைச் சார்ந்த சைவ நன்மக்களால், அருட் பெருஞ் சான்றோர்கள் எனப் பெரிதும் போற்றி வழிபடப்பெற்று வரும் **"அறுபத்து மூவர்'** ஆகிய அடியவர் பெருமக்களே **நாயன்மார்கள்** எனப்படுவர்.

நாயன்மார்கள் என்போர் தமிழ் நாட்டில் தோன்றியவர்கள், வாழ்ந்தவர்கள். நம் தமிழகத்துச் சான்றோர்கள்! அவர்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில், பல்வேறு நூற்றாண்டுகளில் தோன்றியவர்கள். பல்வேறு குலத்தினராய், பல்வேறு நிலையினராய் விளங்கியவர்கள். நற்பண்புகட்கெல்லாம் உறைவிடமானவர்கள். உயரிய கொள்கைகளை உடையவர்கள். மிகச் சிறந்த குறிக்கோள்களைக் கடைப்பிடித்தவர்கள். `அடியவர்க்கு அன்பில்லார், ஈசனுக்கு அன்பில்லார்; எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கும் அன்பில்லார்" என்னும் உண்மை உணர்ந்தவர்கள். அதனால் இறைவனிடத்திலும், அடியவரிடத்திலும், எல்லா உயிர்களின் மாட்டும் பேரன்பு செலுத்தி வாழ்ந்தவர்கள். கொண்ட கொள்கையில் உறுதி தளராத உள்ளம் படைத்தவர்கள். தம் கொள்கையை நிலை நிறுத்திக் காப்பாற்ற, உயிரையும் துறக்கும் துணிவு வாய்ந்தவர்கள். தத்தமக்கு ஏற்ற இயன்ற இனிய ஒரு தொண்டினைத் தேர்ந்து கொண்டு, அதனை எவ்வாற்றானும் முட்டின்றிச் செய்து முடித்தவர்கள். ஆண்மையும் அருளும் மிக்கவர்கள். பூசும்

நீறுபோல் உள்ளமும் புனிதர்கள். பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும் இறைவன்தாள் மறவாதவர்கள். கேடும் ஆக்கமும் இல்லாத திருவினர். ஓடும் செம்பொனும் ஒன்றாகவே கொள்ளும் உணர்வினர். கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி வீடும் வேண்டா விறலின் விளங்கினர். அவர்கள் ஈர அன்பினர், யாதும் குறைவிலார். அவர்களுக்கு ஆரம் கண்டிகை, ஆடையும் கந்தையே, ஈசன் பணியில் அன்றி வேறு எதிலும் அவர்கள் நேசம் இல்லாதவர்கள். அவர்கள் பெருமையால் தம்மையே ஒப்பவர், பேணலால் அருளைப் பெற்றவர். அருமையாம் நிலையில் நின்று, அன்பினால் இன்பம் ஆர்ந்தவர்!

அத்தகைய சைவ நாயன்மார்களின் அருமை பெருமைகள் நம்மால் அளவிடற்கரியன. அவர்களின் சிறந்த தூய அரும் பெறல் வாழ்க்கை, நம் அனைவருக்கும் சீரிய எடுத்துக்காட்டு எனலாம். அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றிப் போற்றி ஒழுகி, உய்திபெறும் கடப்பாடு நமக்கு பெரிதும் உரியதாகும்.

சான்றோர்களின் வாழ்க்கை வரலாறுகள், நாமும் அவர்களைப் போல நடந்து, நம்முடைய வாழ்க்கையினையும் தெய்வீகம் நிறைந்ததாக, நாம் ஆக்கிக் கொள்ளுதல் இயலும் என்பதனை, நம்மனோர்க்கு நினைவூட்டி அறிவுறுத்துகின்றன. காலம் என்னும் மணலில், அவர்கள் பதித்து விட்டுச் செல்லும் அடிச்சுவடுகள், பிறவி என்னும் கடலில், வாழ்க்கை என்னும் மரக்கலத்தில் ஏறித்தவறித் தடுமாறி நிற்கும் நமக்கெல்லாம் தளர்ச்சி நீக்கி நலம் புரிகின்றனர்.

" Lives of great men all remind us
we can make our lives sublime,
And, departing, leave behind us,
Footprints on the sands of time;
Footprints, that perhaps another,
sailing o`er life's solemn main,
A forlorn and shipwreck'd brother,
Seeing, shall take heart again."

-H. W. LONGFELLOW.

இப்பாடலை பின்வருமாறு மொழிபெயர்த்து மகிழலாம்.

*சீலம் மிக்க பெருமக்கள்*
*சிறந்த நல்ல எழில் வரலாறு,*
*ஏல நாளும் அவர்களைப்போல்*
*இறைமை வாழ்வெய் துதல்தேற்றும்;*
*கால மணலில் பதிந்தவர்காற்*
*சுவடு, வாழ்வாம் கலம் கவிழ்ப்பச்*
*சாலத் தவிக்கும் சகோதரரைத்*
*தைரி யமேகொண் டுயச்செய்யும்!*

*–மொழிபெயர்ப்பு, ஆசிரியர்.*

ஆதலின் அத்தகைய சிறப்பு மிக்க சைவ நாயன்மார்களின் சரிதக் குறிப்புகளுள் ஒருசில, இச்சிறு வெளியீட்டில் மிகவும் சுருக்கமாகத் தொகுத்துத் தரப் பெறுகின்றன. சைவ நாயன்மார்களின் சான்றாண்மை நலங்களை யுணரவும், அவர்களைப் பின்பற்றி இயன்ற அளவு நடக்கவும், அன்பர்களுக்கு ஓரளவேனும் இவ்வெளியீடு பயன்படுவதாக!

## 1. தில்லை வாழ் அந்தணர்:

இவர்கள் சிதம்பரம் தில்லை நடராஜப் பெருமானுக்குத் தொண்டு செய்யும் தெய்வ வேதியர்களாகிய தீட்சிதர்கள். 'தில்லை மூவாயிரவர்' என்னும் சிறப்புப் பெற்றவர்கள். தருமமே பொருளாகக் கொண்டோர்; தத்துவ நெறியிற் செல்வோர்; அருமறை நான்கும் ஆறங்கமும் பயின்று வல்லோர்; ஒழுக்கம் பூண்டோர், ஞான முதல் நான்கும் நவையறத் தெரிந்தோர்; தானமும் தவமும் வல்லோர்; மனையறம் புரிந்து வாழ்வோர்; தம்மையே தமக்கொப்பாம் நிலைமையில் தலைமை சார்ந்தோர்.

## 2. திருநீலகண்டர்:

தில்லையில், வேட்கோவர் (குயவர்) குலத்தில் தோன்றியவர். சிவனடியார்களுக்கு மட்கலங்கள் செய்து அளித்து வந்தார். சிவபிரானின் அருட் சிறப்பை இடையறாமல் நினைந்து

'திருநீலகண்டம்' என்று சொல்லித் துதித்து வந்த இயல்பினர். இறைவனாகிய சிவனடியார் தந்த திருவோடு மறைந்துபோக, அதனைத் தாம் களவு செய்யவில்லை என்று, மனைவியாருடன் பொருந்தும் வகையால் சிதம்பரம் திருப்புலீச்சுரம் கோயிற்குளத்தில் மூழ்கி எழுந்து சத்தியம் செய்து தந்தவர். 'மாது சொன்ன சூளால் இளமை துறந்தவர்' என்று பட்டினத்தார் இவரைப் பாராட்டியுள்ளார். முதியவராய்க் குளத்தில் மூழ்கி இளமையுடன் எழுந்தவர். சிதம்பரத்தில் இளமையாக்கினார் கோயிலும், குளமும் இன்றும் உள்ளன.

## 3. இயற்பகையார்:

சோழ நாட்டில் புகார் நகரத்தில், வணிகர் குலத்தில் தோன்றியவர். அடியார்கள் விரும்பிக் கேட்கும் எதனையும், இல்லையென்னாது கொடுக்கும் இயல்பினை உடையவர். இவரை, 'உலகியற் பகையார்' என்று சேக்கிழார் குறிப்பிடுகின்றார். இறைவன் இவர்தம் பெருமையை உலகுக்கு விளக்கியருள, அடியவராகப் போந்து, 'மன்னு காதல் உன் மனைவியை வேண்டி வந்தேன்' எனக்கூற, 'என்னிடம் உள்ளதனையே நீர் விரும்பிக் கேட்டமை யான் செய்த பேறு' என்று, மனமுவந்து அளித்துச் செயற்கரும் செய்கை செய்த தீரர். இச்செயலுக்குத் தடைசெய்த உறவினர்களை அஞ்சாது ஆண்மையுடன் எதிர்த்தவர்.

## 4. இளையான்குடி மாறர்:

மாறர் என்பது இவர்தம் இயற்பெயர். இளையான்குடி என்பது இவர் ஊர். சிவனடியார்களை வரவேற்றுத் தம் இல்லத்தில் உண்டி நாலுவிதத்தில், ஆறுசுவைத் திறத்தினில் அளித்து உபசரித்து வந்தவர். தமது செல்வ வளம் சுருங்கிய போதும் மனவளம் சுருங்காமல், தம் தொண்டினைச் சிறப்புறப் புரிந்தவர். அடியவராக வந்த இறைவனுக்கு மாரிக் காலத்தில் இரவு நேரத்தில் வயலுக்குச் சென்று, விதைத்த நெல்லை அரிந்துக் கொணர்ந்து வறுத்துக் குற்றிச் சமைக்கச்செய்து உண்பித்த பெருந் தொண்டர்.



சுந்தரர், மாணிக்கவாசகர்



மயிலை - அறுபத்துமூவர் திருவிதி திருவுலா

## 5. மெய்ப்பொருள் நாயனார்:

சேதி நாட்டில், திருக்கோவலூரில் தோன்றிய மலாடர் கோமானாகிய சிற்றரசர். தம்மைக் கொல்ல வந்த முத்தநாதன் என்னும் வஞ்சகனை, அவன் சிவனடியார் வேடம் பூண்டு வந்ததனால், 'மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்' எனத் தொழுது வென்றவர். தத்தன் என்னும் தமது மெய்க்காப்பாளன் முத்தநாதனைக் கொல்ல முற்பட்டபோது, 'தத்தா நமர்' எனக் கூறித் தடுத்து, அவ்வஞ்சகனின் உயிருக்கு ஏதம் ஏதும் நிகழாமல், பாதுகாப்பாக நகர்ப்புறத்தே சென்று விட்டு வரும்படி அனுப்பி வைத்தார்.

## 6. விறல் மிண்டர்:

சேர நாட்டில், செங்குன்றூர் என்ற ஊரில் வேளாளர் குலத்தில் தோன்றியவர். திருவாரூரில் தேவாசிரிய மண்டபத்தில் இருந்த சிவனடியார்களைப் பணியாமல் ஒதுங்கிச் சென்ற சுந்தரர்பால் சீற்றம் கொண்டு, சுந்தரரையும், அவரை ஆட்கொண்ட திருவாரூர்ப் பெருமானையும் 'புறகு' என்று வெறுத்தொதுக்கியவர். சுந்தரர் திருத்தொண்டத் தொகை பாடுதற்குக் காரணமாக அமைந்தவர் இவரே யாவர்.

## 7. அமர் நீதியார்:

சோழ நாட்டில், பழையாறை என்னும் பதியில், வணிகர் குலத்தில் தோன்றியவர். அடியார்களுக்குக் கந்தை கீளுடை கோவணம் முதலியன கருத்தறிந்து உதவி வந்தவர். அடியவர் வடிவில் வந்த இறைவன், பின்னர்ப் பெற்றுக்கொள்வதாகக் தந்து விட்டுச் சென்ற கோவணம் மறைந்தமையால், அவர் விரும்பியபடி அதற்கு ஈடாகப் பொன்னும் மணியும் எல்லையில்லாப் பொருளும் இட்டுத் திருநல்லூர்ப் பெருமானை வணங்கித் தாமும் மகனும் மனைவியும் ஒரு சேரத் தராசுத் தட்டில் ஏறிநின்று அளித்தவர்.

## 8. எறிபத்தர்:

சோழ நாட்டில், கருவூரில் தோன்றியவர். கருவூர்ப் பசுபதீசுவரருக்குத் திருமாலைப்பணி செய்து வந்த சிவகாமி ஆண்டார் என்னும் முதிய சிவனடியாரின் பூக்குடலையைப் பறித்து மலர்களைச் சிதறிய புகழ்ச் சோழரின் பட்டத்து யானையை எதிர்த்துக் கொன்றவர். சிவனடியார்களுக்கு இடையூறு நேர்ந்தால் அதனை எறிந்து தீர்க்கும் பரசு என்னும் படையை ஏந்திய வராதலின் 'எறிபத்தர்' என்னும் பெயர் பெற்றார்.

## 9. ஏனாதிநாதர்:

சோழ நாட்டில், எயினனூரில், ஈழச்சான்றார் குலத்தில் தோன்றியவர். மன்னர்க்கு வாட்படை பயிற்றும் கலையில் தலைமை பெற்றவர். வாள் வீரர்களுக்கு அரசன் அளிக்கும் சிறப்புப் பட்டப் பெயரே 'ஏனாதி' என்பது. ஆதலின் இவர் ஏனாதி நாதர் என வழங்கப் பெற்றார். இவர்தம் தொழிலுரிமைத் தாயத்தவனாகிய அதிசூரன் என்பவன், அழுக்காறு கொண்டு இவரைப் போருக்கு அறைகூவி அழைத்து, திருநீறு பூசி வந்து இவரை வஞ்சனையாற் கொன்றான். பகைவனின் நெற்றியில் திருநீற்றைக் கண்டு 'அண்டர்பிரான் சீர் அடியார் ஆயினார்; இனி இவர்தம் கொள்கைக் குறி வழி நிற்பேன்' என்று, அவனை எதிர்க்காமல் இருந்ததுடன், 'நிராயுதரைக் கொன்றார் என்னும் பழி இவருக்கு எய்தாமை வேண்டும்' என விரும்பி, வாளுடன் அடர்த்துப் போர்புரிவார்போல் நேர்நின்று உயிர் துறந்த உத்தமர்.

## 10. கண்ணப்பர்:

பொத்தப்பி நாட்டில், உடுப்பூரில், வேடர் குலத்தில் தோன்றியவர். தந்தை நாகன், தாய் தத்தை. நாணன் காடன் என்போர் தோழர்கள். இளமைப் பெயர் திண்ணன். திருக்காளத்தி நாதரின் கண்களில் குருதி பெருகிவரக் கண்டு, தமது கண்ணை இடந்து அப்பியதனால், கண்ணப்பர் என்னும் பெயர் வழங்கலாயிற்று. மணிவாசகர், அப்பர், சம்பந்தர், சுந்தரர், ஆதிசங்கரர் ஆகிய சான்றோர் பலரும் கண்ணப்பரின் அருமை பெருமைகளை வியந்து பாராட்டியுள்ளனர்.

## 11. குங்குலியக்கலயர்:

சோழ நாட்டில் திருக்கடவூரில் அந்தணர் குலத்தில் தோன்றியவர். கலயர் என்பது இவர்தம் இயற்பெயர். இது திருக்கடவூர்ப் பெருமானுக்குரிய 'அமிர்தகடேசர்' என்னும் பெயரின் தமிழ்ச் சுருக்கம் போலும். இவர் இறைவனுக்குக் குங்குலியத் தூபம் இடும் பணி செய்து வந்தார். செல்வ வளம் குறைந்து வறுமை மிகுதிப்பட்ட நிலையிலும், தமது மனைவி யளித்த பொற்றாலி கொண்டு உணவுப் பொருள்கள் வாங்க நினையாமல், குங்குலியப் பொதிகளையே வாங்கி வந்து இறைவனுக்குத் தூபம் இட்டவர்.

## 12. மானக்கஞ்சாறர்:

சோழ நாட்டில், கஞ்சாறு (ஆனந்த தாண்டவபுரம்) என்னும் ஊரில், வேளாண் குலத்தில், அரசர் சேனாபதியாகும் குடியில் தோன்றியவர். 'ஏயர்கோன் கலிக்காமர்' என்னும் நாயனாருக்குத் தம் மகளை மணம் செய்து கொடுக்குங்கால், அத்திருமணத்திற்கு அடியவர் வடிவில் வந்த இறைவன் விரும்பியபடி, மணப் பெண்ணாகிய தம் மகளின் நீண்ட அழகிய கூந்தலை அரிந்து, பஞ்சவடி என்னும் பூணூல் திரிக்க மனமுவந்து வழங்கியவர்.

## 13. அரிவாட்டாயர்:

சோழ நாட்டில், கணமங்கலம் என்னும் ஊரில், வேளாளர் குலத்தில் தோன்றியவர். தாயனார் என்பது இயற் பெயர். இறைவனுக்குச் செந்நெல் இன்னமுதும் செங்கீரையும் மாவடுவும் கொணர்ந்து, அமுது செய்விக்கும் திருப்பணி செய்தவர். வறுமை அடைந்த பின்னும் மனந்தளராமல், நெல் அறுத்துக் கூலி பெற்றுத் தம் திருப்பணியை விடாது செய்து வந்தவர். இறைவனுக்காகத் தாம் கொண்டு சென்ற செந்நெல் அரிசியும் செங்கீரையும் மாவடுவும், தாம் காலிடறி விழுந்ததனால் கீழே சிதறிப் பாழாயினமை கண்டு, பெரிதும் வருந்தித் தம் கழுத்தை அரிவாள் கொண்டு அரிந்து உயிர் துறக்க முற்பட்டவர். அரிவாள் தாயர் என்பதே அரிவாட்டாயர் என வழங்குகின்றது.

### 14. ஆனாயர்:

சோழ நாட்டில், மேன்மழ நாடு என்னும் பகுதியில், திருமங்கலம் என்னும் தலத்தில், ஆயர் குலத்தில் தோன்றியவர். ஆன் நிரைகளை மேய்க்கும் ஆயர் குலத்தவராதலின், ஆனாயர் எனப் பெயர் பெற்றார். தமது வேய்ங்குழலில் திருவைந்தெழுத்தை இடைவிடாது இசைத்து வழிபட்டு அருள் பெற்றவர்.

### 15. மூர்த்தி நாயனார்:

பாண்டிய நாட்டில், மதுரை மாநகரில், வணிகர் குலத்தில் தோன்றியவர். மதுரை நகரைக் கைப்பற்றிக் கொடுங்கோன்மை செய்த வடுகக்கருநாட மன்னன் ஆகிய சமணன் இறந்த பிறகு, அமைச்சர்கள் கண் கட்டி விட்ட யானையால் மாலையிடப் பெற்று அரசராகித் திருநீறு உருத்திராக்கம் சடைமுடி என்னும் மூன்றையும் தாங்கி அரசு புரிந்தவர். ஆதலின் 'மும்மையால் உலகாண்ட மூர்த்தி' எனச் சுந்தரர் இவரைக் குறிப்பிடுவர். இவர் இறைவனுக்குச் சந்தனக் காப்புத் திருத்தொண்டு புரிந்தவர். வடுகக்கருநாட மன்னன், சந்தனக்கட்டைகள் பெறாதபடி தடைகள் பலசெய்தபோது, சந்தனத் தேய்வை முட்டுப்படினும், தேய்க்குங் கை முட்டுப்படாது என்று, வட்டம் திகழ் பாறையில் வைத்துக் 'கட்டும் புறந்தோல் நரம்பு என்பு கரைந்து தேய' முழங்கையைத் தேய்த்து இறையருள் பெற்ற பேரன்பர்.

### 16. முருக நாயனார்:

சோழ நாட்டில், திருப்புகலூரில், மறையவர் குலத்தில் தோன்றியவர். ஞான வரம்பின் தலை நின்றவர். அன்பால் உருகும் மனத்தினர். நீர்ப்பூ நிலப்பூ கொடிப்பூ கோட்டுப்பூ என்பவற்றையெல்லாம் முறைப்படி கொணர்ந்து, இறைவனுக்கு இண்டை கோவை சுருக்கு தாமம் மாலை கண்ணி பிணையல் தொடையல் என்னும் மாலை வகைகளைப் புனைந்து சாத்தித் திருவைந்தெழுத்தை இடைவிடாது ஓதி வழிபட்டவர்.

ஞானசம்பந்தர்க்கு நண்பர். திருப்புகலூர் வர்த்தமானீச்சுரம் பற்றிய திருப்பதிகத்தில், ஞான சம்பந்தர் இவரைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர் தம் திருமடத்தில், திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தர் சிறுத்தொண்டர் முதலியவர்கள் சென்று தங்கி மகிழ்ந்தனர்.

## 17. உருத்திரபசுபதியார்:

சோழ நாட்டில், திருத்தலையூரில், அந்தணர் குலத்தில் தோன்றியவர். ஸ்ரீருத்திரம் என்னும் வேத மந்திரத்தைக் கழுத்தளவு நீர் நிலையில் நின்று, இரவும் பகலும் ஓதி, இறைவனை வழிபட்டு அருள் பெற்றவர். `நீடும் அன்பினில் உருத்திரம் ஓதிய நிலையால்' இவருக்கு உருத்திர பசுபதியார் என்னும் பெயர் அமைந்தது.

## 18. திருநாளைப் போவார்:

இவர் நந்தனார் என வழங்கப்படுவர். சோழ நாட்டில், மேற்கால் நாடு என்னும் பகுதியில், ஆதனூரில், புலையர் குலத்தில் தோன்றியவர். திருப்புன்கூர்ச் சிவலோக நாதரை வழிபட்டவர். தம்மை இவர் தரிசிப்பதற்கு மறைக்காமல் இருக்கும்படி, நந்தித் தேவரைச் சற்றே விலகியிருக்கும் வண்ணம் திருப்புன்கூர்ப் பெருமான் கட்டளையிட்டார். கோயில்களில் உள்ள பேரிகை முரசம் முதலிய வாத்தியங்களுக்காக வார் தோல் முதலியனவும், வீணை யாழ் என்பவற்றிற்குத் தந்திரியும், சிவபூசைக்குக் கோரோசனையும் ஆகியவற்றை இவர் அளித்து வந்தார். தில்லைப் பதியை தரிசிக்கும் பெருவிருப்பதால் 'நாளைப்போவேன்' 'நாளைபோவேன்' என்று ஆர்வமுடன் சொல்லி வந்ததனால், இவருக்குத் 'திருநாளைப் போவார்' என்னும் பெயர் அமைந்தது. இறைவன் கனவில் அருளிச் செய்தபடி தில்லை வாழ் அந்தணர்கள், தென்றிசையின் மதிற் புறத்துத் திருவாயில் முன்னாக அமைத்த நெருப்புக் குழியில் மூழ்கி, அந்தணராக எழுந்து, கோபுரத்தைத் தொழுதிறைஞ்சிக் கோயிலின் உள்ளே சென்று, யாவரும் அதிசயித்துத் துதிசெய்ய, இவர் தில்லைப் பெருமானின் திருவருளில் கலந்து சிறந்தார்.

## 19. திருக்குறிப்புத்தொண்டர்:

தொண்டை நாட்டில், காஞ்சிபுரத்தில், ஏகாலியர் குலத்தில் தோன்றியவர். தொண்டர்களின் குறிப்பறிந்து போற்றும் நிலைத் திண்மையினால், இவர் திருக்குறிப்புத் தொண்டர் எனப் பெயர் பெற்றார். சிவனடியார்களுக்கு இலவசமாக ஆடை வெளுத்துக் கொடுக்கும் அன்புத் தொண்டு செய்து வந்தார். அடியார்வடிவில் எழுந்தருளி இறைவன் கொடுத்த ஆடையினை, அவர் குறிப்பிட்ட முறையில், மழையின் மிகுதியினால் வெளுத்து உலர்த்திக் கொடுக்க இயலாது போயினமையால், மனம் வருந்திக் கற்பாறை மீது தம் தலையை மோதிக் கொள்ள முற்பட்டு, இறைவன் அருள் பெற்ற அடியவர்.

## 20. சண்டேசுரர்:

சோழ நாட்டில், மண்ணியாற்றின் தென்கரையில் உள்ள சேய்ஞலூரில், மறையவர் குலத்தில், காசிப கோத்திரத்தில் தோன்றியவர். தந்தை எச்சதத்தன், தாய் பவித்திரை. இவர்தம் இளமை இயற்பெயர் விசார சருமர். இடையன் ஒருவன் பசுக்களை அடித்து வருத்துதல் கண்டு, தாமே அப்பசுக்களை மேய்க்க முற்பட்டார். இவர்பால் கொண்ட அன்பின் மிகுதியினால் பசுக்கள் தாமே பால் சொரிய, 'முன்னை அர்ச்சனையின் அளவின் தொடர்ச்சி விளையாட்டாய்.' இவர் அப்பசுக்களின் பால் கொண்டு, ஆத்திமரத்தின் கீழ் மணலால் சிவாலயமும் கோபுரமும் திருச்சுற்றும் சிவலிங்கமும் வகுத்துச் சிவபூசை செய்து வந்தார். பசுக்களின் பாலை மணலிற் சொரிந்து இவர் பாழாக்குவதாக ஊரவர் சிலர் கூறக்கேட்ட எச்சத்தன் ஆகிய தந்தை, சிவபூசையில் ஈடுபட்டிருந்த இவரை வந்து கண்டு சினங்கொண்டு, பலமுறை அடிக்கவும் இவர் உணராதிருக்கவே, திருமஞ்சனக் குடத்துப் பாலைக் 'காலால் இடறிச் சிந்திக் கையாற் கடைமைத் தலை நின்றான்'. அந்நிலையில் இவர் அருகே கிடந்த கோலை எடுத்து வீச, அது மழுவாக மாறி அவனது இருகால்களையும் வெட்டியது. உடனே இறைவன்

தோன்றி இவரைத் தொண்டர் தமக்கு அதிபன் ஆக்கி, "அனைத்தும் நாம் உண்ட கலமும் உடுப்பனவும் சூடுவனவும் உனக்கு ஆகச் சண்டீசனுமாம்' பதம் தந்தோம். `இனி நாமே உனக்குத் தந்தை ஆவோம்' என்று அருளி செய்து ஆட்கொண்டார். சிவாலய வழிபாட்டின் பயனை அடியார்களுக்கு வழங்குபவர் இவரே. சிவநின்மாலியங்கள் எல்லாம் இவருக்கே உரியனவாகும். சிவாலயங்களின் நடைமுறை அலுவல்கள் அனைத்தும், இவர் பெயராலேயே பழங்காலத்தில் செய்யப்பெற்று வந்தமை கல்வெட்டுகளால் புலனாகின்றது.

## 21. திருநாவுக்கரசர்:

சைவ சமய ஆசிரியர்களாகிய நால்வர்களில் ஒருவர். பக்தியிற் கனிந்தவர்; ஞானம் பழுத்தவர். அப்பர் வாகீசர் சொல்லரசர் தாண்டகவேந்தர் முதலிய பல பெயர்களால் வழங்கப்பெறுபவர். நடுநாடு என்னும் திருமுனைப்பாடி நாட்டில், சிவம் பெருக்கும் திருவாமூரில், வேளாளர் குலத்தில், குறுக்கையர் குடியில் தோன்றியவர். தந்தை புகழனார். தாய் மாதினியார். தமக்கை திலகவதியார். இளமை இயற்பெயர் மருள்நீக்கியார். இளமையில் சமண் சமயம் சார்ந்து, கலை நூல் பலவும் கற்றுத்தேர்ந்தவர். தருமசேனர் என்னும் பட்டம் பெற்று, வித்தகராய் அமண் சமயத் தலைமையினில் மேம்பட்டவர். தமக்கையார் ஆகிய திலகவதியார் பலகாலும் பணிந்து விண்ணப்பித்துக் கொண்டபடி, திருவதிகை வீரட்டானேசுவரர் இவரைச் சூலை நோய் தந்து வருத்தித் தடுத்து ஆட்கொண்டார். சமண் சமயம் விடுத்துச் சைவ சமயம் சார்ந்தமைக்காக வெகுண்டு, சமண மன்னனாகிய மகேந்திரவர்ம பல்லவன் (கி.பி. 600–630) இவரை நீற்றறையில் இட்டும், நஞ்சு கொடுத்தும், களிற்றை ஏவியும், கல்லோடு சேர்த்துக்கடலில் தள்ளியும் கொல்ல முயன்றான். முயன்றும் முடியாமையால், பின்னர் இவர்தம் தெய்வீகச் சிறப்பை உணர்ந்து, இவர்தம் உண்மை அடியவனாக மாறி ஒழுகி உய்தி பெற்றான். தமிழகத்தில் முதன் முதலாகச் சிற்பக் கலைத்திறன் சிறந்த குடைவரைக்

கோயில்களைப் பல்லாவரம் சீயமங்கலம் திருவல்லம் தளவானூர் திருக்கழுகுன்றம் திருச்சிராப்பள்ளி முதலிய பல இடங்களில், மகேந்திர வர்மன் அமைப்பதற்குரிய உணர்ச்சியும் ஊக்கமும் அளித்து உதவியவர் திருநாவுக்கரசரேயாவார். பல்லவ மன்னனைச் சைவனாக மாறும்படி செய்த இவர்தம் செயல், வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு மாபெரும் புரட்சி நிகழ்ச்சியாகும். சைவ மறுமலர்ச்சிக்கும், தமிழ்க் கலைப் பண்பாடுகளின் பெருவளர்ச்சிக்கும், இவர் ஆற்றிய தொண்டுகள் அளவிடற்பாலன அல்ல. `நாமார்க்கும் குடியல்லோம்! நமனை அஞ்சோம்' என்று வீரமுழக்கம் செய்த மாபெரும் ஞானி இவர்!

## 22. குலச்சிறையார்:

பாண்டிய நாட்டில், மணமேற்குடி என்னும் ஊரில், அதன் தலைவராக விளங்கியவர். சுந்தரரால் `பெருநம்பி' என்று ஓதிப் பாராட்டிச் சிறப்பிக்கப் பெற்றவர். நின்றசீர் நெடுமாற நாயனார் என்னும் பாண்டிய வேந்தரின் தலைமை அமைச்சராகத் திகழ்ந்தவர். சிவபக்தியிலும் சிவனடியார் நேயத்திலும் தலைசிறந்து திகழ்ந்தவர். பாண்டிமாதேவியராகிய மங்கையர்க்கரசியாரின் தொண்டுகளுக்கு உறுபெருந்துணையாக விளங்கியவர். திருஞானசம்பந்தரைத் திருமறைக் காட்டினின்று மதுரைக்கு வரவழைத்துச் சைவ சமயத்தை மீண்டும் பாண்டி நாட்டில் தழைத்தோங்கச் செய்தவர்.

## 23. பெருமிழலைக் குறும்பர்:

சேரநாட்டில், மிழலை நாடு என்னும் பகுதியில், பெருமிழலை என்னும் ஊரில், குறும்பர் என்னும் சிற்றரசர் மரபில் தோன்றியவர். சிவனடியார்களுக்கு அமுதளித்தும் பொருள் வழங்கியும் தொண்டு புரிந்தவர். சுந்தரமூர்த்தி சுவாமிகளை வழிபடு தெய்வமாகக் கொண்டவர். அவர்தம் `நம்பியாரூரர்' என்னும் திருப்பெயரையே பலகாலும் ஓதி ஓதி அட்டமா சித்திகள் பெற்றவர். சுந்தரர் கயிலை சென்றபோது, அந்நிகழ்ச்சியைத் தம் ஞானக் கண்கொண்டு உணர்ந்து, `கண்ணிற்கரிய மணிகழிய வாழ்வார்போல் இனியான் வாழேன்; இன்றே சிவன்தாள் சென்றடைவேன்' என்று, தமது

யோகப் பயிற்சியால் பிரமநாடியின் வழியாகக் கருத்துச் செலுத்திக் கபால நடுவின் மறைமூலம் திறந்து. இறைவனின் திருவடி சேர்ந்தவர். இவர் யோகப் பயிற்சியில் தலைசிறந்தவர்.

## 24. காரைக்கால் அம்மையார்:

சோழநாட்டில், காரைக்காலில், வணிகர் குலத்தில் தனதத்தனார் என்பவரின் மகளாகத் தோன்றியவர். புனிதவதியார் என்பது இவர்தம் இயற்பெயர். சிற்றிளம் பருவத்திலேயே, தமது விளையாட்டிலுங்கூடச் சிவபெருமானை மறவாது தொழுது பழகியவர். `பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல் சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன்' என்னும் இவர்தம் திருமொழியால் இவ்வுண்மை உணரலாம். நாகைப்பட்டினத்தில், நிதிபதி வணிகனின் புதல்வனாகிய பரமதத்தன் என்னும் தாதவிழ்தார்க் காளைக்குத் தளிரடிமென் நடை மயில் போன்ற இவர், திருமணம் செய்விக்கப்பெற்றார். கணவன் கடையினின்று அனுப்பிய மாங்கனிகள் இரண்டனுள் ஒன்றைச் சிவனடியார்க்குப் படைத்து, கணவன் கேட்டபோது அத்தகைய மாங்கனி ஒன்றை இறையருளால் வரவழைத்துக் கொடுத்தவர். அதனால் இவரைத் தெய்வம் என்று உணர்ந்து கணவன் பிரிந்தான். பிரிந்த கணவனின் நிலை தெரிந்த பின்னர் இவர், 'இங்கு இவன் குறித்த கொள்கை இது; இனி இவனுக்காகத் தாங்கிய வனப்பு நின்ற தசைப்பொதி கழித்து, நின்தாள்கள் போற்றும் பேய் வடிவு அடியேனுக்குப் பாங்குற அளித்தல் வேண்டும்' என்று இறைவனைப் பரவி, வானமும் மண்ணுமெல்லாம் வணங்கு பேய் வடிவம் பெற்றார். வடதிசைத் தேசமெல்லாம் மனத்திலும் கடிது சென்று, கயிலை வெற்பின் பாங்கு அணைந்து, ஆங்குக் காலினால் நடையினைத் தவிர்ந்து, பார்மேல் தலையினால் நடந்து சென்றவர். 'வரும் இவன் நம்மைப் பேணும் அம்மைகாண் உமையே!' என்று சிவபெருமானால் புகழ்ந்து பாராட்டப் பெற்றவர். சிவபிரான்பால் இறவாத இன்ப அன்பு வேண்டி, "பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்புண்டேல், உன்னை என்றும் மறவாமை வேண்டும்;

இன்னும் வேண்டும். நான் மகிழ்ந்து பாடி அறவா! நீ ஆடும்போது உன் அடியின்கீழ் இருக்க" என்று விண்ணப்பித்து அருள் பெற்றவர். இறைவன் அருள் பெற்றவர். இறைவன் அருளியபடி திருவாலங்காட்டில் திருநடம் கண்டு இன்புற்று, எப்போதும் இறைவனைப் பாடி வழிபட்டுக் கொண்டிருப்பவர். மூத்ததிருப்பதிகம். அற்புதத் திருவந்தாதி, திரு இரட்டை மணி மாலை என்னும் நூல்களை அருளிச் செய்தவர். இவைகள் பதினொன்றாம் திருமுறையில் சேர்க்கப் பெற்றிருத்தல் காணலாம்.

## 25. அப்பூதி அடிகள்:

சோழ நாட்டில், திங்களூர் என்னும் ஊரில், அந்தணர் குலத்தில் தோன்றியவர். திருநாவுக்கரசரையே தமது ஞான குரவராகக் கொண்டவர். தமது உடைமைகள் எல்லாவற்றிற்கும் திருநாவுக்கரசு என்னும் பெயரையே வைத்து வழங்கிய பேரன்பர். தமது புதல்வன் பாம்பு தீண்டி இறந்த போதும் அது குறித்து வருந்தாமல், திருநாவுக்கரசரை அமுது செய்விப்பதிலேயே பேரார்வம் கொண்டு விளங்கிய பெருந்தகையார். 'ஒன்று கொலாம்' எனத்தொடங்கும் தேவாரத் திருப்பதிகம் பாம்பு தீண்டி இறந்த 'மூத்த திருநாவுக்கரசு' என்னும் இவர் தம் புதல்வனை உயிர் பெற்று எழச் செய்தற் பொருட்டே, திருநாவுக்கரசரால் பாடப் பெற்றதாகும். 'சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள்' எனத் தொடங்கும் தேவாரத் திருப்பதிகத்திலும் 'அஞ்சிப்போய்க் கலிமெலிய அழல் ஓம்பும் அப்பூதி' என்று திருநாவுக்கரசர் இவரைக் குறிப்பிட்டுச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

## 26. திருநீலநக்கர்:

சோழ நாட்டில், சாத்தமங்கை என்னும் தலத்தில், அந்தணர் குலத்தில் தோன்றியவர். சாத்த மங்கையிலுள்ள அயவந்தி நாதரைப் பூசித்து வழிபட்டவர். சிவலிங்கத்தின்மேல் சிலந்தி விழக்கண்டு பதைத்து, குழந்தை மேல் விழும் சிலந்தியைச் செய்வதுபோல, வாயினால் ஊதித் துமிந்த மனைவியின் செயலை

வெறுத்து. அவரைப் புறக்கணித்தவர். பின்னர் இறைவன் கனவில் தோன்றி ஊதித் துமிந்த இடம் ஒன்றைத் தவிர மற்றைத் தம் திருமேனியின் பரப்பெல்லாம் கொப்புளங்கள் தோன்றியிருத்தலைக் காட்ட, இறைவனின் அருளை உணர்ந்து மனமகிழ்ந்து. மனைவியின்பால் அன்புற்று உகந்தவர். ஞானசம்பந்தருடன் வந்த திருநீலகண்ட பெரும்பாணர்க்கும் அவர்தம் மனைவியார்க்கும் அமுது செய்வித்து. அவ்விருவரையும் தம் இல்லத்தின் நடுமனையில் வேள்விக் குண்டத்தின் அருகில், வேதியின் பாங்கர்ச் சிறப்பிடம் கொடுத்து உபசரித்தவர். ஞான சம்பந்தருடன் நட்புரிமை பூண்டு அவருடன் பல தலங்களுக்குச் சென்று வழிபட்டவர். ஞானசம்பந்தர்க்கு ஆச்சாபுரம் என்னும் திருநல்லூர்ப் பெருமணத்தில் நிகழ்ந்த திருமணத்தின்போது. எல்லோரையும் போல இவரும் இறைவன் திருவருட் பேரொளியிற் கலந்தார்.

## 27. நமிநந்தியடிகள்:

சோழ நாட்டில் ஏமப்பேறூரில், அந்தணர் குலத்தில் தோன்றியவர். திருவாரூர் அரனெறி என்னும் கோயிலில் திருவிளக்குத் திருப்பணி செய்யக் கருதி அருகே இருந்த ஒரு வீட்டில் சென்று எண்ணெய் கேட்க. அவர்கள் சமணர்களாதலால் "கையில் விளங்கு கனலுடையார் தமக்கு விளக்கு மிகைக் கண்டீர்! நெய் இங்கு இல்லை: விளக்கு எரிப்பீராகில் நீரை முகந்து எரித்தல் செய்யும்" என இகழ்ந்துரைத்தனர். அது கேட்டு மனம் வருந்திய இவர், இறைவன் பணித் தருளியபடி, அருகிருந்த குளத்து நீர் முகந்து கொணர்ந்து விளக்கு எரித்து வந்தார். "ஆரூர் நறுமலர் நாதன் அடித்தொண்டன் நம்பிநந்தி நீரால் திருவிளக்கிட்டமை நீள்நாடு அறியுமன்றே" என்பது திருநாவுக்கரசர் தேவாரம். 'ஆருரில் பிறந்தாரெல்லாம் நம்கணங்கள் ஆன பரிசு காண்பாய்' என்று. இறைவன் காட்டக் காணும் பேறு பெற்றவர் இவர். திருநாவுக்கரசர் இவரைத் "தொண்டர்க்கு ஆணி" என்று புகழ்ந்து சிறப்பித்துள்ளார்.

## 28. திருஞான சம்பந்தர்:

சோழ நாட்டில், சீர்காழியில் தோன்றியவர். தந்தையார் சிவபாத இருதயர். தாயார் பகவதி அம்மையார். மூவாண்டில் பிரம தீர்த்தக் கரையில் தோணியப்பரால் அம்பிகையின் ஞானப்பால் ஊட்டுவிக்கப் பெற்றார். 'தோடுடைய செவியன்' எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடினார். திருக்கோலக்காவில் பொற்றாளம் பெற்றார். திருப்பாச்சிலாச்சிராமத்தில் கொல்லிமழவன் என்னும் குறுகில மன்னனின் மகளைப் பற்றியிருந்த முயலக நோயைத் தீர்த்தார். திருநீலகண்டப் பதிகம் பாடிக் கொடிமாடச் செங்குன்றூர் என்னும் தலத்தில், அடியவர்களுக்கு வந்த நளிர்சுர நோயைப் போக்கியருளினார். திருநெல்வாயில் அரத்துறையில் முத்துச் சிவிகையும், திருப்பட்டீச் சுரத்தில் முத்துப் பந்தரும் பெற்றார். திருவாவடுதுறையில், தம் தந்தையார் வேள்வி செய்தற் பொருட்டுப் பொற்கிழி அளிக்கப் பெற்றார். தருமபுரம் என்னும் தலத்தில் 'மாதர் மடப்பிடி' எனத் தொடங்கும் யாழ்மூரிப்பதிகம் பாடினார். திருமருகலில் அரவு தீண்டி இறந்த வணிகனைச் 'சடையாய் எனுமால் சரண்நீ எனுமால்' எனத் தொடங்கும் பதிகம்பாடி உயிர் பெற்று எழச் செய்தார். திருவீழிமிழலையில் படிக்காசு பெற்றார். அக்காசு வாசி தீரப் பாடியருளினார். திருமறைக்காட்டில் திருக்கதவம் அடைப்பித்தார். குலச்சிறையார், மங்கையர்க்கரசியார் வேண்டுகோட்கு இணங்கிப் பாண்டிய நாடு சென்று, அனல் வாதமும், புனல் வாதமும் புரிந்து சமணர்களை வென்றார். பாண்டியனின் வெப்பு நோயைத் தீர்த்துக் கூனையும் போக்கி, 'நின்றசீர் நெடுமாறன்' என ஆக்கினார். போதிமங்கையில் புத்தர்களை வாதில் வென்றார். திருமயிலையில் அங்கம் பூம்பாவையாக்கினார். திரு நல்லூர்ப் பெருமணத்தில் திருமணம் செய்து கொண்டு, நமச்சிவாயப் பதிகம் பாடித் தம் திருமணத்துக்கு வந்திருந்த எல்லோருடனும் இறைவன் திருவருள் ஒளியில் கலந்தார்.

## 29. ஏயர்கோன் கலிக்காமர்:

சோழ நாட்டில், காவிரியின் வடகரைக் கீழ்ப் பாலுள்ள திருப்பெருமங்கலம் என்னும் ஊரில், வேளாளர் குலத்தில் தோன்றியவர். சுந்தரர் பரவையார் பால் இறைவனைத் தூது அனுப்பிய செய்திகேட்டு, அவர்பால் அருவருப்புற்றிருந்தார். தமக்கு வந்த சூலை நோய் சுந்தரராலேயே தீரும் என இறைவன் அருளியது கேட்டு, 'அவன் இங்கு வந்து தீர்ப்பதன் முன் யானே இப்பாதகச் சூலை தன்னை உற்ற இவ் வயிற்றினோடும் கிழிப்பேன்' என்று தம் உடைவாள் கொண்டு உயிர் துறக்க முற்பட்டவர். பின்னர் இறையருளால் சுந்தரரும் இவரும் உயிர்போல் ஒன்றிய கேண்மையராயினர். சுந்தரரும் இவரும், திருப்புன்கூர் முதலிய தலங்களுக்குச் சென்று வழிபட்டனர்.

## 30. திருமூலர்:

இவர் நந்தி திருவருள் பெற்ற நான்மறை யோகிகளில் ஒருவர். அகத்தியரின் நண்பர். அவருடன் சில நாள் தங்கியிருத்தற் பொருட்டுக் கயிலையினின்றும் புறப்பட்டுக் கேதாரம் பசுபதிநேபாளம் காசி திருப்பருப்பதம் திருக்காளத்தி திருவாலங்காடு கச்சி ஏகம்பம் திருவதிகை பெரும்பற்றப்புலியூர் என்னும் தலங்களை வணங்கிக் கொண்டு, திருவாவடுதுறைக்கு எழுந்தருளினார். அத் தலத்தை விட்டுப் பிரிய மனமின்றி அங்குச் சிலநாள் தங்கியிருந்தபோது, சாத்தனூர் இடையனாகிய மூலன் என்பவன் இறந்துபோக, அவன் மேய்க்கும் பசுக்கள் கண்ணீர் சொரிந்து கலுழ்தல் கண்டு மனமிரங்கி, தமது உடலை ஓர் இடத்தில் மறைத்து வைத்து அவனது உடலில் தம் உயிரைப் பாய்ச்சித் திருமூலராக எழுந்து, பசுக்களை மேய்த்து மகிழ்வித்தார். மறைத்து வைத்த தம் உடல் காணாமற் போயினமையால் 'ஈசனின் அருள் ஈது' என உணர்ந்து, திருவாவடுதுறை அடைந்து, அங்குள்ள அரச மரத்தின் கீழ்ச் சிவயோகத்தில் அமர்ந்து, ஓர் ஆண்டுக்கு ஒன்றாக 3,000 பாடல்கள் கொண்ட திருமந்திரம் என்னும் நூலை அருளிச் செய்து, திருக்கயிலை சார்ந்தவர்.

## 31. தண்டி அடிகள்:

சோழ நாட்டில் திருவாரூரில் தோன்றியவர். பிறந்தபொழுதே கண்பார்வை இழந்தவர். ஆயினும் திருவாரூர்ப் பூங்கோயிலில் திருவைந்தெழுத்து ஓதி வழிபட்டு வந்தவர். தம்மை இகழ்ந்துரைத்த சமணர்கள், கண் இழந்து போக, இறையருளால் தாம் கண்பார்வை பெற்றுத் திருவாரூர்க் கோயிற் குளத்தைத் தூர் எடுத்துத் தூய்மை செய்யும் தொண்டாற்றிப் பேறு பெற்றவர்.

## 32. மூர்க்க நாயனார்:

தொண்டை நாட்டில், பாலாற்றின் வடகரையில் உள்ள திருவேற்காடு என்னும் தலத்தில், வேளாளர் குலத்தில் தோன்றியவர். அடியார்களுக்கு அமுதளிக்கும் கடப்பாடு மேற்கொண்டவர். செல்வம் தேய்ந்து வறுமை அடைந்தபோது, திருக்குடந்தை சார்ந்து, தாம் முன்பு கற்று வன்மை பெற்றிருந்த சூதாட்டத்தால் பொருள் தேடி, அப்பொருளைத் தாம் தீண்டாமல், அடியார்களுக்கு அமுது செய்விப்பவர் கொள்ளும்படி செய்து, தாம் கடைப் பந்தியில் அமர்ந்து உண்டி கொண்டு, தொண்டாற்றி அருள் பெற்றவர்.

## 33. சோமாசி மாறர்:

சோழ நாட்டில், திரு அம்பர் என்னும் தலத்தில், அந்தணர் குலத்தில் தோன்றியவர். சோம யாகங்கள் பல செய்தவராதலின் 'சோமயாஜி' எனப் பெயர் பெற்றார். அதுவே சோமாசி என மருவி வழங்குகின்றது. மாறர் என்பது இவர் இயற்பெயர். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தோழராக விளங்கி வாழ்ந்து, இறையருள் பெற்றவர்.

## 34. சாக்கிய நாயனார்:

சோழ நாட்டில் திருச்சங்கமங்கையில், வேளாளர் குலத்தில் தோன்றியவர். காஞ்சிபுரம் அடைந்து, ஞானம் அடைவதற்கு உரிய பல வழிகளையும் நாடிப் பௌத்த மதம் சார்ந்து, கலை நூல்கள் பலவும் ஓதியவர். பின்னர் இறைவன் அருளால், 'ஈறில்

சிவநன்னெறியே பொருளாவது' என உணர்ந்தார். எனினும் தாம் முன்னர் மேற்கொண்ட பௌத்த வேடத்தை விலக்கி ஒழிக்காமல், அன்பின் வழி நின்றவர். நாள்தோறும் சிவலிங்கம் கண்டு வழிபட்ட பின்பே உண்ணும் நியமம் கொண்டவர். ஒருநாள் வெள்ளிடையில் இருந்த சிவலிங்கம் ஒன்றினைக் கண்டு, செய்வது இன்னது என்று அறியாமல், அருகே இருந்த கல் ஒன்றினை மலர்போலக் கருதி எடுத்து, அச் சிவலிங்கத்தின்மீது எறிந்தார். பின்னர்தம் உணர்வு வரப்பெற்றபோது தாம் கல்லெறிந்த செயலை நினைந்தார். `எனக்கு அப்போது இது நிகழ்ந்தது இறையருளே' என்றுணர்ந்து, அங்ஙனமே என்றும் அன்புடன் தவறாது நியமமுறச் செய்து இறையருள் பெற்றவர்.

## 35. சிறப்புலியார்:

சோழ நாட்டில், திருஆக்கூரில், அந்தணர் குலத்தில் தோன்றியவர். அடியார்களுக்கு அமுதளித்துப் பொருள் வழங்கியவர். திருவைந்தெழுத்து ஓதியும், வேத வேள்விகள் செய்தும், இறைவனை வழிபட்டு அருள் பெற்றவர்.

## 36. சிறுத்தொண்டர்:

சோழ நாட்டில், திருச்செங்காட்டங்குடியில், மாமாத்திரர் குலத்தில் தோன்றியவர். ஆயுள் வேதக் கலையும், வடநூற் கலையும், தூய படைக்கலத் தொழிலும், துறை நிரம்பப் பயின்றவர். யானை ஏற்றம், குதிரை ஏற்றம் முதலிய கலைகளிலும் தேர்ச்சி பெற்றவர். பரஞ்சோதியார் என்பது இயற்பெயர். நரசிம்ம வர்ம பல்லவன் (கி.பி. 630-668) என்னும் அரசனின் படைத் தலைவராக விளங்கியவர். அவனது வாதாபிப் போரில் படைத் தலைமை தாங்கிச் சென்று, இரண்டாம் புலிகேசி (கி.பி. 609-642) என்னும் மேலைச் சாளுக்கிய மன்னனைத் தோல்வியுறச் செய்து வெற்றி பெற்றவர். வாதாபி நகரினின்று கணபதியின் திருவுருவங் கொணர்ந்தவர். சிவனடியார்க்கு அமுதளித்து உண்ணும் நியமம் பூண்டவர். அதன்படி உத்தராபதியாராக வந்த இறைவனாகிய பயிரவர் விரும்பியபடி, சீராளன் என்னும் திருமகனை அரிந்து சமைத்துப் படைத்த பெருந்தொண்டர். மனைவியார் திருவெண்காட்டு நங்கை. தாதியார் சந்தன நங்கை.

## 37. கழறிற்றறிவார்:

சேரமான் பெருமாள் எனவும் இவர் வழங்கப்படுவார். சேர நாட்டில் கொடுங்கோளூரில், உதியன் மரபில் தோன்றியவர். இயற்பெயர் பெருமாக் கோதையார். செங்கோற்பொறையன் என்னும் சேரன் இறந்த பிறகு, இறைவன் பணித்தருளியபடி அரசுரிமை ஏற்றவர். தம் ஆட்சியில் எந்தச் சிற்றுயிர்க்கும் துன்பம் நேரா வகையில் பாதுகாக்க, எல்லா உயிர்களும் பேசிக் கொள்வனவற்றை அறிந்து கொள்ளும் வல்லமையினை, இறைவனருளால் பெற்றவர். அதனாலேயே `கழறிற்று (பேசுவதை) அறிவார்' எனப் பெயர் பெற்றார். சுந்தர மூர்த்தி சுவாமிகளின் உயிர்த்தோழர். திருவஞ்சைக் களத்தினின்று குதிரையின் மீது ஏறிச் சுந்தரருடன் கயிலை சென்றவர். இவர் பாடியவை பொன் வண்ணத் தந்தாதி, திருவாரூர் மும்மணிக் கோவை, திருக்கயிலாய ஞான உலா என்னும் நூல்கள் ஆகும். இவைகள் பதினொன்றாம் திருமுறையில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பாணபத்திரரின் பொருட்டு இறைவன் இவருக்குத் திருமுகப் பாசுரம் ஒன்றினை எழுதி அனுப்பினார். உவர் மண் சுமந்து வந்த வண்ணான் ஒருவன் மழையில் நனைந்தமையால், உடம்பெல்லாம் வெளுத்துத் தோன்ற, அவனைத் `திருநீற்றின் வார வேடம் நினைப்பித்தீர்' எனத் தொழுதவர். அதுபோது அவன், `யார் என்று அடியேனைக் கொண்டது? அடியேன் அடி வண்ணான்' எனக் கூற, `அடியேன் அடிச்சேரன்' எனத் தம் பணிவு தோன்றக்கூறி, அவனை வணங்கி வழி அனுப்பியருளியவர்.

## 38. கணநாதர்:

சோழ நாட்டில் சீர்காழியில், மறையவர் குலத்தில் தோன்றியவர். சீர்காழித் தோணியப்பர்க்குத் தொண்டுகள் செய்தவர். நந்தவனப்பணி, மலர்ப்பணி, திருமஞ்சனப்பணி, திருவிளக்குப்பணி, திருமுறைப்பணி முதலியவற்றில் தொண்டர்களுக்குப் பயிற்சி அளித்து வந்த பெருந்தகையார்.

## 39. கூற்றுவநாயனார்:

சோழ நாட்டில், திருக்களந்தை என்னும் தலத்தில், அரசராக விளங்கியவர். களப்பாளர் மரபினர். அரசர்கள் பலரை வென்றவர். தில்லைவாழ் அந்தணர்கள் இவருக்கு முடி சூட்ட மறுத்தனர். இறைவன் இவருக்குக் கனவில் தனது பாதமலர் சூட்டி அருளினான்.

## 40. பொய்யடிமையில்லாத புலவர்:

செய்யுள் நிகழ் சொற்றெளிவும், செவ்விய நூல் பலநோக்கும் வாய்ந்தவர். மெய்யுணர்வின் பயன் இது என்று, மையணியும் கண்டராகிய சிவபிரானின் மலரடிக்கே ஆளானவர், பெரும் புலமை பெற்றவர். பரணர், கபிலர், நக்கீரர் முதலிய 49 சங்கப் புலவர்களையே பொய்யடிமையில்லாத புலவர் என நம்பியாண்டார் நம்பிகள் குறிப்பிடுகின்றார்.

## 41. புகழ்ச் சோழர்:

சோழ நாட்டில் உறையூரில் அரசராக விளங்கியவர். சிவகாமி ஆண்டாரின் பூக்குடலையைப் பறித்துச் சிதறியதற்காகத் தமது பட்டத்து யானையைக் கொன்ற எறிபத்த நாயனார்பால் 'என்னையும் கொன்றருளும்' எனப் பணிந்து தம் வடிவாள் எடுத்துக் கொடுத்தவர். அளந்த திறை முறைகொணரா அதிகன் என்பவனுடன் நேர்ந்த போரில், அற்று விழுந்த பகைவர்களின் தலைக் குவியலின் நடுவே, ஒரு சடைத்தலை இருக்கக் கண்டு 'ஒரு சிவனடியவரைக் கொன்று விட்டோமே. திருநீற்றின் நெறி புரந்து யான் அரசளித்த தன்மை சால அழகிது!' என்று மனம் வெதும்பி, அச்சடைத்தலையினை ஒரு பொற்றட்டில் ஏந்தி, அழல் வளர்த்து அதனுட்புக்கு உயிர் விடுத்தவர்.

## 42. நரசிங்க முனையரையர்:

திருமுனைப்பாடி நாட்டில், திருநாவலூரில், ஒரு சிற்றரசராக விளங்கியவர். சுந்தர மூர்த்தி சுவாமிகளை அன்பினால் மகன்மை கொண்டு வளர்த்தவர். சீலம் இல்லாதவரே யாயினும்,

திருநீறணிந்த சிவனடியார்களை இகழ்ந்து, ஞாலத்தவர் நரகஞ் சார்தலாகாது என்னும் கருத்துடையவர். அதனால் தூர்த்த நிலையில் காமக்குறி மலர வந்த ஒரு சிவனடியார்க்கு, மற்றைச் சிவனடியார்களினும் இருமடங்கு பொற்காசு அளித்து வழிபட்டுச் சிறப்பித்தவர்.

### 43. அதி பத்தர்:

சோழ நாட்டில் நாகைப்பட்டினத்தில், நுளைப்பாடியில் தோன்றியவர். மீன் பிடித்தல் தொழில் செய்தவர். தாம் பிடிக்கும் மீன்களில் முதல் மீனை இறைவனுக்கென்று விடுத்து வந்தவர். நெடுநாளாக மீன் கிடைக்காமல் பெரிதும் வருந்தியும் ஒரு நாள், 'பொன் திரட்சுடர் நவமணி பொலிந்த மீன்' ஒன்று மட்டுமே கிடைக்க, அதனையும் தம் கொள்கைப்படி இறைவனுக்கே விடுத்து அருள் பெற்றவர்.

### 44. கலிக்கம்பர்:

நடுநாட்டில், பெண்ணாகடத்தில், வணிகர் குலத்தில் தோன்றியவர். அங்குத் தூங்கானை மாடக் கோயிலில் அமர்ந்த இறைவனைப் பணிந்து அடியார்களை வரவேற்று அமுதூட்டி வந்தவர். அடியவர்களை வரவேற்றுப் பாத பூசை செய்து வருங்கால், முன்பு தமது வீட்டில் வேலையாளாக இருந்து ஓடிச் சென்ற ஒருவன், அடியவர் வடிவில் வந்திருத்தலைக் கண்ட சிந்தனையால், அவருக்குப் பாத பூசை செய்ய நீர் வார்க்கச் சிறிது தாமதித்த மனைவியாரின் கையை வாளால் தறித்தவர்.

### 45. கலியர்:

தொண்டை நாட்டில், திருவொற்றியூரில், எண்ணெய் வாணிகர் மரபில் தோன்றியவர். திருவிளக்குத் திருப்பணி செய்தவர். வறுமை நிலை வந்தபோதும் தளராமல், அத்தொண்டினை இடைவிடாமற் செய்து வந்தவர். தமது திருவிளக்குப் பணிக்கு முட்டுப்பாடு நேர்ந்தபோது, தம் உயிரையும் துறக்கத் துணிந்து, அருள் பெற்றவர்.

## 46. சத்தி நாயனார்:

சோழ நாட்டில், விரிஞ்சியூரில், வேளாண்குலத்தில் தோன்றியவர். சிவனடியார்களை இகழ்ந்து பேசுபவர்களின் நாக்கினைச் சத்தியால் (வாளினால்) அறுக்கும் ஆண்மைத் திருப்பணி செய்தவர். அதனால் இவர்க்குச் `சத்தியார்' எனப் பெயர் அமைந்தது.

## 47. ஐயடிகள் காடவர்கோன்:

தொண்டை நாட்டில், காஞ்சிபுரத்தில், பல்லவர் மரபில் தோன்றிய அரசர். வடநூல் தென்தமிழ் முதலாம் கலைகள் பல வல்லவர். நிலையில்லாத அரசாட்சியை வெறுத்து மைந்தனுக்கு முடி சூட்டி, க்ஷேத்திர யாத்திரையினை மேற்கொண்டவர். இவர் பாடிய `க்ஷேத்திரத் திருவெண்பா' என்பது பதினொன்றாம் திருமுறையில் சேர்க்கப் பெற்றிருக்கின்றது.

## 48. கணம்புல்லர்:

சோழ நாட்டில், வடவெள்ளாற்றின் தென்கரையிலுள்ள இருக்குவேளூரில், தோன்றியவர். தில்லைத் திருப்புலீச்சரம் என்னும் கோயிலில் விளக்கு எரித்து வந்தவர். வறுமை நேர்ந்தபோது கணம்புல் என்னும் ஒருவகைப் புல்லை அறுத்து விலைக்கு விற்றுத் திருவிளக்கு ஏற்றி வந்தார். ஒரு நாள் அது விற்காமற் போகவே, அப்புல்லினையே திருவிளக்குக்கு இட்டு எரிக்கலுற்பட, அதுவும் போதாமை கண்டு, தம் திருமுடியையே விளக்கில் மடுத்து எரித்து மகிழ்ந்து அருள் பெற்றவர்.

## 49. காரி நாயனார்:

சோழ நாட்டில், திருக்கடவூரில் தோன்றியவர். புலமை மிக்கவர். சிவபெருமான் மீது தமிழ்க்கோவை ஒன்று இயற்றியவர். அதற்குப் பரிசாக மூவேந்தர்கள் அளித்த நிதிக்குவை கொண்டு, கோயில்கள் பல கட்டுவித்தவர்.

## 50. நின்றசீர் நெடுமாறர்:

திருஞான சம்பந்தர் காலத்தில் மதுரையில் ஆண்டு வந்த பாண்டிய வேந்தர். ஞானசம்பந்தரால் ஸ்சவர் ஆக மாறியவர். மங்கையர்க்கரசியாரின் கணவர். சம்பந்தர், `வேந்தனும் ஓங்குக' என்று பாடியதனால், தமக்கிருந்த கூன்முதுகு நீங்கி `நின்றசீர் நெடுமாறர்' எனப் பெயர் பெற்றவர். வரலாற்று அறிஞர்கள் இவரை `மாறவர்மன் அரிகேசரி' (கி.பி. 600-660) என வழங்குவர்.

## 51. வாயிலார்:

தொண்டை நாட்டில், திருமயிலையில், வேளாண் குலத்தில் தோன்றிய தபோதனர். வாய் பேசாமல் மவுன விரதம் பூண்டு தியானம் செய்து வந்தவர். ஆதலின், `வாயிலார்' எனப் பெயர் பெற்றார். மறவாமை என்னும் தியானத்தினால், மனத்திற் கோயில் அமைத்து, ஞானம் என்னும் ஒளி விளக்கை ஏற்றி, ஆனந்தம் என்னும் திருமஞ்சனம் ஆட்டி, அன்பு என்னும் அமுது படைத்து, இடைவிடாது இறைவனை வழிபட்டு அருள் பெற்றவர்.

## 52. முனையடுவார்:

சோழ நாட்டில், திருநீடூரில், வேளாண் குடியில் தோன்றியவர். போர் வன்மை மிக்கவர். வேண்டும் அரசர்களுக்குப் படைத்துணையாகச் சென்று வெற்றிதேடித் தந்து, அவர்கள் அளிக்கும் பொருள் கொண்டு அடியார்களுக்கு அமுதளித்துப் போற்றி வழிபட்டவர்.

## 53. கழற்சிங்கர்:

தொண்டை நாட்டில், காஞ்சிபுரத்தில், பல்லவர் குலத்தில் தோன்றியவர். தலவழிபாட்டில் ஈடுபாடுடையவர். திருவாரூர்க் கோயிலுக்கு இவருடன் சென்ற மனைவியார், அங்குப் பூத்தொடுக்கும் மண்டபத்திலிருந்து ஒரு பூவை எடுத்து மோந்து மகிழ, இறைவனுக்கு உரிய பூவைக் கவர்ந்து மோந்தார் என்று சினந்து, செருத்துணை நாயனார் அவ்வம்மையாரின் மூக்கை அரிந்தார். அஃதறிந்த இவ்வரசர், தண்டனையை முறைப்படி

அன்றோ தரவேண்டும் என்று கூறி, மூக்கு முகர்வதற்கு எடுத்துத் தந்த கையையே முதலில் தடிதல் வேண்டும் என்று, தனது பட்டத்தரசியின் செங்கையை வளையலொடு துணித்தவர். இவரை வரலாற்று அறிஞர்கள் மூன்றாம் நந்திவர்மன் (கி.பி. 825-860) என்னும் அரசனாகக் கருதுகின்றனர்.

## 54. இடங் கழியார்:

சோழ நாட்டில், கொடும்பாளூரில், வேளூர் குலத்தில் தோன்றியவர். சிவனடியார்க்கு அமுதூட்டுதற்பொருட்டு இவர்தம் நெற்கூட்டுக் கொட்டகாரத்தில் நுழைந்து, இருளிற் களவு செய்யப் புகுந்த அன்பர் ஒருவர்க்கு நெற்பண்டாரமும், குறைவில் நிதிப் பண்டாரமும் மிகுதியாக முகந்து கொள்ள அளித்தருளியவர்.

## 55. செருத்துணையார்:

சோழ நாட்டில், மருகல் நாட்டுத் தஞ்சாவூரில், வேளாண் குலத்தில் தோன்றியவர். புகழ்ச் சோழரின் மனைவியாரை இறைவனுக்குரியமலரை முகர்ந்ததற்காக மூக்கரிந்தவர்.

## 56. புகழ்த்துணையார்:

சோழநாட்டில், செருவிலிபுத்தூரில், சிவமறையோர் குலத்தில் தோன்றியவர். நாட்டிற் பெரும் பஞ்சம் தோன்றிய போதும், இறைவனைக் குளிர் புனலும் மலரும் கொண்டு அர்ச்சித்தவர். பஞ்சத்தின் கொடுமையால் பலநாள் பட்டினி கிடந்து பசியால் வருந்திய இவர், திருமஞ்சனம் ஆட்டும்பொழுது குடத்தை இறைவன் மீதே தவறி வீழ்த்திவிட, இறைவன் இவர்க்கு நாடோறும் பீடத்தின்கீழ் ஒரு பொற்காசு அளித்து வரும்பேறு பெற்று, பலகாலும் வழிபட்டு உய்ந்தவர்.

## 57. கோட்புலியார்:

சோழநாட்டில், நாட்டியத்தான்குடியில், வேளாண்குலத்தில் தோன்றியவர். சோழர்களின் படைத்தலைவராய் விளங்கியவர். சிவபிரான் கோயில்களில் திருவமுது படி வழங்குவதற்காகத் தாம்



427/1--51

தொகுத்துக் கூடுகட்டி வைத்திருந்த நெல்லை எவரும் எடுத்தல் கூடாது என்று 'திருவிரையாக்கலி' ஆணை இட்டுப்போர் குறித்து வேற்று நாட்டிற்குச் சென்ற நிலையில், அதனை எடுத்து உண்ட குற்றத்திற்காகச் சுற்றத்தார்களைக் கொன்று தண்டித்தவர்.

## *58. பத்தராய்ப் பணிவார்:*

*சிவனடியார்களைக் கண்டால் குதூகலித்துக் கொண்டாடி மகிழ்ந்து பணி செய்பவர். சிவ வழிபாட்டில் மிக்க ஈடுபாடுடையவர். அன்பின் மிக்கவர். சிவ கதைகள் கேட்பவர். நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும், மன்றாடும் மலர்ப் பாதம் ஒரு காலும் மறவாதவர்.*

## *59. பரமனையே பாடுவார்:*

*தென் தமிழும் வடகலையும் தேசிகமும் பேசுபவர். மன்றினிடை நடம் புரியும் வள்ளலையே பொருளாக உள்ளுருகிப் பாடுபவர்.*

## *60. சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்:*

*அட்டாங்க யோகத்தில் இயமம் நியமம் ஆசனம் பிராணாயாமம் பிரத்தியாகாரம் என்னும் ஐந்தினையும் பயின்று, தாரணை என்ற யோக வழியில் குண்டலினி சத்தியைப் பிரணவத்தால் எழுப்பி, சுழுமுனை வழியாய் மேலே செலுத்திச் சிவபிரானை இடைவிடாது தியானிப்பவர்.*

## *61. திருவாரூர்ப் பிறந்தார்:*

*திருக்கயிலையில் வீற்றிருக்கும் சிவபெருமானின் சிவ கணங்களாய், திருவாரூரில் பிறக்கும் சிறந்த பேறு பெற்றவர்கள்.*

## *62. முப்போதும் திருமேனி தீண்டுவார்:*

*சிவாலயங்களில் சிவலிங்கத்தைக் கையால் தொட்டுக் காலை நண்பகல் மாலை என்னும் மூன்று வேளைகளிலும் அருச்சித்துப் பூசிக்கும் பேறு பெற்றவர்கள்.*

## 63. முழுநீறு பூசிய முனிவர்:

தரும சீலராய்த் தத்துவத்தின் நெறியுணர்ந்து, நீதியினிற் பிழையாமல் நெறி வழியே ஒழுகி, நித்திய நியமங்கள் கடைப்பிடித்து, விபூதியினை விரும்பிப் போற்றி அணிந்து, மும்மலங்களையும் அறுத்த தவ முனிவர்கள்.

## 64. அப்பாலும் அடிச்சார்ந்தார்:

மூவேந்தர் தமிழ்நாட்டுக்கு அப்பால் இறைவன் அடி சார்ந்தவர்களும், சுந்தரர் திருத்தொண்டத்தொகையில் போற்றிய தொண்டர்களின் காலத்திற்கு முன்னரும் பின்னரும் விளங்கியவர்களும் ஆகிய அடியவர்கள்.

## 65. பூசலார் நாயனார்:

தொண்டை நாட்டில், திருநின்றவூரில், மறையவர் குலத்தில் தோன்றியவர். இறைவனுக்குக் கோயில் கட்ட விரும்பிப் பொருளில்லாமையால் மனத்திலேயே அதனை முறைப்படி கட்டி வழிபட்டவர். இவர் மனத்தில் கட்டிய கோயிலின் கும்பாபிஷேக நிகழ்ச்சிக்காக, இராஜசிம்ம பல்லவன் (கி.பி. 666–705) காஞ்சியில் கட்டிய கயிலாச நாதர் கோயிற் கும்பாபிஷேகத்தை வேறொரு நாளைக்குத் தள்ளி வைத்துக் கொள்ளும்படி இறைவன் பணித்தருளினார்.

## 66. மங்கையர்க்கரசியார்:

மங்கையர்க்குத் தனி அரசி: எங்கள் தெய்வம்: வளவர் திருக் குலக் கொழுந்து: வளைக்கை மானி, தென்னர் குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை! நின்றசீர் நெடுமாறரின் மனைவியார். ஞான சம்பந்தரை மதுரைக்கு வரவழைத்துச் சைவத்தை வளர்த்தவர்.

## 67. நேச நாயனார்:

பெல்லாரி மாவட்டத்தில் உள்ள காம்பீலி என்னும் நகரத்தில், அறுவையர் குலத்தில் தோன்றியவர். ஆடையும் கீளும் கோவணமும் நெய்து அடியார்களுக்கு அளித்து அருள் பெற்றவர்.

## 68. கோச்செங்கட் சோழர்:

சோழர் குலத்தில் தோன்றியவர். தந்தை சுபதேவன். தாய் கமலவதி. முற்பிறப்பில் சிலந்தியாக இருந்து, திரு ஆனைக்கா இறைவனை வலைகட்டி வழிபட்ட புண்ணியத்தால் சோழ வேந்தராகத் தோன்றும் பேறு பெற்றவர். இவரை இவர்தம் தாயார் கருவுயிர்த்தபோது. 'ஒரு நாழிகை கழித்துப் பிறக்கு மேல் இப்பசுங்குழவி உலகம் ஒரு மூன்றும் அரசாளும்' எனக் கணியர்கள் கூற, அங்ஙனமே ஒரு நாழிகைவரை தடுத்துத் தாமதம் செய்து பெற்றெடுத்தபோது, குழந்தையின் கண்கள் சிவந்திருக்கக் கண்டு, தாயார் 'என் கோச்செங்கண்ணானோ' என்று கூறி வியந்து மகிழ்ந்ததனால், இவருக்குக் கோச்செங்கட் சோழன் என்று பெயர் வழங்கலாயிற்று. 'எண்டோள் ஈசற்கு எழில்மாடம் எழுபது செய்து உலகம் ஆண்டோன்' என்று திருமங்கையாழ்வார் இவரைப் பாராட்டியுள்ளார். முற்பிறப்பில் யானையால் நேர்ந்த இடையூறு கருதி, இவர் தாம் கட்டிய கோயில்களை யானை புகாத வாயில்களை உடைய மாடக் கோயில்களாகக் கட்டியருளினர்.

## 69. திருநீலகண்ட யாழ்ப்பாணர்:

சோழ நாட்டில் திருஎருக்கத்தம் புலியூரில், பாணர் குலத்தில் தோன்றியவர். திருஞான சம்பந்தரோடு நட்புக் கொண்டு, அவர்தம் திருப்பதிகங்களுக்கு யாழ் இசைத்தவர். மதுரை ஆலவாய்ப் பெருமான் அருள் பெற்றவர். அவரால் ஏறி அமர்ந்திருந்து பாடப் பலகையிடப் பெற்றவர். திருவாரூர் இறைவன் வடதிசையில் வேறு வாயில் வகுத்து அழைப்பச் சென்று, யாழிசைத்து மகிழ்வித்தவர். ஞானசம்பந்தர் திருமணத்தில் இறையருள் ஒளியிற் கலந்தவர்.

## 70. சடைய நாயனார்:

சுந்தரரின் தந்தையார். திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் வாழ்ந்தவர்.

## 71. இசை ஞானியார்:

சுந்தரரின் தாயார். சுந்தரர் தம்மைச் சடையன் புதல்வன் என்றும், இசை ஞானி சிறுவன் என்றும் பிறவாறும், ஆங்காங்கே, குறிப்பிட்டிருத்தல் காணலாம்.

## 72. சுந்தரர்:

திருக்கயிலையில் சிவபிரானுக்கு அணுக்கத் தொண்டராக, ஆலால சுந்தரர் என்னும் பெயர் பெற்று விளங்கியவர். உமாதேவியின் சேடியராகிய அநிந்திதை கமலினி என்பவரைக் காதலித்து, திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில், சடையனார் இசை ஞானியார் என்னும் தந்தை தாயர்க்கு மைந்தராகத் தோன்றினார். நரசிங்க முனையரையரால் வளர்க்கப்பெற்றார். இவரது திருமணத்தில் இறைவன் ஒரு முதிய வேதியராக வந்து இவரைத் தடுத்தாட்கொண்டார். திருவெண்ணெய் நல்லூரில், 'பித்தா பிறைசூடி' என்னும் பதிகம் பாடினார். திருவாரூரில் திருத்தொண்டத் தொகை பாடினார். அங்குப் பரவையாரை மணந்தார். குண்டையூர் கிழார் என்னும் அன்பர் இவருக்கு நெற் கொடுத்து வந்தார். திருக்கோளிலி இறைவனைப் பாடி அந்நெல் மலையைத் திருவாரூரில் சேர்ப்பிக்கச் செய்தார். நாட்டியத்தான் குடியில் வாழ்ந்த கோட்புலியாரின் மகளிராகிய சிங்கடி வனப் பகை என்னும் இருவரையும் தம் மக்களாக ஏற்றுக் கொண்டார். இறைவன் அளித்த பன்னீராயிரம் பொன்னைத் திருமுதுகுன்றில் ஆற்றில் இட்டுத் திருவாரூர் குளத்தில் எடுத்தார். திருக்குருகாவூரில் பொதி சோறும், திருக்கச்சூரில் பிச்சைச் சோறும் இறைவன் கொணர்ந்து தரப் பெற்றார். திருவொற்றியூரில் சங்கிலியை மணந்தார். திருவெண்பாக்கத்தில் ஊன்றுகோல் பெற்றார். சபதம் பொய்த்தமையால் இழந்த இடக்கண்ணைக் காஞ்சிபுரத்திலும், வலக்கண்ணைத் திருவாரூரிலும் பெற்றார். இறைவனைப் பரவையின் பால் தூது அனுப்பினார். ஏயர்கோன் கலிக்காமர், சோமாசி மாறர், சேரமான் பெருமாள் முதலியவர்களுடன் நட்புக் கொண்டார். திருப்புக்கொளியூர் அவிநாசியில் முதலை விழுங்கிய பிள்ளையை மீட்டார். திருவஞ்சைக் களத்தினின்று வெள்ளையானை ஏறித் திருக்கயிலை சென்றார்.

## மாணிக்க வாசகர்:

பாண்டி நாட்டில், திருவாதவூரில், ஆமாத்திய (ஆதி சைவ) அந்தணர் குலத்தில் தோன்றியவர். தந்தையார் சம்புபாதாசிரியர் எனவும், தாயார் சிவஞானவதி அம்மையார் எனவும் கூறுவர். வாதவூரர் என்பது இவர்தம் இயற்பெயர். பதினாறாம் அகவைக்குள், பலகலைகளையும் கற்றுத் தேர்ந்த இவரை, அரிமர்த்தனன் என்னும் பாண்டிய மன்னன், 'தென்னவன் பிரமராயன்' என்னும் பட்டம் வழங்கி, அமைச்சராக அமர்த்திக் கொண்டான். ஆயினும் இவர்தம் உள்ளம், ஞானாசிரியர் ஒருவரைத் தேடி அடைவதிலேயே மிகவும் நாட்டம் கொண்டிருந்தது. அரசனின் ஏவற்படி, குதிரைகள் வாங்கிவரச் சென்ற இவரை, இறைவன் திருப்பெருந்துறையில், குருந்த மர நிழலில், குருவாக எழுந்தருளி ஞானோபதேசம் செய்து ஆட்கொண்டருளினான். ஞானம் பெற்ற இவர் பாடிய தோத்திரப் பாடல்களைக் கேட்டருளிய இறைவன், இவருக்கு 'மாணிக்க வாசகர்' என்னும் பெயரை வழங்கியருளினான். குதிரை வாங்கத் தாம் கொணர்ந்த பொருளையெல்லாம் இவர், இறைவனுக்குக் கோயில் எடுத்தலில் செலவழித்து விட்டார். அரசன் அதுகேட்டுச் சினந்து ஓலை அனுப்பினான். ஆவணி மூல நாளில் குதிரைகள் வரும் என்று, இவர் இறைவனின் அருளைத் துணை கொண்டு, அரசனுக்கு மறுமொழி உய்த்தார். அன்று இறைவன் காட்டிலுள்ள நரிகளையெல்லாம் பரிகளாக்கிக் கொணர்ந்தான். அப்பரிகள் மீண்டும் நரிகளாக மாறி, மதுரை மாநகரை அலைக்கழித்து ஓடி மறைந்தன. அதனால், மீண்டும் பாண்டியன் மாணிக்கவாசகரைச் சினந்து வருத்தினான். இறைவன் வைகையாற்றில் வெள்ளம் பெருகச் செய்தார். பிட்டு வாணிச்சி ஆகிய வந்தி (செம்மனச் செல்வி) என்னும் தவமுதியாளின் பொருட்டு, இறைவன் மண் சுமந்தான், பிரம்படி பட்டான். பின்னர் அசரீரி ஒலியால், மாணிக்க வாசகரின் மாண்பைப் பாண்டியன் உணர்ந்து, தன் தவறுக்காக வருந்தினான். மாணிக்க வாசகர் அமைச்சுரிமை துறந்து, திருவுத்தரகோசமங்கை, தில்லை, திருவண்ணாமலை, திருக்கழுக்குன்றம் முதலிய பல தலங்களுக்குச் சென்று வழிபட்டார். தில்லையில் இறைவனின் திருவுளப்படி பௌத்தர்களை வாதில் வென்றார். ஊமைப் பெண்ணைப் பேசவைத்தார்.

தில்லையிலேயே தங்கித் திருவாசகம், திருக்கோவையார் என்னும் இரு பெரு நூல்களையும், இறைவனே அந்தணனாக வந்து வேண்டிக் கொள்ள, எழுதிக் கொள்ளும்படி திருவாய் மலர்ந்தார். அவற்றிற்குப் பொருளறிய விரும்பிய தில்லைவாழ் அந்தணர்களுக்கு. நடராஜப் பெருமானையே காட்டி, இவரே பொருள் என்று சொல்லி, அருள் ஒளியில் கலந்து இறைவனைச் சேர்ந்தார்.

*(குறிப்பு:*-சுந்தரமூர்த்தி நாயனார் பெரியபுராணம் ஆகிய காப்பியத் தலைவர். தில்லைவாழ் அந்தணர், பொய்யடிமை இல்லாத புலவர். பத்தராய்ப் பணிவார். பரமனையே பாடுவார் சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார், திருவாரூர்ப் பிறந்தார். எப்போதும் திருமேனி தீண்டுவார். திருநீறு பூசிய முனிவர் அப்பாலும் அடிச்சார்ந்தார் ஆகிய ஒன்பதின்மரும் 'தொகையடியார்' எனப்படுவர்.

மாணிக்கவாசகர் அறுபத்து மூவர்களுள் ஒருவர் அல்லர் எனினும், திருமயிலைக் கபாலீச்சரர் அறுபத்து மூவர் திருவிழாவில் திருவுலா எழுந்தருளச் செய்யப் பெறுதல் பற்றி; இங்கு அவரைப் பற்றிய சிறு குறிப்பும் சேர்க்கப்பெற்றது.)

*மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்*
*கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரம் அமர்ந்தான்*
*ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்கு*
*அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்.*

–திருஞானசம்பந்தர்

*பல்லாடு தலைசடைமே லுடையான் தன்னைப்*
*பாய்புலித்தோ லுடையானைப் பகவன் தன்னைச்*
*சொல்லோடு பொருளனைத்து மானான் தன்னைச்*
*சுடருருவில் என்பறாக் கோலத் தானை*
*அல்லாத காலனைமுன் னடர்த்தான் தன்னை*
*ஆலின்கீழ் இருந்தானை அமுதானானைக்*
*கல்லாடை புனைந்தருளுங் காபா லியைக்*
*கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே.*

–திருநாவுக்கரசர்

மண்ணினில் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவு கண்டு ஆர்தல்
உண்மையாம் எனில் உலகர்முன் வருகென உரைப்பார்.

----சேக்கிழார்

